

விஜய்குமார் ஜெயராஜ்

# மனுக்குலத்தின் மாபெரும் எதிரி

பாபிலோனே, உனக்குக் கண்ணியை வைத்தேன், நீ அதை அறியாமல் அதிலே சிக்குண்டுபோனாய்; நீ அகப்பட்டும் பிடிபட்டும் போனாய், நீ கர்த்தரோடே யுத்தங்கலந்தாயே.

எரேமியா 50:24

**தன் வேசித்தனங்களினால் ஜாதிகளையும், தன் சூனியங்களினால் வம்சங்களையும் விற்கிற மகா சூனியக்காரியும் ரூபவதியுமாயிருக்கிற வேசியினுடைய திரளான வேசித்தனங்களினிமித்தம்,**

**இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிர்வாணத்தையும், ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண்ணி,**

**உன்மேல் தீட்டானவைகளை எறிந்து, உன்னைக் கனவீனப்படுத்தி, உன்னை வேடிக்கையாக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

**நாகூம் 3:4-6**

# இப்புத்தக ஆசிரியரின் விசுவாசம்

**அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம்**

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்

அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்: மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்: பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன், பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவ மன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

**நிசேயா விசுவாசப் பிரமாணம்**

வானத்தையும் பூமியையும் காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர், பிதாவோடே ஒரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனிதனானார்; நமக்காக பொந்தியுபிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்; வேத வாக்கியங்களின் படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும்கூட தொழுது தோத்தரிக்கப்படுகிறவருமாய், தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப்போஸ்தல திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்.

## ஆசிரியர் குறிப்பு

கர்த்தருடைய வேதம் குறைவற்றது, அது என்றுமே மாறாதது. எனவே அது ஒருபோதும் update ஆவதில்லை. உலகங்கள் தோன்றுவதற்கு முன்பு இருந்து, வானமும் பூமியும் ஒழிந்துபோன பின்பும் மாறாமல் நிலைத்திருக்கும் பொக்கிஷமே கர்த்தருடைய வேதம் ஆகும். ஆனால் சத்தியத்தைக் குறித்த நம்முடைய புரிதல் குறைவுள்ளது அல்லவா? அது நாளுக்கு நாள் update ஆகித்தான் ஆகவேண்டும். இந்தப் புத்தகம் **செழிப்பு உபதேசம் 2.0** என்ற தலைப்பில் ஏற்கனவே வெளியிடப்பட்டது. ஆனால் பலரும் இந்த தலைப்பை தவறாக புரிந்துகொண்டபடியால் இது அநேகர் கரங்களுக்குப் போய்ச் சேரவில்லை. எனவே புதிய மற்றும் பொருத்தமான தலைப்பில் இப்புத்தகம் இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது.



ஃபேஸ்புக்கில் வெறும் மூன்று அத்தியாயங்களாக வெளியிடலாம் என்று நினைத்து ஆரம்பித்த கட்டுரைத்தொடர் இன்று ஒரு புத்தகமாய் வளர்ந்து நிற்கிறது. இந்த தொடரை எழுதிக்கொண்டிருந்தபோது ஒவ்வொரு கட்டுரைகளையும் வெறும் 20 முதல் 25 பேர்தான் தொடர்ந்து வாசித்திருப்பார்கள். ஆனாலும் இதில் சொல்லப்படும் கருத்துக்கள் கடைசிகால கிறிஸ்தவத்துக்கு மிக மிக மிக மிக அவசியமான செய்தியாக இருப்பதை ஆவியில் உணர்ந்ததால், ஆவியானவரது ஒத்தாசையோடு முழு தொடரையும் எழுதி முடித்தேன். அதுதான் இப்பொழுது ஒரு புத்தகமாக உங்கள் கைகளில் தவழுகிறது.

உண்மையைச் சொல்லப்போனால் இந்தப் புத்தகத்தை கட்டுரைத் தொடராக ஃபேஸ்புக்கில் எழுத ஆரம்பித்த பொழுது இந்நூலில் உள்ள மொத்த விஷயங்களில் 40% மட்டுமே எனக்குத் தெரியும். மீதமுள்ள 60% இந்தத் தொடரை எழுதிக்கொண்டிருக்கும்பொழுதே கற்றுக்கொண்டது. ஆவியானவர் எவ்வளவு அற்புதமான ஆசிரியர் என்பதை ருசித்து அறிந்துகொள்ள இந்த புத்தகம் எழுதிய அனுபவம் எனக்கு உதவியது. ஒட்டுமொத்த துதியும், கனமும், மகிமையும் அவருக்கே உரித்தாவதாக!

இந்த நூலில் நாம் செழிப்பைப் பற்றி தியானிக்கப்போகிறோம். ஆனால் எந்தவிதமான செழிப்பைப் பற்றிப் பேசப்போகிறோம்? நீங்கள் மல்ட்டி பில்லினியர் ஆகப்போகிறீர்கள், நியூயார்க் நகரில் ஒரு பெரிய பங்களாவை விலைக்கு வாங்கபோகிறீர்கள், ரோல்ஸ் ராய்ஸ் காரில் வலம் வரப்போகிறீர்கள் என்பது போன்ற தனிமனித செழிப்பைப் பற்றி இங்கு பேசப்போவதில்லை. ஆனால் அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமான பொருளாதாரச் செழிப்பைப் பற்றியும், ஆளுமை, அதிகாரத்தைப் பற்றியும் பேசப்போகிறோம்.

இன்றைய செழிப்பு உபதேசங்களின் பொதுவான புரிதல் என்னவென்றால் சபையில் உள்ள தனிமனிதர்கள் பணக்காரர்களானால் ஒட்டுமொத்த சர்வாங்க சபையும் செழிப்பாகிவிடும் என்பதுதான். எனவே தனிமனிதர்களை செழிப்பை விசுவாசிக்கும்படியும், பணக்காரராகும்படியும் உற்சாகப்படுத்துகிறார்கள். அது ஒருபோதும் பலன் தராது, மாறாக சரியாக உபதேசிக்கப்படாவிட்டால் அந்த விசுவாசிகள் பொருளாசையில் விழவும், கர்த்தரை விட்டுவிட்டு பணத்தை சார்ந்துகொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. உண்மையான செழிப்பு என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

நீங்கள் வேலைக்கான இண்டர்வியூவில் பங்குபெற்ற அனுபவம் உள்ளவரானால், உங்களை நேர்முகத் தேர்வு செய்யும் அலுவலவர்கள் உங்களிடம் இவ்விதம் சொல்லக் கேட்டிருப்பீர்கள். “இது ஒரு வளரும் நிறுவனம், இந்த நிறுவனம் வளரும்போது நீங்களும் வளர்வீர்கள்”. ஆம், எக்ளீஷியா எனும் சபையானது ஒரே சரீரம் ஆகும். சர்வாங்க சபை செழிப்பில் வளரும்போது அதன் அங்கமான ஒவ்வொரு விசுவாசியும் செழிப்பில் தானாகவே வளர்வார்கள். இதுதான் வேதத்தின் பிரகாரமான சரியான வளர்ச்சி. ஆனால் நாமோ எதிர்திசையில் ஓடிக்கொண்டிருக்கிறோம்.

இப்படி எதிர்திசையில் ஓடும்போது, அதாவது தனிமனிதர்கள் பணக்காரர்களாவதை மையப்படுத்தும் செழிப்பு உபதேசத்தைப் பேசும்பொழுது, அதற்கு எதிராக உள்ளதுபோல தோன்றும் பல வேதவசனங்களோடு இயல்பாகவே ஒரு உரசல் ஏற்படுகிறது. அந்த உரசலை சரிசெய்ய அவற்றிற்கு செழிப்பு பிரசங்கியார்கள் கொடுக்கும் விளக்கங்கள் பெரும்பாலான நேரங்களில் மேற்பூச்சு பூசுவதுபோல இருப்பதால் அவற்றை உளமாற ஏற்றுக்கொள்ளமுடிவதில்லை. இது பட்டி டிங்கரிங் வேலை என்று அப்பட்டமாகவே தெரிந்துவிடுகிறது.

அதே நேரத்தில் அதற்கு நேர் எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள் “இல்லை, இல்லை..இது கள்ள உபதேசம், பாருங்கள் வேதம் அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொல்கிறது!” என்று சொல்லி ஒருகூட்ட மக்களைச் சேர்த்துக்கொண்டு, எதிர் ஓரத்துக்கு ஓடி தரித்திரத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். மொத்தத்தில் சபை எனும் சரீரத்தைப் பார்க்கும்பொழுது அது சீரற்ற வளர்ச்சிகொண்டதாக காணப்படுகிறது.

இங்கு செழிப்பு உபதேசத்தில் பிரச்சனை இல்லை, யார் மையம் என்பதில்தான் பிரச்சனை. நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக இருந்தால் கிறிஸ்துதான் மையமே தவிர, நீங்கள் அல்ல. சரீரம் மொத்தமாக வளரும்பொழுது அங்கங்களும் சேர்ந்து சீராக வளரவேண்டும் இதுதான் சரியான வளர்ச்சி.

அதற்கு முதல் தேவை ஏக சிந்தை! விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்(அப் 4:32) என்று வேதம் சொல்லுகிறது. ஒரு கூட்டத்தார் செழிப்பு என்றால் உற்சாகமடைகிறார்கள், இன்னொரு கூட்டத்தார் செழிப்பு என்றால் கல்லைக் கையில் எடுக்கிறார்கள் என்றால் நமக்கு முதலில் தேவையானது ஏகசிந்தைதான். குழப்பமும், தாறுமாறும் பாபிலோனின் சுபாவம். ஏகசிந்தைதான் எருசலேமின் சுபாவம்! பிலிப்பியர் 4:2-இல் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க பவுல் சொன்ன புத்திமதி எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் மட்டுமல்ல, நமக்கும்தான்.

சபைக்குள் குழப்பத்துக்கும் தாறுமாறுகளுக்கும் என்ன காரணம்? உபதேச மாறுபாடுகள்தான். அதே உபதேசம்தான் நம்மை ஒன்றாகவும் சேர்க்கும். தரித்திரம் என்பது தேவசித்தமல்ல என்பதை முதலாவது தெளிவுபடுத்துவதுடன், எந்தவிதமான செழிப்பு தேவனுக்கு சித்தமானது, சரியானது என்பதை இந்தப் புத்தகம் ஆராய்கிறது.

வேதத்தில் பல இடங்களில் தேவபிள்ளைகளுக்கு பொருளாதார ஆசீர்வாதம் தொடர்பான வாக்குத்தத்தங்களை தேவன் வாரி வழங்குகிறார். வேறு சில இடங்களில் உலகப்பொருளை பிசாசோடு ஒப்பிடுகிறார், பொருளைச் சேர்க்கும் நோக்கத்தை கடுமையாக சாடுகிறார். செழிப்பைப் பிரசங்கிப்பவர்களுக்கு சாதகமாகவும் வேதத்தில் ஏராளமான வசனங்கள் உள்ளன. செழிப்புக்கு எதிராக பிரசங்கிப்பவர்களுக்கு சாதகமாகவும் ஏராளமான வசனங்கள் வேதத்தில் உள்ளன. கடைசியில் பழைய ஏற்பாடு என்றால் உலகப்பிரகாரமான ஆசீர்வாதம், புதிய ஏற்பாடு என்றால் ஆவிக்குரிய ஆசீர்வாதம் மட்டுமே என்ற முடிவுக்குப் பலர் வந்துவிட்டனர். ஆனால் அது சரியான புரிதல் அல்ல.

செழிப்பைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் முதலாவதாக இந்த உலகத்தில் செயல்படும் பொருளாதாரக் கட்டமைப்பைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டும். இந்த உலகக் கட்டமைப்பையும், அதற்குப் பின்பாக செயல்படும் ஆவிகளைப் பற்றியும் தெரிந்துகொண்டால் ஏன் சில இடங்களில் வேதம் பொருளாதாரச் செழிப்புக்கு ஆதரவாகவும், சில இடங்களில் எதிராகவும் பேசுகிறது என்பதைக் குறித்த புரிதல் நமக்கு தானாகவே ஏற்பட்டுவிடும்.

அந்தப் புரிதல் ஏற்படுத்தும் முயற்சியைத்தான் இந்தப்புத்தகத்தில் ஆவியானவர் துணையோடு செய்திருக்கிறேன். இப்புத்தகத்தைப் படித்து முடித்தபின்னர் செழிப்புக்கு ஆதரவான கருத்தைக் கொண்டிருப்பவர்களும் இப்புத்தகத்தில் உள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்வார்கள். பொருளாதாரச் செழிப்புக்கு எதிரான மனநிலை கொண்டவர்களும் இப்புத்தகத்தில் உள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்த உலகக் கட்டமைப்பு பற்றியும், அதற்குப் பின்பாக செயல்படும் துரைத்தன ஆவிகள் பற்றியும் இந்தப் புத்தகத்தில் வெகு விலாவாரியாக ஆராயப்போகிறோம்.

இந்த உலகக் கட்டமைப்புக்குப் பின்பாக உள்ள ஆவிகளைப் பற்றி ஆழமாக போதித்ததன் நோக்கம் இந்த ஆவிகளின் செயல்பாடுகளை நீங்கள் அன்றாட வாழ்வில் காணும்போது நீங்கள் அவைகளை இனங்கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். அப்பொழுது ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் உங்களுக்குள் செயல்பட ஆரம்பிக்கும்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! வாருங்கள் புதியதோர் ஆவிக்குரிய அனுபவத்துக்குள் பயணிப்போம்!

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரன்
விஜய்குமார் ஜெயராஜ்
www.brovijay.com

## மனுக்குலத்தின் மாபெரும் எதிரி

## அத்தியாயம் 1: நம்மைக் குறித்த தேவதிட்டம் என்ன?

ஏன் ஆசீர்வாதங்களைப் போதிக்கும் சபைகளில் கூட்டம் குவிகிறது, பாவம், நரகம், நியாயத்தீர்ப்பு என்று பேசும் சபைகளில் கூட்டம் மிகமிக குறைவாக இருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்ததுண்டா?

உலகப் பொருளின் பின்னால் போவது எவ்வளவு ஆபத்து என்பது பற்றி வேதம் தெளிவாக பதிவு செய்து வைத்திருக்கிறது. அந்த வசனங்களையெல்லாம் வாசித்துவிட்டு உலக ஆசீர்வாதங்களைப் பேசும் சபைகளில் குவியும் மக்களைப் பார்க்கும்போது அவர்களெல்லோரும் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்ற எண்ணமே நமக்கு உண்டாகும் என்பதில் ஐயமில்லை. எனவே ஆசீர்வாதங்களை விரும்புவது விழுந்துபோன மனிதனின் அடையாளம் என்றே பலரும் நினைக்கிறார்கள். ஆனால் இது விழுந்துபோன மனிதனின் அடையாளம் அல்ல, விழுந்துபோன மனிதனுக்குள் தேவசாயல் இன்னும் கொஞ்சமாவது மிச்சமிருக்கின்றது என்பதற்கான அடையாளம் என்கிறேன். இதை வாசிக்கும்போது உங்களில் பலருக்கு 'பகீர்' என்றிருக்கும்... பதட்டமடையாமல் தொடர்ந்து வாசியுங்கள்.

எந்த ஒரு மென்பொருளும் அது எப்படி coding செய்யப்பட்டிருக்கிறதோ அப்படித்தான் இயங்கும். மனிதன் ஏதேன் தோட்டத்தில் எப்படி வாழவேண்டும் என்று தேவன் விரும்பினாரோ அப்படியே அவனது மரபணுவை அவர் வடிவமைத்தார். ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும், எப்படி இயங்க வேண்டும் என்கிற தகவல்களெல்லாம் அவனது மரபணுக்களில் ஒரு computer coding போல எழுதப்பட்டுள்ளது. மனிதனுக்குள் நியூக்கிளியோட்டைடுகளின் வரிசையாக கட்டமைக்கப்பட்டிருக்கும் அந்த மரபுக் குறியீட்டை மனித புரிதலுக்கேற்ப தமிழில் decode செய்து பார்த்தால் அது கீழ்கண்டவாறு வரும்.

நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் (ஆதி 1:28)

விழுகைக்கு முந்திய காலத்தில் மனிதன் ஏதேனில் மிகுந்த சமாதானத்தோடும், செழிப்போடும், ஐக்கியத்தோடும், பெருகி உலகெல்லாம் பரவி வாழவேண்டும் என்கிற தேவதிட்டம் அவனது மரபணுக்களுக்குள் programme செய்யப்பட்டிருந்தது. சாத்தான் எப்படியோ பொய் சொல்லி ஏவாளை ஏமாற்றி மனிதகுலத்தை மீறுதலுக்கு உட்படுத்திவிட்டான். வெற்றி மமதையில் இருந்த அவனைப் பார்த்து சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் நகைத்திருக்கக் கூடும். ஏனென்றால் அதற்குப் பிறகுதான் அவனுக்கு பெரும் சவாலே காத்திருந்தது. மனிதன் பாவத்துக்கு உட்பட்டாலும் அவனுக்குள் செய்யப்பட்டிருந்த genitic programming அப்படியேதான் இருந்தது. அதை சாத்தானால் re-programming செய்ய முடியாது.

சற்று கற்பனை செய்து பாருங்கள், மனிதனின் மரபணுக்களை சாத்தானால் re-programming செய்ய முடிந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? மனிதர்கள் டிராகுலாக்களாக மாறியிருப்பார்கள்.

ஸ்திரீயின் வித்தாகிய கர்த்தர் இயேசு வெளிப்பட்டிருக்கவே முடிந்திருக்காது. ஆனால் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன்போல பிசாசு இன்றுவரை மனித டி.என்.ஏவை re-programming செய்து புதியதோர் இனத்தை உருவாக்கும் முயற்சியை மனிதர்களைப் பயன்படுத்தியே செய்துகொண்டுதான் இருக்கிறான்.

பிசாசுக்கு இருக்கும் மிகப்பெரிய சிக்கல் என்னவென்றால் இனப்பெருக்கத்துக்கு ஆதாரமான பாலியல் ஆசை என்பது தேவனால் மனிதனுக்குள் programme செய்யப்பட்டிருந்தது. DRD4 என்ற மரபணுவே பாலியல் ஆசைக்கு காரணம் என்று சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த மரபணுவை மனித உடலில் இருந்து நீக்கிவிட்டால் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுவிடும். ஆனால் இன்றுவரை பிசாசானவனால் அதைச் செய்ய முடியவில்லை. அவனால் தேவசாயலில் மனிதப் பிரதிகள் உருவாகிக்கொண்டே இருப்பதை தடுக்கமுடியவில்லை. ஆனால் அவனால் ஒன்று செய்யமுடியும்  சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றி மனிதனைக் கறைப்படுத்த முடியும். அல்லது உலகத்தின் சிஸ்டத்தை கடினமாக்கி குழந்தை பிறந்தால் வளர்ப்பது கஷ்டம் என்ற சூழலை உருவாக்கி குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்த முடியும், அல்லது உணவிலோ மருந்திலோ கலப்படம் செய்து மனிதனுடைய உயிரணுக்களின் வீரியத்தைக் குறைத்து பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த முடியும்.  அதைத்தான் அவன் இன்றுவரை செய்து வருகிறான்.

அநேக கிறிஸ்தவர்கள் நினைப்பதுபோல பாலியல் ஆசை என்பது பிசாசின் திட்டத்துக்கு ஆதரவானதல்ல, தேவ திட்டத்து ஆதரவானது. அதனால்தான் விவாக மஞ்சம் கனமுள்ளது, பரிசுத்தமானது என்று எபிரெயர் 13:4 சொல்லுகிறது. விவாக மஞ்சத்தை தீட்டுப்படுத்தக்கூடாது என்ற எச்சரிக்கையும் அதே வசனத்தில் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இன்றும் மனிதர்கள் செல்வத்தைத் தேடியும், சமாதானத்தைத் தேடியும், உறவுகளைத் தேடியும் அலைவது பிசாசின் விருப்பமல்ல. ஆனால் அவற்றையெல்லாம் செய்யும்படி மனிதனின் மரபணுவுக்குள் புரோகிராம் செய்யப்பட்டிருக்கும் தேவதிட்டம் மனிதனைத் தூண்டுகிறது. சுபாவப்படியான தேடலை திசைமாற்றி பாவமான வழிகளில் அவற்றை அடையும்படி மனிதனை வஞ்சிக்க பிசாசானவனால் முடியுமே தவிர, அந்தத் தேடலை மனிதனிடமிருந்து அவனால் நீக்கவே முடியாது. ஆனால் அந்த விருப்பங்களை மனிதனிடமிருந்து நீக்குவதே பிசாசின் விருப்பம். ஆனால் அதைச் செய்வதற்கான தொழில்நுட்பம் அவன் கைகளில் இல்லை.

எனவேதான் தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்ற பிரசங்கங்களை வஞ்சிக்கும் கள்ளப்பிரசங்கம் என்று வேதம் கடுமையாகச் சாடுகிறது (கொலொசேயர் 2:21). எல்லாவற்றையும் துறந்துவிட்டு ஓடும் சந்நியாச வாழ்க்கையை வேதம் ஒருபோதும் அங்கீகரித்ததில்லை.தரித்திர உபதேசமும், சந்நியாச வாழ்க்கையும் நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்ற தேவதிட்டத்துக்கும், மரபணுவுக்குள் கட்டமைக்கப்பட்ட மனித சுபாவத்துக்கும்  எதிரானது.

ஆகவேதான் சுபாவப்படியான தேடலாகிய பொருளாதாரச் செழிப்பு, சரீர சுகம், ஆளுகை என்று எந்த சபையில் பேசுகிறார்களோ அங்கே மக்கள் குவிகிறார்கள்.

சரி, அப்படியானால் பரிசுத்தமும், நீதியும்கூட தேவசாயல்தானே? அதையும் சுபாவப்படி மனிதன் தேடித்தானே ஆகவேண்டும். அதன்படி பார்த்தால் பரிசுத்தத்தையும், நீதியையும் போதிக்கும் சபைகளிலும் மக்கள் குவிந்திருக்க வேண்டுமே, ஏன் அப்படி நடக்கவில்லை என்ற கேள்வி இந்நேரத்தில் உங்களுக்கு உருவாகியிருக்குமானால் அதற்கு பதிலளிக்கும் முன்பதாக உங்கள் புத்திக் கூர்மைக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். ஏனெனில் கேள்வி கேட்பதே அறிவுத் தேடலில் முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும்.

பரிசுத்தம், நீதி என்பவைவைகளுக்கான தேடல் மனிதனுக்குள் இயற்கையாகவே இருக்கிறதா?

மற்ற தேடல்களைவிட மனிதனிடம் பரிசுத்தம் மற்றும் நீதிக்கான தேடல் அதிகமாகவே இருக்கிறது. அந்தத் தேடலை திசைதிருப்ப உருவாக்கப்பட்டதுதான் “மதம்” என்ற போதை. ஒரு கம்பியூட்டரில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் திரையில் பளீரென்று, beep சத்தத்துடன் ஒரு Error Message வருகிறதல்லவா? அந்த Error Message எங்கோ கம்பியூட்டருக்கு வெளியே இருந்து வருவதில்லை. ஏதேனும் தவறு ஏற்பட்டால் Error Message-ஐ காட்டி எச்சரிப்பதற்கென்று கம்பியூட்டருக்குள்ளேயே அந்த கட்டமைப்பு வசதி செய்து வைக்கப்பட்டுள்ளது. அதேவிதமாக மனிதனுக்குள் செய்யப்பட்டிருக்கும் கட்டமைப்புதான் “மனசாட்சி” என்பது. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் மனித மூளையில் உள்ள lateral frontal pole prefrontal cortex என்ற பகுதிதான் மனசாட்சியாக செயல்படுகிறது என்பதை கண்டறிந்து உலகத்துக்கு அறிவித்துள்ளனர்.

பாவம் செய்துவிட்டு அந்த மனசாட்சியை ஆற்றுப்படுத்த, பாவ மன்னிப்பைப் பெற மனிதன் படும் பாடு இருக்கிறதே அதைச் சொல்லி முடியாது. மனசாட்சியை ஆற்றுப்படுத்த தன்னைத்தானே உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்திக் கொள்வதில் எந்த எல்லைக்கும் மனிதன் செல்லத் தயாராக இருக்கிறான். புனித வெள்ளிக்கிழமையன்று பிலிப்பைன்ஸ் தேசத்தில் தன்னைத் தானே சிலுவையில் அறைந்து துன்புறுத்திக் கொள்ளும் கிறிஸ்தவர்களைக் குறித்து செய்தித்தாளில் வாசித்திருக்கிறீர்களா? ரூபன் எனாஜே என்ற ஒரு மனிதன் கடந்த 2019-வரை மட்டும் தன்னை 33 முறை சிலுவையில் அறைந்துகொண்டதாக தெரிவித்திருக்கிறார். இவையெல்லாம் எதற்கு?

மனிதன் பரிசுத்தமாக வாழும்படிக்கே வடிவமைக்கப்பட்டு இருக்கிறான். தான் கறைப்பட்டதாக உணரும்போதோ அந்தக் கறையை கழுவுவதற்காக தன்னைத் தானே கடுமையாக வருத்திக் கொள்கிறான். ஆனால் பிசாசைப் பாருங்கள், அவன் பாவத்தின் மொத்த உருவமாக இருந்தாலும் அவனுக்கு மனந்திரும்ப வேண்டும் என்ற எண்ணமோ, தன்னை சுத்திகரித்துக்கொள்ள வேண்டும் என்கிற ஆசையோ வரவே வராது. மனிதனுக்குத்தான் அந்த எண்ணங்கள் இருக்கும் ஏனென்றால் ஒரு மனிதன் தன்னைப் படைத்தவரைப் போலவே பரிசுத்தமாக, நீதியாக வாழவேண்டும் என்கிற கட்டளைகளெல்லாம் அவனது மரபணுக்களில் ஒரு computer coding போல எழுதப்பட்டுள்ளது.

நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் (ஆதியாகமம் 1:26)

எனவே மனிதனுக்கு பரிசுத்தத்தின் மேல், நீதியின்மேல் வாஞ்சையில்லை என்ற வாதங்களெல்லாம் ஏற்புடையவை அல்ல. பரிசுத்தம் மற்றும் நீதியை அடைவதற்கான வழிகளை அறியாமல் இருக்கிறார்கள், அல்லது அதற்கான சரியான வழியை  புறக்கணித்துவிட்டு வேறு வழிகளில் தேடுகிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். மனிதன் தன்னை வருத்தியேனும், தன்னிடமுள்ள செல்வங்களை வாரிக்கொடுத்தேனும் மனசாட்சியை ஆற்றுப்படுத்த தவியாய் தவிக்கிறான் என்பதற்கு உலகம் முழுவதும் இருக்கும் பல்வேறு மத வழிபாட்டுத் தலங்கள் சாட்சியாய் நிற்கின்றன.

ஆனால் உண்மையில் பாவத்தின் விளைவாக மனிதன் தேவனுக்கு incompatible ஆக மாறிவிட்டான். தேவசாயல் இன்னும் உள்ளே இருப்பதன் விளைவாக பிசாசுக்கும் incompatible ஆக இருக்கிறான், ஆக மொத்தத்தில் ரெண்டும்கெட்டானாக மாறிவிட்டான். மாம்சம், ஆவி என்ற இரண்டும் அவனுக்குள்ளேயே ஒன்றுக்கொன்று போராடிக் கொண்டிருப்பதால் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கிறான். அவனை பிசாசுக்கு முற்றிலும் compatible ஆக மாற்ற world system அவன் மாம்சத்தோடு கூட்டணி அமைத்துப் போராடிக் கொண்டிருக்கிறது. அவனை தேவனுக்கு முற்றிலும் compatible ஆக மாற்ற சுவிசேஷம் அவன் ஆவியோடு கூட்டணி அமைத்துப் போராடிக்கொண்டிருக்கிறது.

தனது பாவங்களுக்கு ஒட்டுமொத்த பிராயச்சித்தம் வேண்டும் என்ற அங்கலாய்ப்பு ஒவ்வொரு மனித ஆழ்மனதினுள்ளும் நெருப்பாக பற்றியெரிந்துகொண்டிருக்கிறது. அந்த அங்கலாய்ப்புக்கு விடையாகத்தான் வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து  மாம்சமாகி பூமிக்கு இறங்கி வந்தார். அவரது கையில்தான் “சுவிசேஷம்” என்ற மீட்புக்கான சாவி இருந்தது. அதனால்தான் அவர் பூமியில் உதித்த தினத்தன்று ஒரு தேவதூதன் வந்திறங்கி,  ”இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் (லூக்கா 2:11) என்று அறிவித்தான். யூதர்கள் மட்டும்தானே தங்களுக்கு இரட்சகரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் தேவதூதனோ “யூத ஜனங்களுக்கு நற்செய்தி” என்று சொல்லாமல் “எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி” என்று சொன்னதன் காரணத்தை ஆராய்ந்து பாருங்கள்.

எல்லாம் சரிதான், ஆனாலும் பாவத்தைக் குறித்து அதிகமாக கண்டித்து உணர்த்தும் சபைகளில் ஏன் கூட்டமில்லை என்ற கேள்விக்கான பதிலை ஆராயலாம்.

பிரச்சனை மக்களிடத்தில் அல்ல, அந்த சபைகளிடத்தில்தான் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

ஒரு பணக்கார வீட்டில் ஒருநாள் திருடன் புகுந்து பணம், நகை, விலையுயர்ந்த சாதனங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அத்தனையையும் திருடிச் சென்றுவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். பொருட்களை பறிகொடுத்த வீட்டார் காவல்நிலையத்துக்குச் செல்லுகிறார்கள்.

அந்த காவல்துறை அதிகாரி இவர்களை வித்தியாசமாக நடத்துகிறார், அதாவது தன் சொந்த உடைமைகளை இழந்த உரிமையாளர்கள் என்ற ரீதியில் அவர்களைப் பார்க்காமல். வாழ வழியற்ற

பிச்சைக்காரர்கள் என்ற கோணத்தில் அவர்களைப் பார்த்து அவர்களுக்கு எது தேவை என்று இவரே முடிவு செய்கிறார்.

திருடன் திருடிச் சென்றது அவ்வளவுதான் இனி அவற்றையெல்லாம் நினைத்துக் கூடப் பார்க்காதீர்கள். நீங்கள் இழந்த ஆவணங்களை வேண்டுமானால் உங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி சில நாட்கள் கழித்து சில ஆவணங்களைக் கொண்டு வந்து அவர்களிடம் கொடுக்கிறார்.

சரி பரவாயில்லை திருட்டு போன ஆவணமாவது கிடைத்ததே என்று வீட்டுக்கு வந்து பிரித்துப் பார்த்தால் அவை திருட்டுப்போன அதே ஆவணங்கள் அல்ல, அவை போன்றே உருவாக்கப்பட்டவை. அவர்கள் மீது உள்ள பரிதாபத்தில் அந்த அதிகாரியே அந்தப் ஆவணங்களை தாமாக உருவாக்கி கொடுத்திருக்கிறார். ஆனால் அவை அதிகாரபூர்வமானவை அல்ல, எந்த அரசு அலுவலகத்திலும் அது செல்லாது.

கதை கொஞ்சம் இயல்பு வாழ்க்கைக்கு பொருந்தாத கற்பனையாகத் தோன்றினாலும் அந்த அதிகாரி செய்த அதே வேலையைத்தான் இன்று சில சபைகள் செய்கின்றன. ஏதேனில் மனிதன் தேவனோடு இருந்த ஐக்கியத்தையும், தனது பரிசுத்தத்தை மட்டும் இழக்கவில்லை, தனது நித்திய ஜீவனை இழந்தான், நிறைவான வாழ்க்கையை இழந்தான், சமாதானத்தை இழந்தான், இளைப்பாறுதலை இழந்தான், ஆரோக்கியத்தை இழந்தான், பூமியின் மீது இருந்த உரிமையை இழந்தான், ஆளுகையை இழந்தான், மகிழ்ச்சியை இழந்தான், எதிர்கால நம்பிக்கையை இழந்தான் அனைத்தையும் இழந்தான். சர்வ சிருஷ்டியும் அதன் விளைவாக மாயைக்குள் பிரவேசித்தது (ரோமர் 8:21).

இவர்கள் உனக்கு தேவனோடு இருக்கிற ஐக்கியமும், பரிசுத்தமுமே முக்கியம். எனவே அவற்றை மட்டும் உனக்குத் திருப்பித்தருகிறோம் என்கிறார்கள். தேவனோடு உள்ள ஐக்கியமும், பரிசுத்தமும் மகா முக்கியமானவைகள் என்பதிலும், லிஸ்ட்டில் முதலிடத்தில் இருப்பவை என்பதிலும் மாற்றுக்கருத்து இல்லை. அதை மட்டும் பெற்றுத்தந்தால்கூட போதுமானதுதான், ஏனெனில் அதைப் பெற்றுக் கொண்டால் ஏனையவை அனைத்தும் தானே வந்து சேர்ந்துவிடும்.

ஆனால் இவர்களோ தேவனிடத்தில் திருப்புகிறேன், பரிசுத்தமாக்குகிறேன் என்று சொல்லி கிரியைகளால் உண்டாகும் நியாயப்பிரமாண நீதியையே பிரசங்கிக்கிறார்களேயன்றி புதிய உடன்படிக்கையின் கிறிஸ்துவினால் உண்டாகும் தேவநீதியைப் பிரசங்கிப்பதில்லை. இதுதான் இப்படிப்பட்ட சபைகளின் தோல்விக்குக் காரணம். அதுமட்டுமல்ல கிட்டத்தட்ட கிழக்கத்திய மதங்களில் துறவறத்துக்கு ஒப்பான ஒரு வாழ்க்கை முறையைக் கற்றுக்கொடுத்து பரிசுத்தம் தவிர மற்ற ஆசீர்வாதங்களை நீ அடைவதெல்லாம் தேவசித்தம் அல்ல என்றும் கற்றுக்கொடுக்கிறார்கள். இங்கு கோலோச்சிய ஆவிக்குரிய சபைகளில் சில இலங்கையிலிருந்து வந்தவை எனவே தேரவாத பௌத்தத்தின் சாயல் அவற்றில் அதிகமாக காணப்படுவதில் ஆச்சரியமில்லை!

ஒரு கம்பியூட்டர் ஷோரூம் இருக்கிறது, அந்த ஷோரூம் முதலாளி தனது வாடிக்கையாளர்களுக்கு எது தேவை என்று அவரே முடிவு செய்கிறார்.

ஸ்பீக்கர்கள் அல்லது ஹெட்போன் இருந்தால் சினிமா பாட்டு கேட்பார்கள் எனவே அது வேண்டாம். பென்-டிரைவ் இருந்தால் அதில் சினிமா போட்டு பார்ப்பார்கள் எனவே அதுவும் வேண்டாம், இண்டெர்நெட் மோடம் விற்றால் அதைப் பயன்படுத்தி ஆன்லைனில் ஆபாசப் படம் பார்ப்பார்கள் அது வேண்டாம், பிரிண்டர் இருந்தால் கண்ட கதைகளையும் பிரிண்ட் அவுட் எடுத்து படிப்பார்கள் அதுவும் வேண்டாம். வெப்-கேம் இருந்தால் எதிர்பாலரோடு சாட்டிங் செய்து பாழாய் போவார்கள் அதுவும் வேண்டாம்.

அவர்களுக்கு எதுதான் தேவை? எல்லோருடைய கம்பியூட்டர்களும் வைரஸ்களாலும், ஸ்பைவேர்களாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது எனவே நான் ஆண்ட்டி வைரஸ் சாப்ட்வேர்கள் மட்டுமே விற்பேன் என்று முடிவெடுப்பாரானால் தனது ஆண்ட்டி வைரஸ் சாப்ட்வேர்களை வைத்துக்கொண்டு அவர் மட்டுமே கடையில் உட்காந்திருக்க வேண்டியதுதான்.

இதுபோன்ற Anti-virus only கடைகளைத்தான் கிறிஸ்தவத்தில் நிறைய பார்க்கிறோம். குறைந்த பட்சம் அந்த ஆண்ட்டி வைரஸாவது சரியானதாக இருக்கிறதா என்றால் அது Latest update-ஆன கிருபை ஆண்ட்டி வைரஸாக இல்லாமல் Expiry ஆன நியாயப்பிரமாண ஆண்ட்டி வைரஸாக இருப்பதுதான் பிரச்சனையே, அவற்றை install செய்தால் கம்பியூட்டரில் பிரச்சனைகள் மேலும் சிக்கலாகி விடுகின்றன.

பண ஆசைக்கும், பொருளாசைக்கும் தேவன் என்றுமே எதிரானவர்தான் ஏற்பாட்டில் மட்டும் ஒன்றல்ல, இரண்டல்ல ஏகப்பட்ட வசனங்கள் இருக்கின்றன (மத்தேயு 4:9,10, மத்தேயு 6:24, மத்தேயு 13:22, மத்தேயு 19:21,22, மாற்கு 4:18, மாற்கு 10:21-23, லூக்கா 12:16-21, லூக்கா 16:13, லூக்கா 18:22-24, 1 தீமோ 3:3, 1 தீமோ 6:6-11, 1 தீமோ 6:17, யாக்கோபு 4:4, யாக்கோபு 5:5). இவற்றையெல்லாம் அறியாமலோ, அல்லது வாசிக்காமலோ நான் இந்த புத்தகத்தை எழுதவில்லை. மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் ஐசுவரியத்தை அல்ல ஐசுவரியம் குறித்த நமது மனநிலையையே விமர்ச்சிக்கின்றன.

பண ஆசைக்கும், பொருளாசைக்கும் தேவன் என்றுமே எதிரானவர்தான். அது பழைய ஏற்பாடானாலும் சரி, புதிய ஏற்பாடானாலும் சரி. ஆனால் தேவன் என்றுமே செழிப்புக்கும், ஐசுவரியத்துக்கும் எதிரானவர் அல்ல, ஏனென்றால் அவை அனைத்தும் அவரது உடைமைகள்தான். தேவன் துறவி அல்ல, எனவே நாமும் துறவறம் பூணவேண்டிய அவசியமில்லை. நாம் இதை சரியாகப் புரிந்துகொண்டால் ஏற்கனவே ஓரளவு தெளிவில்தான் இருக்கிறோம் என்று பொருள்.

வசனத்தை அது கொடுக்கப்பட்டதன் நோக்கத்தை ஆராயாமல், எழுத்தை எழுத்தின்படியே எடுத்துக்கொண்டால் ஒருவன் கத்தி எடுத்து  இடறல் உண்டாக்கிய கண்களை தோண்டி வெளியே எறிந்தால் எப்படி இருக்குமோ, இடறல் உண்டாக்கிய கையை வெட்டி எறிந்தால் எப்படி இருக்குமோ அப்படியே ஆகிவிடும். மதப்பித்து பிடித்த பரிசேயர்களின் கதை அதுதான்.

குரங்கு கையில் சிக்கிய பூமாலை எப்படியோ மதவாதிகள் கையில் சிக்கிய கட்டளையும் ஆகும். ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிப்பாயாக என்றுதான் தேவன் கட்டளை கொடுத்தார். ஆனால் ஓய்வுநாளில்  2000 cubits தூரம் மட்டுமே நடக்க வேண்டும் என்ற அளவுகோலை பரிசேயர்கள்தான் பாபிலோனிய தால்முத்தில் கொண்டு வந்தார்கள்.

தசமபாகம் செலுத்த வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டில்  தேவனுடைய கட்டளைதான், ஆனால் பரிசேயர்கள் வெந்தையத்தையும் சீரகத்தையும் ஒவ்வொன்றாக உன்னிப்பாக உட்காந்து எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

நியாயப்பிரமாணத்தில் "பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக" என்று லேவி 11:23-இல் சொல்லப்பட்டிருப்பதற்காக தாங்கள் குடிக்கும் திராட்சைரசத்தைக்கூட கொசுக்களைவிட மிகச்சிறிய பூச்சிகள்கூட இல்லாதபடி வடிகட்டிக் குடித்தார்கள்.

ஒருவர் ஆசீர்வாதத்தை போதிக்கிறார் என்றால் எந்தப் புரிதலில் அவர் அதை போதிக்கிறார் என்பதை ஆராய்ந்துதான் அவரது பிரசங்கத்தை நிதானிக்க வேண்டும். வெறுமனே ஜனங்களின் ஐசுவரிய மயக்கத்தை சாதகமாக்கிக் கொண்டு தான் லாபமடையும் நோக்கில் அவர்களை இயேசுவை விட்டு உலகப் பொருளின் பக்கம் திருப்புகிறவராக இருக்கிறாரா, அல்லது புதிய உடன்படிக்கையையும், பரலோக ராஜ்ஜியத்தையும் தானும் சரியாக புரிந்து கொண்டு விசுவாசிகளையும் சரியான புரிதலுக்குள் நடத்துகிறாரா என்பதை அவரது பிரசங்கங்களே காட்டிக்கொடுத்துவிடும்.

ஜனங்களின் பலவீனத்தை தனக்கு சாதகமாக்கும் ஊழியர்கள் அந்தக்காலத்திலிருந்து இன்றுவரை இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்.(பிலி 3:18,19) என்று பவுல் இப்படிப்பட்டவர்களைக் குறித்துத்தான் சொல்லுகிறார்.

ஆனால் ...

மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? அவன் எப்படிப்பட்டவனாகப் படைக்கப்பட்டான்? அவன் சர்ப்பத்தின் தந்திரத்தால் எதையெல்லாம் இழந்தான். அதை திரும்பித்தர தேவன் அறிமுகப்படுத்திய மீட்பின் திட்டம் என்ன? அந்த திட்டம் எப்படி இயேசுகிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றப்பட்டது? அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக மனிதனுக்கு மீண்டும் கிடைத்த சிலாக்கியங்கள் எவை? புதிய உடன்படிக்கைக்கு உட்படுவதன் மூலம் ஒரு தனி மனிதன் அந்த சிலாக்கியங்களை எப்படி சுதந்தரித்துக் கொள்ளமுடியும்? அந்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்ட மனிதனுக்கு இருக்கும் கடைமைகள் என்ன? என்பதை வேத வசன ஆதாரங்களுடன் ஒருவர் தெளிவாக விளக்கிக் கூறுவாரானால் அதுவே சரியான, முழுமையான பிரசங்கமாக இருக்க முடியும்.

மேற்கண்ட காரியங்களில் சபை மக்கள் சரியான புரிதலுக்குள் வரவேண்டும் என்பதே பவுலின் ஊக்கமான ஜெபமாக இருந்தது என்பதை எபேசியர் 1: 15-19 வசனங்கள் சொல்லுகின்றன.

இப்படிப்பட்ட பிரசங்கங்கள் எந்த சபையில் தொனிக்கிறதோ அந்த சபையை நோக்கித்தான் மக்கள் படையெடுக்கிறார்கள். அந்தப் பிரசங்கங்கள்தான் சமூக வலைதளங்களில் தீயைப் போல பரவுகிறது. இதுதான் பரலோக ராஜ்ஜியத்தின் திட்டமும்கூட. இதை யாராலும் தடுக்க முடியாது.

எங்கு பாரத்தை இறக்கி அனுப்புகிறார்களோ அங்குதான் கூட்டம் வரும், ஆனால் பரிசேயர்களுக்கு பாரத்தை சுமத்தி அனுப்பத்தான் தெரியுமே தவிர இறக்கி அனுப்பத் தெரியாது. எங்கள் சபைக்குக் கூட்டம் வராததற்குக் காரணம் நாங்கள் சத்தியத்தை சொல்லி சத்துருவானோம் என்று தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதில் அர்த்தமில்லை.

சரி, தரித்திரத்தை பிரசங்கிப்பது தேவசித்தமல்ல, அது சத்தியமுமல்ல என்று கற்றுக்கொண்டுவிட்டோம். அப்படியானால் செழிப்பைத்தான் பிரசங்கிக்க வேண்டும். ஆனால் இன்று சபைகளில் பிரசங்கிக்கப்படும் செழிப்பு உபதேசங்கள் 100% வேதத்தின்படியான உபதேசங்களா என்பதை ஆராய்வோம்.

# <u>அத்தியாயம் 2: பட்டணத்துக்கு வெளியே…</u>

## இன்றைய செழிப்பு உபதேசத்தில் உள்ள அடிப்படைப் பிரச்சனை:

விசுவாசிகளாகட்டும், அவிசுவாசிகளாகட்டும், இந்த உலகத்தில் எல்லோருமே செழிப்பை விரும்பத்தான் செய்கிறார்கள், யாருமே அதை வெறுப்பதில்லை. அதில் தவறுமில்லை.  வேதமும் கூட செழிப்பைத்தான் நமக்கு வாக்குப்பண்ணி இருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் பலர் செழிப்பு உபதேசத்தை விமர்ச்சிக்கிறார்கள்? செழிப்பைப் பேசுகிறவர்களை கள்ள உபதேசிகள் என்கிறார்கள்?

இதற்கு காரணம் என்ன தெரியுமா? செழிப்பைப் பிரசங்கிக்கும் பலர் (எல்லோரும் அல்ல) பணத்தை மையப்படுத்தும் செழிப்பைக் குறித்துத்தான் பேசுகிறார்கள். “பணமோ எல்லாவற்றுக்கும் உதவும் ஆகவே பணம் உன்னிடத்தில் குவிந்து இருந்தால் நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்” என்ற புரிதலை மக்களுக்கு உண்டாக்கிவிடுகிறார்கள். இது சரிதானே, இதில் என்ன பிரச்சனை இருக்கிறது என்கிறீர்களா? இதில் பாதிதான் உண்மை இருக்கிறது, அதுதான் பிரச்சனையே!

விழுந்துபோன மனிதனை சாத்தான் ஒரு சிஸ்டத்துக்குள் அடைத்து வைத்திருக்கிறான். அந்த சிஸ்டம் உலகப் பொருளை அடிப்படையாகக் கொண்டது. அதாவது பணம் இருந்தால் மட்டுமே இவ்வுலகத்தில் வாழமுடியும் என்கிற ஒரு தவிர்க்கமுடியாத, நிர்பந்தமான நிலை சாத்தானால் தந்திரமாக உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதன் விளைவாக இந்த உலகத்தில் பணத்தைக் குவித்து வைத்திருக்கும் ஒரு மனிதனால் மட்டுமே எல்லா நன்மைகளையும் பெற்று சந்தோஷமாகவும் நிறைவாகவும் வாழமுடியும் என்கிற நிலை இருக்கிறது. எனவேதான் நமது பிரசங்கிமார்களும் பணத்தை மையப்படுத்தியே செழிப்பை புரிந்துகொள்ளவும், அதைப் பிரசங்கிக்கவும் தொடங்கிவிட்டார்கள்.

நான் இங்கு ஒரு முக்கியமான கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். இந்த உலகில் ஏராளமான பில்லினியர்களும், மில்லினியர்களும் இருக்கிறார்கள். நாம் வாழும் இந்த உலக சிஸ்டத்தை ஒரு பட்டணம் என்று வைத்துக் கொள்வோம். வேதமும் இந்த பாபிலோனிய உலக சிஸ்டத்தை “மகா நகரம்” என்றுதான் அழைக்கிறது (வெளி 17:18). இந்த உலகப் பணக்காரர்களெல்லாம் இந்த பட்டணத்துக்குள் அதாவது இந்த சிஸ்டத்துக்குள்தான் செழிப்பில் இருக்கிறார்களே தவிர, அதற்கு வெளியில் அல்ல. அவர்களிடம் இருக்கும் பணத்தைப் பிடுங்கிவிட்டால் அடுத்த நொடியில் அவர்கள் சூனியத்திலும் சூனியமாகிவிடுவார்கள். அப்படியானால் அந்த செழிப்பு உண்மையான செழிப்பாகுமா?

வேதம் சொல்லும் உண்மையான செழிப்பு என்ன தெரியுமா?

“நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா 28:3)”

தேவன் நாம் பட்டணத்துக்குள்ளும் (சிஸ்டத்துக்குள்ளும்) ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதே நேரத்தில் இந்த பட்டணத்தின் மூலாதாரமான பணத்தை நம்மை விட்டு மொத்தமாகப் பிடுங்கிவிட்டாலும் இன்னும் செழிப்பாகத்தான் இருப்போமாம். அதுதான் உண்மையான செழிப்பு..

அதென்ன செழிப்பு? பட்டணத்துக்கு வெளியில் என்றால் என்ன? அதற்கு வெளியே என்ன இருக்கிறது?

## இயேசுவின் ஊழியம்: பட்டணத்துக்கு வெளியே...

பட்டணத்துக்கு வெளியே என்பது ஒரு இடத்தையோ அல்லது ஒரு பரிமாணத்தையோ குறிக்கும் சொல் அல்ல. அதுவும் நாம் வாழும் பூமிக்குள்ளேதான் இருக்கிறது. ஆனால் இந்த பூமியிலுள்ள ஜனங்களைக் கட்டி வைத்திருக்கும் சிஸ்டத்துக்கு வெளியே அது இருக்கிறது. அது ஒரு வாழ்க்கை முறை என்றுகூட சொல்லலாம். அந்த வாழ்க்கையை கர்த்தராகிய இயேசு நமக்கு முன்னுதாரணமாக பல நேரங்களில் வாழ்ந்து காட்டியிருக்கிறார்.

அதே நேரத்தில் கர்த்தராகிய இயேசு பட்டணத்துக்குள்ளும் ஆசீர்வதிக்கப்பட்டவராகத்தான் இருந்திருக்கிறார். நமது செழிப்புப் பிரசங்கிமார்கள் அடிக்கடி உபயோகிக்கும் உதாரணத்தையே நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவருக்கு பணப்பையை வைத்துக்கொண்டிருந்த ஒரு சீஷன் கூடவே இருந்தான் (யோவா 12:6), அப்படியானால் பையில் போட்டு சுமக்கும் அளவுக்கு அவரிடம் எக்கச்சக்கமான பணம் இருந்திருக்கிறது, ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்ததாக லூக்கா 8:3 சொல்லுகிறது.

ஆனால் அவர் முழுக்க முழுக்க தமது ஊழியத்துக்கும், வாழ்க்கைக்கும் அந்தப் பணப்பையையே நம்பியிருக்கவில்லை. ஒருவேளை அப்படி நம்பியிருந்திருப்பாரானால் நம்முடைய வாழ்க்கையையும், ஊழியத்தையும் போலவே அவருடைய வாழ்க்கையும், ஊழியமும் பத்தோடு பதினொன்றாக சாரமின்றி இருந்திருக்கும்.

நீங்கள் இப்படி கற்பனை செய்து பாருங்கள். ஒருவேளை இயேசு தம்முடைய ஊழியத்துக்கு தம்முடைய பணப்பையை மட்டுமே நம்பி இருந்திருப்பார் என்று வைத்துக்கொள்வோம். பிதா அவருக்கு ஒரு ஊழிய Project-ஐத் தருகிறார். கலிலேயாக் கடல் அருகே உள்ள ஒரு மலையில் நாலாயிரத்துக்கும் அதிகமான ஜனங்களுக்கு பிரசங்கிக்க வேண்டும்.

இந்த கட்டளையைப் பெற்றுக்கொண்டவுடன் தமது சீஷர்களுடன் அமர்ந்து திட்டமிட்டிருந்திருப்பார். நாலாயிரத்துக்கும் அதிகமோனோர் என்றால் அவர்களுக்கு குறைந்தது இரண்டு வேளையாவது சாப்பாடு தர வேண்டும். அதற்கு எவ்வளவு செலவாகும்? நமது கையிருப்பு என்ன? குறைவாயிருந்தால் அதற்காக ஜெபிக்க வேண்டும், ஆஸ்திகளால் ஊழியம் செய்யும் ஸ்திரீகளுக்கு “ஜெபக்குறிப்பு” என்கிற பெயரில் சூசகமாகவோ, அல்லது “விதையுங்கள்” என்று நேரடியாகவோ ஒரு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.

ஒருவழியாக பணம் சேர்ந்தபின்பு தேவையான உணவுப் பண்டங்களை வாங்கி அதை மலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். நாலாயிரம் பேருக்கும் அதிகமானோருக்கான உணவுப் பண்டங்களை சுமந்து செல்ல எத்தனை வண்டிகள் தேவைப்படும். அதற்கான transport charges எவ்வளவு ஆகும்! வழியில் மழை வந்துவிட்டால் என்ன செய்வது? உணவுப் பண்டங்களை எப்படிப் பாதுகாப்பது? அப்பப்பா பட்டணத்துக்குள் (சிஸ்ட்டத்துக்குள்) வாழ்வதும், ஊழியம் செய்வதும்தான் எத்தனை சிரமமான காரியம்!! எத்தனை திட்டமிடல்கள், எத்தனை தலைவலிகள், எத்தனை அழுத்தங்கள்..இதுதான் “வருத்தப்பட்டு பாரஞ்மப்பது” என்பது. நாம் வருத்தப்பட்டு பாரம் சுமந்து ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்து, மேடையில் ஏறி நின்று ஜனங்களைப் பார்த்து "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே..." என்கிறோம். எத்தனை பரிதாபம்!

நாம் காலங்காலமாக இப்படித்தான் ஊழியம் செய்து வருகிறோம். நான் யாரையும் கேலி செய்யும் நோக்கில் இதை எழுதவில்லை, ஏனென்றால் என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். இதுபோன்ற முயற்சிகளுக்குப் பின்னால் எத்தனை சுவிசேஷ பாரமும், ஆத்தும வாஞ்சையும், தேவன் மேல் நேசமும் நம் ஊழியர்களுக்கு இருக்குமென்பது எனக்குத் தெரியும். நான் இங்கு சொல்ல வருவது இயேசுவின் முன்மாதிரி பற்றித்தான்…சிந்திக்கத் தூண்டுவதைத் தவிர வேறெந்த நோக்கமுமில்லை.

ஒருவேளை கர்த்தராகிய இயேசு பட்டணத்துக்கு உள்ளே மட்டும் ஆசீர்வதிக்கப்பட்டவராக இருந்திருந்தால் பட்டணத்தை கையில் வைத்திருந்த சத்துரு அவரை சுத்தலில் விட்டிருப்பான். பாடாய் படுத்தியிருந்திருப்பான். ஊழியப் பங்குதாரராய் இருந்த ஸ்திரீகளின் மனதை குழப்பி வரவேண்டிய funds-ஐ வரவிடாமல் தடுத்திருந்திருப்பான். உணவுப் பொருட்களோ, அதை மலைக்கு சுமந்து செல்லும் வண்டிகளோ கிடைக்காமல் தடை செய்து விளையாடிப் பார்த்திருப்பான். நாம் இப்படியெல்லாம் அனுபவங்களை சந்தித்துதானே வந்திருக்கிறோம்?

ஆனால் கர்த்தராகிய இயேசு பட்டணத்துக்கு வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்ததால் அவருடைய வாழ்க்கையும் ஊழியமும் எவ்வளவு எளிதாக இருந்தது என்பதை சற்று எண்ணிப்பாருங்கள். ஒரு திட்டமிடலும் இல்லை, ப்ரஷர் இல்லை, டென்ஷனாகி சீஷர்களைத் திட்ட வேண்டிய அவசியமில்லை. “ஊழியத் தேவைகளை தடை செய்யும், தாமதப்படுத்தும் பிசாசே உன்னை கட்டுகிறேன்” என்பது போன்ற பிசாசோடு மல்லுக்கட்டும் ஜெபங்களுக்கான தேவையில்லை. காரணம் தேவையான உணவு பிசாசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்

பட்டணத்துக்குள் இருந்து வரப்போவதில்லை. அவனால் நெருங்கவே முடியாத பட்டணத்துக்கு வெளியே இருந்து வரப்போகிறது…

முந்தின நாள் இரவு அவர் நிம்மதியாக தூங்கியிருந்திருப்பார். மறுநாள் சீஷரைக் கூட்டிக்கொண்டு செல்லும் வழியில் ஜாலியாக அவர்களுடன் சிரித்துப் பேசியபடி சென்றிருந்திருப்பார். ஜனங்களுக்குப் பிரசங்கித்து, பின்னர் ஹீலிங் & டெலிவரன்ஸ் சர்வீஸ் முடிந்தவுடன். இந்த உலகம் கண்டிராத ஒரு மாபெரும் பிரசங்கம் அவருடைய செயலில் வெளிப்பட்டது. நாம் இந்த உலகத்தின் சிஸ்டத்துக்குக் கட்டுப்பட்டவர்களல்ல, நாம் அதை சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதே அந்தப் பிரசங்கம். பல ஆயிரம் பேருக்கு திருப்தியாக உணவு பரிமாறப்பட்டது. மீந்த துணிக்கைகளை மட்டும் ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள் (மத் 15:37).

**பட்டணத்துக்கு வெளியிலிருந்து வருவதையெல்லாம் நாம் “அற்புதம்” என்ற பெயரில் நம்மை விட்டு அந்நியப்படுத்திவிடுகிறோம். அது ஒரு வாழ்க்கை முறை, மீட்கப்பட்டவர்களுக்காகவே வடிவமைக்கப்பட்ட பரலோக ராஜ்ஜியத்தின் வாழ்க்கை முறை.** நாம் அதில் வாழ கொஞ்சம் கொஞ்சமாகப் பழக வேண்டும்.

இயேசு ஊழியத்துக்கு மட்டுமல்ல, அன்றாட வாழ்க்கைக்கும்கூட உலக சிஸ்டத்தில் இருக்கும் ஆசீர்வாதத்தை சார்ந்திருக்கவில்லை என்பதை ஒரு உதாரணத்துடன் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்

## உள்ளேயும் செயல்படும்…

இந்த உலகத்தின் அதிபதி என்று சொல்லப்படும் சாத்தான் மாங்கு மாங்கென்று முயற்சி செய்து ஒரு மாபெரும் உலகக் கட்டமைப்பை உருவாக்கியது எதற்காக? மனிதர்களின் நிர்வாக மேலாண்மைக்கு உதவி செய்யவா? நிச்சயமாக இல்லை. ஒரு சிஸ்ட்டத்துக்குள் உட்படுத்தி வைக்காவிட்டால் தேவசாயலாகப் படைக்கப்பட்ட மனிதனைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியம் என்பது அவனுக்குத் தெரியும். அதே நேரத்தில் அந்த சிஸ்டத்தைப் பயன்படுத்தி மனிதனையே வேலைகொண்டு தன்னுடைய ராஜ்ஜியத்தைக் கட்டிக்கொள்ளவும் வேண்டும். அவன் அவ்வளவு தொ(ல்)லை நோக்குப் பார்வையுள்ளவன். எனவேதான் “தானியேலைப்பார்க்கிலும் நீ ஞானவான்” என்று கர்த்தரே எசே 28:3-இல் அவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்.

மனிதன் இந்த பூமியில் உயிர்வாழ வேண்டுமென்றால் "பணம்" என்ற ஒன்றை முற்றிலுமாக சார்ந்திருக்க வேண்டும். அதைத் தேடுவதிலேயே அவன் தனது மொத்த வாழ்நாளையும், பெலனையும் செலவிட வேண்டும். அவன் தனது ஒட்டுமொத்த கருத்தையும், கவனத்தையும் அதன் மீதே குவிக்க வேண்டும். ஒன்று அவன் தனது மூளையைப் பயன்படுத்தி வேலை செய்து சம்பாதிக்க வேண்டும், அல்லது கையைப் பயன்படுத்தி உடல் உழைப்பைத் தந்து சம்பாதிக்க வேண்டும். மொத்தத்தில் ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்வதற்காக சாத்தானுடைய ராஜ்ஜியத்தின் கட்டுமானப் பணிக்கு குறைந்தபட்சம் ஒரு செங்கலாவது எடுத்து வைக்க வேண்டும். இதுதான் நெற்றியிலாவது, வலது கையிலாவது முத்திரை குத்திக்கொள்வது. அப்படி அடிமை சாசனம் எழுதிக்கொடுத்து கஷ்டப்பட்டு வேலை செய்து பணத்தை சம்பாதிக்காவிட்டால் எதையும் வாங்கவும் முடியாது விற்கவும் முடியாது.

"பணம் என்ன மரத்திலா காய்க்கிறது" என்று கேட்கும் வழக்கம் நம் ஊரில் இருக்கிறது. இதன் அர்த்தம் என்ன? பணம் அவ்வளவு எளிதாகக் கிடைக்காது. அதைச் சம்பாதிக்க ஒரு முறைமை இருக்கிறது. அந்த முறைமைதான் எலியைப் பிடிக்கும் பொறி போன்றது. அது சத்துருவின் ஆளுகைக்குள் இருக்கிறது. வேறு வழியே இல்லை, அந்த முறைமைக்குள் போய்தான் ஒவ்வொருவரும் தனக்கான சம்பாத்தியத்தை ஈட்ட வேண்டும். அதற்காக அவர்கள் தங்கள் வாழ்க்கையையே விலையாகத் தரவேண்டும். விலைமதிப்பற்ற குழந்தைப் பருவத்தையும், வாலிபப் பருவத்தையும் பணம் சம்பாதிக்கும் அடிமைப்பணிக்கென தன்னை ஆயத்தப்படுத்தும் கல்விக்காக  முற்றிலும் செலவிட்டாக வேண்டும்.

இந்த உலகத்தில் எத்தனையோ போராளிகள், புரட்சிக்காரர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் யாரும் இந்த சிஸ்டத்தை எதிர்த்து கலகம் செய்ததில்லை. பொதுவாக கலகக்காரர்கள் தாங்கள் எதை எதிர்த்துப் போராடுகிறார்களோ அதற்கு ஒரு மாற்றை முன்வைப்பார்கள். "அதை நீக்கிவிட்டு, இதை அமல்படுத்து" என்பார்கள். ஆனால் "இந்த பணத்தை மையமாகக் கொண்ட உலக சிஸ்டத்துக்கு மாற்று என்ன?" என்று கேட்டால் உலகில் எந்த ஞானியிடமும் பதில் இருக்காது. இங்குதான் அதை உருவாக்கியவனின் மேட்டிமை அடங்கியிருக்கிறது.

ஆனால் அந்த மேட்டிமையை சுக்கு நூறாக உடைக்க இயேசு எனும் கலகக்காரர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பூமிக்கு வந்தார். அவர் இந்த சிஸ்டத்தை எதிர்த்து கலகமும் செய்தார், அதற்கு ஒரு மாற்றையும் முன்வைத்தார். அதுதான் "பரலோக ராஜ்ஜியம்" எனும் மாற்று. அதன் அழகு என்னவென்றால் அது சிஸ்டத்துக்கு வெளியேயும் செயல்படும், உள்ளேயும் செயல்படும். சிஸ்டத்துக்கு வெளியே அது எப்படி செயல்படுகிறது என்பதற்கு கடந்த அத்தியாயத்தில் ஒரு உதாரணத்தைப் பார்த்தோம். உள்ளேயும் எப்படி அதனால் செயல்படமுடியும் என்பதற்கு இந்த அத்தியாயத்தில் ஒரு உதாரணத்தைக் காண்போம்.

Spiritual Visualisation Technique என்ற ஒரு முறை இருக்கிறது. அதைப் பயன்படுத்தி நாமும் இங்கு ஒரு காட்சியை ஆன்மீகக் கற்பனை செய்து பார்ப்போம்.

மனிதனை முற்றிலும் கட்டுப்படுத்தும் ஒரு மாபெரும் தன் சிஸ்டத்தைக் கையில் வைத்திருப்பது பற்றி சாத்தானுக்கு  எப்பொழுதும் ஒரு மமதை உண்டு. மனிதர்கள் உண்ணவும், உடுக்கவும், பிழைக்கவும் அந்த சிஸ்டத்தைத்தான் சார்ந்திருக்க வேண்டிய நிலை. அவர்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு காசையும் அந்த சிஸ்டத்தின் அதிபதியின் கையிலிருந்துதான் பெற்றாக வேண்டும். அதை அவன் வைத்திருக்கும் முறைமைகளில் ஏதோ ஒன்றைப் பின்பற்றித்தான் சம்பாதித்து ஆக வேண்டும்.

அப்படியிருக்கையில் கர்த்தராகிய இயேசு ஒருமுறை வரி செலுத்த வேண்டிய அவசியம் வந்தது. அதைப் பணமாகத்தான் செலுத்தி ஆகவேண்டும். அந்தப் பணத்தை அவர் எப்படி சம்பாதிக்கப்போகிறார் என்பதைப் பார்க்கத்தான் சத்துருவும் அவனது சேனைகளும் ஆவலாக இருந்தார்கள். ஊழியத்துக்கு வந்த பணத்தை எடுத்து வரி கட்டுவாரா? அல்லது தற்காலிகமாக தனது குடும்பத் தொழிலான தச்சு வேலை செய்து அதில் வரும் பணத்தைக் கொண்டு வரிகட்டுவாரா? தண்ணீரை திராட்சை ரசமாக்க முடியும், அப்பத்தையும், மீனையும்கூட சிஸ்டத்துக்கு வெளியிலிருந்து கொண்டுவர முடியும். வெள்ளியும், பொன்னும்கூட

உம்முடையதாக இருக்கலாம், ஆனால் சீரியல் நம்பர் போட்டு நான் அச்சடித்த பணத்தை என்ன செய்ய முடியும்? ஒன்று என் பொறிக்குள் வந்து சம்பாதிக்க வேண்டும், அல்லது வேறு எந்த வழியில் அதை அற்புதமாக உருவாக்கினாலும் அது செல்லாத கள்ளப்பணமாகிவிடும். என்ன செய்வார் பார்ப்போம்…

தனக்குப் பிடிக்காதவர்களை வருமானவரித்துறையை வைத்து மிரட்டி அடக்குவது அந்தக் காலத்திலேயே இருந்திருக்கிறது போலும், "We are from IT department" என்று சிலர் வந்து ஒருநாள் பேதுருவின் வீட்டுக் கதவைத் தட்டினார்கள், அப்போது இயேசுவும் பேதுருவின் வீட்டில்தான் தங்கியிருந்தார்..

ஒட்டுமொத்த சத்துருவின் சேனையும் நடக்கப்போவதை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தது...

ஆனால் ஒருவரும் கற்பனையே செய்து பார்க்கமுடியாத ஒரு சம்பவம் அங்கு நடைபெற்றது. நடுக்கடலில் இருந்த ஒரு மீனின் வாயிலிருந்து அவன் அச்சடித்த, அவனது பணத்தையே எடுத்து, அவனிடம் கொடுத்து, அவன் செவுளில் அறைந்து சொன்னார், “நான் எப்பொழுதும் உன் நுகத்துக்குக் கட்டுப்பட்டவன் அல்ல, அது உன் பணமாக இருக்கலாம், அதுவும் என்னுடையதுதான். இந்த உலகத்தில் சகலமும் என்னைக் கொண்டும், எனக்கென்றும் சிருஷ்ட்டிக்கப்பட்டது (கொலோ 1:16)”.

தன்னுடைய ரிசர்வ் பேங்கில் தான் அச்சடித்த காசு நடுக்கடலில் இருந்த மீன் வாய்க்குள் எப்படிப் போயிற்று? அந்த மீன் எப்படி சரியாக பேதுருவின் தூண்டிலில் சிக்கியது? இது அவனுக்குப் புலப்படவேயில்லை….அவர் அந்தக் காசை உழைக்காமல் பெற்றுக்கொண்டார் என்றும் குற்றப்படுத்த  முடியாது. ஏனென்றால் கடலில் போய் தூண்டில் போட்டு மீன்பிடித்த ஒரு மீனவனின் உழைப்பு அங்கு இருக்கிறது. இந்த விஷயத்தில் அவரிடம் வாங்கிய அடியையும், பெற்ற அவமானத்தையும் எதிரி இன்றுவரை மறந்திருக்கமாட்டான்.

இதன் மூலம் என்ன விளங்குகிறது?  பரலோக ராஜ்ஜியத்தின் ஆளுகை பட்டணத்துக்கு வெளியில் மட்டுமல்ல, அதன் உள்ளும் இருக்கிறது. இயேசுவிடம் யாராவது "பணம் என்ன மரத்திலா காய்க்கிறது" என்று கேட்டால், "ஆம், தேவைப்பட்டால் என்னால் மரத்திலும் காய்க்க வைக்க முடியும், அதற்கு என்ன?" என்று கேட்பார். இதுதான் பரலோக ராஜ்ஜியத்தின் கெத்து. அதாவது அந்த சிஸ்ட்டத்தின் வைத்திருக்கும் பொறிக்குள்ளேயே புகாமல், அதே நேரத்தில் சரியான வழியிலும் அவரால் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதுதான் சாத்தானின் மேட்டிமைக்கு விழுந்த அடி.

மனிதனுக்கு உழைக்கக் கற்றுக்கொடுத்தவரே தேவன்தான்(ஆதி 2:15). ஒருவன் வேலை செய்யாதிருந்தால் அவன் சாப்பிடாமலும் இருக்கக்கடவன் என்று வேதம் கட்டளையிட்டிருக்கிறது (2 தெச 3:10). ஆனால் அதற்காக மனிதன் தோளில் நுகத்தைச் சுமந்து கொண்டு வேலை செய்ய வேண்டிய அவசியமில்லை. பரலோக ராஜ்ஜியத்தின் ஆளுகை பட்டணத்துக்கு அதாவது உலக சிஸ்ட்டத்துக்குள்ளும் இருக்கிறபடியால் நாம் அதன் அதிபதியின் நுகத்தில் இருந்து ஏற்கனவே விடுதலை ஆக்கப்பட்டு இருக்கிறோம். பட்டணத்துக்கு வெளியே உள்ள செழிப்பு மட்டுமல்ல, உள்ளே உள்ள செழிப்பும் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா 28:3)

இதைத்தானே செழிப்பை பிரசங்கிக்கிறவர்களும் சொல்லுகிறார்கள் என்று கேட்கலாம். உண்மைதான், ஆனால் "பட்டணத்துக்கு வெளியே" என்கிற என்கிற விஷயத்தை விட்டுவிட்டு பணத்தை மட்டும் பிரசங்கித்தால் அது முழுமையான செழிப்பு உபதேசமல்ல. அப்படி போதிப்பதில் என்ன ஆபத்து இருக்கிறது என்பதை தொடர்ந்து தியானிப்போம்.

### பணம் ஒரு உயிருள்ள சக்தி

பணவசியம் என்ற சொல்லைக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? உயிரற்ற ஒரு பொருளை யாரும் வசியம் செய்ய முடியாது. பணத்தை ஈர்க்கும் கலையைக் கற்றுத்தரும் நபர்கள் "பணம் ஒரு சக்தி" அதற்கு உணர்வும், உயிரும் இருக்கிறது என்கிறார்கள். நீங்கள் பணக்காரனாவது எப்படி என்று போதிக்கும் எந்த புத்தகத்தை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள். அதில் அவர்கள் நமக்குச் சொல்லும் முதல் அறிவுறை "பணத்தைக் குறித்த உங்கள் எதிர்மறை எண்ணங்களை மாற்றிக்கொள்ளுங்கள்" என்பதே. நீங்கள் பணத்தை நேசித்தால், மதித்தால் மட்டுமே அது உங்களிடம் தங்கும், மேலும் மேலும் வந்து சேரும் என்பதே அப்படிப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் ஒரே குரலில் சொல்லும் அறிவுரை. நானும்கூட பணத்தை வெறுக்க வேண்டும் என்று இக்கட்டுரையில் உங்களுக்கு சொல்லித்தரப்போவதில்லை. அதைவிட மதியீனமான அறிவுறை வேறெதுவும் இருக்க முடியாது.

உலகெங்கும் உள்ள வியாபார சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பணத்தை ஒரு உயிரும், உணர்வுமுள்ள நபரைப்போல அன்புடனும், மரியாதையுடனும் நடத்தும் மனநிலைக்கு சிறுவயதிலிருந்தே பழக்குவிக்கப்படுகிறார்கள். பீரோவில் பணத்தை எப்படி வைக்க வேண்டும், பர்ஸில் எந்த பொசிஷனில் பணத்தாளை வைக்க வேண்டும், இந்தியக் கரன்சியை ஒருவரிடம் கொடுக்கும்போது ரூபாய் நோட்டிலிருக்கும் காந்தி கொடுப்பவரைப் பார்த்து சிரிக்கும்படி வைத்துக் கொடுக்க வேண்டும் என்பதுபோன்ற ஏகப்பட்ட வரைமுறைகள் உள்ளன. அதன் மூலம் பணம் எனும் சக்தியிடம் தாங்கள் அதை நேசிப்பதாகவும், கௌரவப்படுத்துவதாகவும் தெரியப்படுத்துகிறார்கள்.

ஆதிமுதலே பணத்துக்கு ஒரு கடவுள் வடிவம் கொடுத்து வணங்கும் வழக்கம் பல மதங்களில் இருந்துவருகிறது. வேதமும் உலகப்பொருளை ஒரு ஆள்தத்துவமாகவே நமக்குக் காட்டுகிறது.

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை, அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது (லூக்கா 16:13). இதில் உலகப்பொருள் என்ற வார்த்தைக்கு கர்த்தர் பயன்படுத்தும் பதம் **"மேமன்"** என்பதாகும். அது ஒரு தள்ளப்பட்ட தூதனைக் குறிக்கும் பெயராகும்.

“என்னது? பணம் ஒரு அசுத்த ஆவியா? தூக்கி எறி அதை..” என்று கிறிஸ்தவம் ஒரு ஓரத்துக்கு ஓடியதன் விளைவுதான் இப்போது பெண்டுலம் எதிர் ஓரத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறது. சில கண்டிப்பான கிறிஸ்த்தவக் குடும்பங்களில் சினிமாவே பார்க்கக்கூடாது என்று வளர்க்கப்படும்

ஒரு பிள்ளை கல்லூரிப்பருவம் வந்ததும் தியேட்டரிலேயே குடியாய்க் கிடப்பானே அதுபோல... பணத்தை மட்டுமே மையமாகக் கொண்ட செழிப்பு உபதேசம் பாதித் தவறென்றால், தரித்திரத்தை சரியென்று போதிக்கும் உபதேசம் முழுத்தவறு.

இந்த உலகத்தின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் மேமனின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. எனவே இந்த உலகத்தார் அவனை சேவித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் நாம் மேமனை சேவிக்க வேண்டிய தேவையுமில்லை, அவனைவிட்டு ஓட வேண்டிய அவசியமுமில்லை. இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறபடியால் பணம் மட்டுமல்ல உலகத்திலுள்ள அத்தனை வளங்களும் ஏதோ ஒரு ஆவியுடன் இணைக்கப்பட்டுத்தான் உள்ளது. எல்லாவற்றையும் விட்டு நாம் ஓடிவிடமுடியுமா?

சிலுவையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் அத்தனை ஆவிகளுடனும் சேர்த்து மேமனும் ஜெயிக்கப்பட்டபடியால் இப்போது மேமனுக்கு நம்மீது அதிகாரம் இல்லை (கலா 1:4), ஆனால் நமக்கு அவன்மீது அதிகாரம் இருக்கிறது. நாம் அவனை அடிமைகொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

உலகப்பொருளை நாம் ஏன் அடிமைகொள்ளவேண்டும்? படைக்கப்பட்ட அத்தனையையும் ஆண்டுகொள்ளவேண்டும் என்பதுதான் தேவன் நமக்குக் கொடுத்த கட்டளை (ஆதி 1:28). இது அறிவுரையல்ல, கட்டளை. நம்மீது ஏதாவது ஆளுகை செலுத்த நாம் அனுமதிப்போமானால் அது அவருடைய கட்டளையை மீறுவதாகும்.

அடிமைகொள்ள வேண்டுமென்பது சரி, பணத்தை நான் நேசிக்கவேண்டுமா? வெறுக்க வேண்டுமா என்று கேட்டால், உங்கள் வீட்டில் உங்களுக்கு மிகவும் உதவியாக உள்ள ஒரு அடிமையை நேசிப்பீர்களா அல்லது வெறுப்பீர்களா என்று அக்காலத்திய எஜமான் ஒருவனிடம் கேட்டால், இரண்டும் இல்லை, அவனை சந்தோஷமாகப் பயன்படுத்திக்கொள்வேன் என்பான். அடிமையை வெறுத்தால் ஓடிவிடுவான், நேசித்தால் உரிமை பாராட்டி தலைக்கு மேல் ஏறி உட்காந்துவிடுவான் (நீதி 29:21).

இன்னொரு விஷயம் ஒரு அடிமையை அவனை நேசிக்கும் ஒரு நபரும், அவனை உரிமைகொண்ட எஜமானும் ஒரே நேரத்தில் அழைக்கிறார்களென்றால் அவன் தன்னை நேசிக்கும் நபரிடம் போகவிரும்பினாலும் எஜமானிடம்தான் செல்வான், சென்றாக வேண்டும். அதுதான் சட்டம். புரிந்துகொள்ளுங்கள் பணத்தை நேசிக்கக் கற்றுத்தருவதா? அடிமைப்படுத்தக் கற்றுத்தருவதா எது பயனளிக்கும் உபதேசமென்று!

சரி, பணத்தை மட்டுமே மையமாகக் கொண்ட செழிப்பை போதிப்பதில் என்ன ஆபத்து இருக்கிறது என்பதைப் பார்ப்போம். இஸ்ரவேலரை தேவன் நாற்பது வருடங்கள் வனாந்திரத்தில் நடத்தக் காரணம் என்ன? அதற்கான காரணத்தை மோசே சொல்லுகிறார் கேளுங்கள். "அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார் (உபா 8:3)". என்று கூறுகிறார்.

இஸ்ரவேலர் போய் சேரப்போகும் கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். **அப்பம் கொட்டிக்கிடக்கும் தேசத்துக்கு போகிறவர்களுக்கு "அப்பத்தினால் மாத்திரமல்ல..." என்கிற பாடத்தை தேவன் ஏன் நாற்பது வருடங்கள் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று சிந்தித்தீர்களா?** வனாந்திரம் என்பது அற்புதங்கள் தேவைப்படும் இடம். கானான் அற்புதங்களே தேவைப்படாத நிறைவான இடம், உண்மைதான். **ஆனால் அற்புதமே தேவைப்படாத இடத்துக்குப் போகிறவனுக்கு அற்புதத்தைப் பற்றி ஏன் நாற்பது ஆண்டுகள் பாடமெடுக்க வேண்டும்?** இங்கு முனைவர் பட்டம்வரை படிக்க வேண்டும் என்றாலும்கூட மொத்தம் 20 ஆண்டுகளுக்குள் அதை முடித்துவிடலாம். நாற்பது ஆண்டுகள் கஷ்டப்பட்டு படிக்க வேண்டிய அளவுக்கு அது அவ்வளவு முக்கியமான பாடமா என்றால், ஆம்! அது அவ்வளவு முக்கியமான பாடந்தான்.

இதோ, உனக்கு முன்பாக இரு ஆதாரங்கள் இருக்கின்றன. ஒன்று யெகோவாயீரேயாகிய நான், இன்னொன்று உலகப்பொருள். உலகப்பொருளை நீ திருப்திகரமாக அனுபவிக்கலாம் ஆனால் அதைச் சார்ந்துகொள்ளக்கூடாது. அதைச் ஆதாரமாகச் சார்ந்து கொள்வாயானால் உன்னையும் அறியாமல் அதன் அதிபதியைச் சார்ந்துகொள்கிறாய். அவன் உன்மீது அதிகாரமெடுக்க நீயே இடங்கொடுக்கிறாய். அவன் தன்னுடையதை உன்னைவிட்டு பறிக்கலாம், குறைவுபடச் செய்யலாம் அல்லது இல்லாமலும் ஆக்கலாம். ஆனால் என்னை நீ ஆதாரமாகக் கொள்வாயானால் உன் அம்பாரம் மீந்திருக்கும், உன் களஞ்சியங்கள் பூரணமாக நிரம்பியிருக்கும், தானியமும் திராட்சைரசமும் ஒருபொழுதும் உனக்குக் குறைவுபடாது. கர்த்தர் தரும் ஐசுவரியத்தோடே வேதனையைக் கூட்டார் என்பது இதுதான்.

இங்கு ஒரு தெளிவாக கோடு வரையப்படுகிறது… ஒரே ஒரு கேள்வி..ஒற்றைக் கேள்வி…

"உன் சார்பு எங்கேயிருக்கிறது?"

இன்று சிலர் பிரசங்கிக்கும் செழிப்பு உபதேசத்தில் இந்தத் தெளிவான வரையறை இல்லை. சார்பு பற்றிய புரிதல் இல்லை. உலகப்பிரகாரமான பண ஈர்ப்பைப் பேசுகிறவர்களின் கருத்துக்களை அப்படியே எடுத்துக்கொண்டு அவைகளை இயேசுவின் பெயரால் சில பைபிள் உதாரணங்களைக் கொண்டு போதிக்கிறார்கள். அவ்வளவே!

இன்றைய செழிப்பு உபதேசங்களின் சாராம்சம் என்னவென்றால் "பணமோ எல்லாவற்றுக்கும் உதவும், அந்தப் பணத்தை சம்பாதிக்க இயேசு உதவுகிறார்" என்பதே! இது நம்மையுமறியாமல் உலகப்பொருளை சார்ந்துகொள்ளச் செய்யும் உபதேசம். இது ஆபத்தானதல்லவா? இயேசுவின் பெயராலேயே பிரசங்கித்தாலும் அவர் தரும் ஆசீர்வாதமாகிய பணம் மட்டுமே ஆதாரம் என்கிற எண்ணத்தை நம்முடைய பிரசங்கங்கள் உருவாக்கிவிட்டால் அதைக் கேட்கும் விசுவாசிகள் பரலோக ராஜ்ஜியத்தையும் அதன் வாழ்க்கை முறையையும் அறிந்துகொள்ள முடியாத பரிதாப நிலைக்குத் தள்ளப்படுவார்கள். சபைக்குள் ஆடினாலும், பாடினாலும், குதித்தாலும் ஆவிக்குரிய வாழ்க்கையில் செயலற்றவர்களாக மாறிவிடுவார்கள். தேவனால் அவர்களைப் பயன்படுத்த முடியாது.

"கர்த்தரைச் சார்ந்துகொள், உலகப்பொருளை அடிமைகொள்" என்பதே உண்மையான செழிப்பு உபதேசம். எங்கள் சபையில் இதைத்தான் பிரசங்கிக்கிறார்கள் என்று நீங்கள் சொன்னால், மிக்க

மகிழ்ச்சி, நீங்கள் சரியான இடத்தில்தான் இருக்கிறீர்கள். "பணத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பேன்" என்பதே நாம் கேட்கும் பிரசங்கமாகவும், நம்முடைய வாழ்க்கை அனுபவமாகவும் இருக்கட்டும்!

மொத்தத்தில் செழிப்பு உபதேசமானது பணத்தை மையப்படுத்தியும் இருக்கக்கூடாது, சுயத்தை அதாவது தனிநபர்களை மையப்படுத்தியும் இருக்கக்கூடாது, அது சபையை மையப்படுத்தி இருக்க வேண்டும். **கிறிஸ்துவின் சரீரம் செழிப்பாக வேண்டும். அப்போது அதன் அங்கத்தினராகிய நாமும் செழிப்பாக இருப்போம்.** அது எப்படி என்கிற புரிதலை ஆவியானவரின் துணையோடு இனிவரும் அத்தியாயங்களில் தர முயற்சிக்கிறேன்.

## அத்தியாயம் 3: நம்மைவிட்டு எடுபடாத நல்ல பங்கு

பணம் மட்டுமே செழிப்பு அல்ல, செழிப்பில் இன்னொரு மிக முக்கியமான பகுதியை நாம் இந்த அத்தியாயத்தில் தியானிக்கப்போகிறோம்.

மனித உடலை upgrade செய்ய முடியும் என்று அறிவியலாளார்கள் நம்புகிறார்கள். மனித உடல் மறுரூபமடைவதைக் குறித்து வேதமும் பேசுகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது தனது பழைய உடலை களைந்து போட்டுவிட்டு புதிய உடலைத் தரித்துக்கொள்ளவில்லை. அவரது அதே பழைய உடல்தான் மறுரூபமானது, அதாவது தனது உட்சபட்ச மகிமைக்கு upgrade ஆனது. தேவனுடைய பிள்ளைகளான நம் அத்தனை பேருடைய உடல்களையும் அதே போல upgrade செய்யப்போவதாக கர்த்தர் நமக்கு வாக்கருளியிருக்கிறார் (1 கொரி 15:51,52, 2 கொரி 3:18, பிலி 3:21)

கிறிஸ்தவமும் அந்த வாக்குத்தத்தத்தை நம்புகிறது. ஆனால், மறுரூபம் என்றவுடன் நமக்கு மரணத்துக்குப் பின் கிடைக்கும் புது சரீரம்(1 கொரி 15:35-44), அல்லது வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்போது நடக்கும் மறுரூபம்(1 கொரி 15:51) மட்டுமே நமக்குத் தெரிந்திருக்கிறது. அதுவும் உண்மைதான், ஆனால் அதே நேரத்தில் கிறிஸ்துவின் சாயலின் மீது கண்களைப் பதிய வைத்து, மனம் புதிதாகிறதினால் இந்த பூமியிலேயே படிப்படியாக மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாவதைப் பற்றியும் வேதம் பேசுகிறது(2 கொரி 3:18, ரோம 12:2). அந்த மறுரூபம் எதற்கு? கர்த்தருடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தத்தை அறிந்து, அதை இந்த பூமியில் செயல்படுத்தவே அந்த மகிமையான மறுரூபம் நமக்கு உதவுகிறது.

பாவத்தால் விழுந்துபோன மனிதனுடைய உடல் இயல்பாக கீழ்நோக்கிய பயணத்தில் இருக்கிறது. அந்தக் கீழ்நோக்கிய பயணத்தின் முடிவு "பிணம்" என்ற இறுதிநிலை. அதே நேரத்தில் உடல் மேல்நோக்கிய பயணம் செய்தால் அதன் உச்சம் உயிர்தெழுந்த கிறிஸ்துவின் சரீரத்துக்கு ஒப்பான மகிமை (பிலி 3:21). இப்படி upgrade ஆன சரீரங்களால் சுவர்களை ஊடுருவிச் செல்ல முடியும் (யோவா 20:26). நினைத்த நேரத்தில் இருக்குமிடத்திலிருந்து மறைந்துபோக முடியும் (லூக் 24:31). அந்த சரீரம் திறக்கப்பட்ட ஆவிக்குரிய கண்ணைப் பெற்றிருக்கும், இந்த முப்பரிமாண மாயையிலிருந்து விடுபட்டு பரலோகம் என்னும் உயர்பரிமாணத்தோடு இணைக்கப்பட்டிருக்கும்.

தேவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் படைத்தபோது அவன் உடலை தனது உட்சபட்ச மகிமையில் படைக்கவில்லை. அவனை neutral-ஆக வைத்து, திரித்துவ தேவனாகிய அவரோடு தொடர்ந்து ஐக்கியத்தில் நிலைத்திருப்பதன் மூலமும், ஜீவவிருட்சதின் கனியை தொடர்ந்து புசிப்பதன் மூலமும் 1st gear, 2nd gear, 3rd gear என்று அவனை படிப்படியாக upgrade செய்ய திட்டமிட்டிருந்தார். ஆனால் சாத்தானோ தந்திரமாக reverse gear போடவைத்து மரணப்படுகுழியில் தள்ளிவிட்டான்.

இதை எப்படி சொல்கிறீர்கள் என்று கேட்டால், தேவன் மனிதனை எடுத்த எடுப்பிலேயே உட்சபட்ச மகிமையோடு படைத்திருந்தாரானால் அதை ஏவாள் அறிந்திருப்பாள். இனி தனக்கு எந்த upgradation-னும் தேவையில்லை என்பது அவளுக்குத் தெரிந்திருக்கும். சர்ப்பமும் அவளை "நீங்கள் தேவர்களைப் போலாவீர்கள்" என்று சொல்லி ஏமாற்றியிருந்திருக்க முடியாது. தான் உச்சபட்ச மகிமை நிலையை அடைய, அந்த விலக்கப்பட்ட கனியின் மூலம் ஏதோ ஒரு free upgrade கிடைக்கிறதென நினைத்து ஏவாளும், ஆதாமும் அதை உண்டு, upgradation code-க்குப் பதிலாக "பாவம்" எனும் வைரஸை டவுன்லோடு செய்து கொண்டனர்.

தனது உடலுக்கு கீழ்நோக்கிய பயணமும் அதன் விளைவாக முதுமையும், பெலவீனமும், முடிவாக மரணமும் இருக்கிறதென்று மட்டும் இன்று கிறிஸ்தவர்களுக்குத் தெரிந்திருக்கிறதே தவிர தன் உடலால் மேல்நோக்கிய ஒரு பயணத்தைச் செய்யமுடியும் என்கிற அறிவுகூட இல்லை. வேதம் "மறுரூபம்" என்று சொல்வதை ஏதோ நித்தியம் சம்பந்தப்பட்ட, பரலோகம் சம்பந்தப்பட்ட விஷயம் என்ற அளவில் மட்டும் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அக்காலத்து உலக ஞானிகளும், யோகிகளும் அதை உணர்ந்து சில உடல் மற்றும் மனப்பயிற்சிகளைப் பின்பற்றி அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். இதைத்தான் "அட்டமாசித்தி" என்பார்கள். அட்டமாசித்தி என்றால் எட்டு திறமைகள் என்பது பொருளாகும். எவ்விடத்திலும் தடையின்றி சஞ்சாரம் செய்தல் (பிராத்தி), உடலை இலேசாக்கி தண்ணீரின் மேல் நடத்தல் (லகிமா), உருவத்தை மாற்றிக்கொள்ளுதல், கூடுவிட்டு கூடு பாய்தல் (பிரகாமியம்), மிருகங்கள் மற்றும் பறவைகளை வசப்படுத்தி ஆளுதல் (வசித்துவம்) போன்றவை இதில் அடக்கம். இது சரியா தவறா என்கிற விவாதத்துக்குள் நான் செல்ல விரும்பவில்லை. கடுமையான உடல் மற்றும் மனப்பயிற்சிகளால் மேற்கண்ட விஷயங்களை ஓரளவு சாத்தியப்படுத்த முடியம் என்பது மெய்பிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் இங்கு உதாரணமாகக் காட்ட விரும்புகிறேன்.

உலகின் எல்லாக் கலாச்சாரங்களிலும் பண்டய காலத்தில் இதுபோன்ற அசாத்தியமான வாழ்க்கை வாழ்ந்த மனிதர்கள் தனியாகவோ, குழுவாகவோ இருந்திருக்கிறார்கள். இதுபோன்ற விஷயங்களை கிறிஸ்தவர்கள் பொதுவாக "பிசாசின் கிரியைகள்" என்று சொல்லி புறந்தள்ளிவிடுவார்கள். ஆனால் இதற்குப் பின்பாக கடுமையான உடல் மற்றும் மனப்பயிற்சிகள் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆக, சராசரி மனித சரீரத்தை சில பயிற்சிகளின் மூலம் மேலும் மேம்பட்ட நிலைக்கு ஓரளவுக்கேனும் கொண்டு செல்லக்கூடிய அறிவியல் ஒன்று அக்காலத்தில் இருந்திருக்கிறது என்பது இதன் மூலம் விளங்குகிறது. அப்படியெனில் அந்த அறிவியலை பொதுஜனங்களின் கைக்கு சேரவிடாமல் மறைத்தது யார்? மறைத்ததற்கான நோக்கம் என்ன?

விசுவாசிகளான நமக்கு அந்த அறிவியல் தேவையில்லை, நம்முடைய உடலை மறுரூபப்படுத்தும் உரிமையும், கடைமையும் கர்த்தருக்கு மட்டுமே இருக்கிறது. ஆனால் "நீங்கள் தேவர்களைப்போல இருப்பீர்கள்" என்று சொல்லி மனிதனுக்கு ஆசைவார்த்தை காட்டிய சாத்தான் குறைந்தபட்சம் தன்னை நம்பி, தன்னைப் படைத்தவரைப் பகைத்துக்கொண்ட மனிதகுலத்துக்கு அந்த அறிவியலைக் கொடுத்திருக்கலாமில்லையா? அதுவும் மனிதன் தன்னுடைய சுய முயற்சியால் பெற்றுக்கொண்ட, தேவனால் அங்கீகரிக்கப்படாத அறிவுதானே? அதை மனிதனுக்குக் கொடுத்து அவர்களை தேவர்களைப்போல் ஆக்கி, அதன் மூலம் அவன் தேவனைப் பழிவாங்கியிருக்கலாம் அல்லவா? ஆனால் வஞ்சக சாத்தான் அதைச் செய்யவில்லை.

ஏன் செய்யவில்லை? அந்த அறிவியலை மனிதனுக்குத் தந்தால் அவன் இனி தேவனைச் சார்ந்திருக்க மாட்டான். அதுமட்டுமல்ல அவன் தன்னையும் (சாத்தான்) சார்ந்திருக்க மாட்டான். அப்படி நடக்கக்கூடாது. மனிதன் தேவனைச் சார்ந்திருக்கக்கூடாது, ஆனால் தன்னை (சாத்தான்) முழுக்க முழுக்க சார்ந்திருக்க வேண்டும் அப்படியானால் என்ன செய்வது?

ஒரு வஞ்சகமான மாற்று அறிவியலை மனித சமுதாயத்துக்குத் தரலாம். அதில் இருக்கும் வஞ்சகம் என்ன தெரியுமா? அந்த மாற்று அறிவியலின் எல்லா வளர்ச்சிகளுமே மனித சரீரத்துக்குப் புறம்பானவை. அதாவது நீ ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்ல வேண்டுமா? Upgrade ஆன மனித உடலால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு நொடியில் பயணிக்க முடியும். ஆனால் உனக்கு அந்த அறிவியல் வேண்டாம். "இந்தா புடி ஒரு வாகனம், அந்த வாகனத்தை வாங்கவும், தொடர்ந்து பயன்படுத்தவும் நீ என்னைத்தான் சார்ந்திருக்க வேண்டும்.

தொலைவில் உள்ளவர்களோடு தொடர்புகொள்ள வேண்டுமா? Upgrade ஆன மனித உடலால் எண்ண அலைகள் மூலம் தூரத்திலுள்ள இன்னொருவருடன் தொடர்புகொள்ள முடியும். ஆனால் உனக்கு அந்த அறிவியல் வேண்டாம், "இந்தா புடி மொபைல் போன், இதை வாங்கவும், பயன்படுத்தவும் நீ என்னைத்தான் சார்ந்திருக்க வேண்டும். இன்னும் உனக்கு வேறு என்னென்ன வசதிகளெல்லாம் வேண்டும்? எல்லாவற்றுக்கும் கருவிகள் செய்து தருகிறேன். உன் உடல் மட்டும் அப்படியே இருக்கட்டும், ஒரு இஞ்ச் கூட மேல்நோக்கிய பயணத்தில் வளர வேண்டாம், வளரவும் கூடாது". இதுதான் சாத்தானின் வஞ்சகம்.

மனிதனை முழுக்க முழுக்க தன்னைச் சார்ந்துகொள்ள வைப்பதன் மூலம் அவனை வைத்தே தன்னுடைய ராஜ்ஜியத்தைக் கட்டிக்கொள்ள முடியும், இன்னொரு பக்கம் தான் கொடுத்த கருவிகளையெல்லாம் தான் நினைத்தால் எப்பொழுது வேண்டுமானாலும் மனிதனிடமிருந்து பிடுங்கிக்கொள்ளவும் முடியும். சற்று கற்பனை செய்துபாருங்கள், நம்மிடமுள்ள அனைத்தையும் பிடுங்கிக் கொண்டால் அடுத்த வினாடியே நாம் மறுபடியும் கற்கால மனிதர்களாகிவிடுவோம். நாம் கொண்டாடும் அறிவியல் வளர்ச்சிகள் அத்தனையும் நமக்குப் புறம்பாகத்தான் நடந்திருக்கிறது, நாம் இன்னும் வெறுங்கையர்கள்தான். தாயின் கர்ப்பத்தில் நிர்வாணிகளாய் வந்தோமில்லையா? அதே நிலையில்தான் திரும்பிப் போகிறோம்.

ஆனால் கர்த்தரோ நம்மைவிட்டு எடுபடாத நல்ல பங்கை நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார்(லூக் 10:42). நாம் அடையப்போகும் மறுரூபத்தை சாத்தானால் நம்மைவிட்டுப் பிடுங்கவே முடியாது. செழிப்புகளுக்கெல்லாம் மேலான செழிப்பு இதுதான்!

அப்படியானால் நாமெல்லோரும் கிறிஸ்துவைப் போல தண்ணீரில் நடக்க வேண்டும், திடீரென தோன்றவும் மறையவும் வேண்டும், சுவர்களை ஊடுருவி நடக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறீர்களா பிரதர்? இதென்ன புதுவிதமான உபதேசமாக இருக்கிறது? இங்கு ஏற்கனவே இருக்கும் கள்ள உபதேசமெல்லாம் போதாதா? என்று நீங்கள் கேட்கலாம். நான் அப்படிச் சொல்ல வரவில்லை. சபை அப்படிப்பட்ட உச்சபட்ச மகிமையை அடையத்தான் போகிறது. ஆனால் அதற்கு இன்னும் பல ஆண்டுகளோ, சில நூற்றாண்டுகளோகூட ஆகலாம். சில விசுவாசத் தலைமுறைகள் கடந்து செல்லலாம். கடைசியில் மூளை, இரத்தம், நாடி, நரம்பெல்லாம் வசனம் ஊறிய தேவபுத்திரரின் கூட்டம் ஒன்று உருவாகும். அவர்கள் சிஸ்டத்துக்குள் இருக்கும் ஆசீர்வாதங்களை ஒட்டுமொத்தமாக பிசாசிடமிருந்து பிடுங்கிக் கொண்டவர்களாக மாத்திரமல்ல, உடலில் மேல்நோக்கிய வளர்ச்சிபெற்ற முழு மனிதர்களாக, கிறிஸ்துவின் பூரண சாயலுக்கு ஒப்பான சாயலைப் பெற்றிருப்பார்கள்.

அவர்களை கட்டுப்படுத்தவோ, எதிர்கொள்ளவோ சாத்தானால் முடியவே முடியாது. இது நாளையோ அல்லது நாளை மறுநாளோ நடக்கப்போகிற விஷயமல்ல. ஆனால் இன்றே அதற்கான பாதையில் ஆவியானவரின் வழிநடத்துதலோடு பயணிக்கத் தொடங்க வேண்டும். இந்தத் தலைமுறைக்கு என்ன வளர்ச்சி தேவையோ அந்த வளர்ச்சியை ஆவியானவர் நமக்குள் கொண்டுவர நாம் அவரை அனுமதிக்க வேண்டும். ஏனெனில் நம்முடைய தோள்களில் ஏறித்தான் நமது அடுத்த விசுவாசத் தலைமுறை பயணிக்க வேண்டும்.

சரி, கிறிஸ்துவுக்கு ஒப்பான பூரண வளர்ச்சி என்பது எப்படி சாத்தியம்? ஒரு வழி, ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது கிறிஸ்துவையே நோக்கிப் பார்ப்பது மட்டுமே! வேறு வழியே இல்லை. இதற்கு முன்னோட்டமாக புதிய ஏற்பாட்டில் ஒரு அருமையான பாடத்தை கர்த்தர் நமக்கு நடத்திக் காட்டியிருக்கிறார். கர்த்தர் தண்ணீரில் நடந்தபோது அதைப் பார்த்து தானும் நடக்க ஆசைப்பட்ட பேதுருவையும் நடக்க வைத்தாரல்லவா? பேதுரு தண்ணீரில் நடந்தது எப்படி சாத்தியப்பட்டது? கர்த்தர் பேதுருவின் உடலில் மாற்றம் கொண்டுவந்தாரா? அல்லது சூழலில் மாற்றம் கொண்டுவந்தாரா? கர்த்தர் பேதுருவின் உடலை இலேசாக்கியதன் நிமித்தம்தான் பேதுருவால் நடக்க முடிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அது எப்படி நடந்தது? அவர் இயேசுவின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது வரை அவர் உடலில் ஒரு தற்காலிக upgradation நடந்து அவர் தண்ணீரில் நடந்தார். முகத்தைத் திருப்பி சூழலைப் பார்த்தபொழுதோ உடல் மீண்டும் neutral-க்கு வந்து மூழ்கத் தொடங்கினார்.

கிறிஸ்துவை நோக்கிப் பார்க்க, பார்க்க, பார்க்க நம் உடல் மறுரூபமடையத் தொடங்கும்..

கிறிஸ்துவுக்கு ஒப்பான பூரண வளர்ச்சி என்பதை நம்மவர்கள் கிறிஸ்துவைப் போல "சுபாவ மாற்றம்" என்ற அளவில் மட்டுமே நம்புகிறார்கள். "பூரண" வளர்ச்சி என்பதன் பொருள் என்ன? அவரை விசுவாசிக்கிற நாம் அவர் செய்கிற "கிரியைகளைத்" நாமும் செய்ய வேண்டும், அவைகளைப் பார்க்கிலும் "பெரிய கிரியைகளையும்" செய்ய வேண்டும் (யோவா 14:12) அது நம் சொந்த முயற்சிகளால் நடக்காது. அதற்கான ABC-ஐ இப்பொழுது இருந்தே கற்க வேண்டும், அதை எந்த சபையிலும், எந்த வேதாகமக் கல்லூரியிலும் கற்றுத்தரமாட்டார்கள். நம்மை விட்டு எடுபடாத அந்த நல்ல பங்கை இயேசுவின் பாதத்தில் அமர்ந்துதான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்குத்தான் அவர் நம்மை அழைக்கிறார்.

"இங்கே ஏறிவா (வெளி 4:1)"

## அத்தியாயம் 4: பழிதீர்க்கச் சொல்லும் தேவன்

உங்கள் சத்துருக்களை மன்னியுங்கள் என்று சொன்ன கர்த்தர், மன்னிப்பின் உச்சத்தை சிலுவையில் செய்து காட்டியவர் ஒரே ஒரு நபரைக் குறித்து மட்டும் "அவளை விட்டுவிடாதே, இரக்கம் காட்டாதே, இரட்டிப்பாக பழிவாங்கு, அவள் உனக்குச் செய்தபடி அவளுக்கு இரட்டிப்பாகத் திருப்பிச் செய்" என்று புதிய ஏற்பாட்டு விசுவாசிகளைப் பார்த்து கூறுகிறார்.

யார் மீது அவருக்கு அவ்வளவு கோபம்? யாரை அவ்வளவு உக்கிரமாக பழிவாங்கச்சொல்லி நமக்குக் கட்டளையிடுகிறார்?

பணத்திற்குப் பின்னால் ஒரு ஆள்தத்துவம் இருக்கிறது என்றும் அந்த ஆவியின் பெயர் "மேமன்" என்றும் பார்த்தோமல்லவா? அதேபோல இந்த உலக சிஸ்டத்துக்குப் பின்னாலும் ஒரு ஆவி இருக்கிறது. அது மேமனை விடப் பெரியது. அந்த ஆவியைத்தான் **"பாபிலோன் மகா வேசி"** என்று வேதம் குறிப்பிடுகிறது.

இது கர்த்தர் வாங்கும் பழி; அதினிடத்தில் பழிவாங்குங்கள்; அது செய்ததுபோலவே நீங்களும் அதற்குச் செய்யுங்கள்(எரே 50:15)

அதின் கிரியைக்குத்தக்க பலனை அதற்குச் சரிகட்டுங்கள்; அது செய்ததின்படியெல்லாம் அதற்குச் செய்யுங்கள் (எரே 50:29)

பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான்.  உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான் (சங் 137:8,9)

பிரதர், இதெல்லாம் பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலருக்குச் சொன்னது. பாபிலோன் தேசத்தால் சிறையாகக் கொண்டுபோகப்பட்ட யூதர்களை நோக்கி கர்த்தர் தங்கள் அரசியல் எதிரியான பாபிலோனைப் பழிவாங்கச் சொல்லுகிறார். இதைப்போய் ஒரு ஆவியோடு ஒப்பிடுகிறீர்களே?

அப்படியா, சரி புதிய ஏற்பாட்டுக்கு வாருங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 18:4-6 வசனங்களை வாசியுங்கள்:

என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார். அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்.

இங்கு "என் ஜனங்களே..." என்று கர்த்தர் யாரைக் குறிப்பிடுகிறார்? புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நம்மைத்தான்.

வேதாகமத்தில் அரிதாக சில முக்கியமான விஷயங்கள் Bold letter-இல் கொடுக்கப்பட்டிருக்கும் கவனித்திருக்கிறீர்களா? "கர்த்தர்" எனும் நாமம் எங்கெல்லாம் வருகிறதோ அது அத்தனையும் Bold letter-இல் கொடுக்கப்பட்டிருக்கும். அதைத் தவிற வேறு சில இடங்களில் மட்டுமே அரிதாக நீங்கள் Bold letter-ஐக் காணமுடியும். கர்த்தர் தான் வன்பகையாய் பகைக்கும் அந்த எதிரியின் பெயரை நமக்கு Bold letter-இல் எழுதி அறிமுகப்படுத்தியிருக்கிறார். தயவு செய்து உங்கள் வேதாகமத்தைத் திறந்து வெளிப்படுத்தின விசேஷம் 17:5-ஐப் பாருங்கள்.

மேலும், **இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்** என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது (வெளி 17:5)

தேவனுடைய வேதமே Bold letter-இல் எழுதி அறிமுகப்படுத்தியிருக்கும் இந்த பயங்கரமான எதிரியை ஏன் நம் சபைகள் நமக்கு இன்னும் சரியாக, தெளிவாக அறிமுகப்படுத்தவில்லை? அந்த எதிரியை அழிக்கும் மாபெரும் பொறுப்பை தேவன் நமக்குக் கொடுத்திருப்பது குறித்து ஏன் எந்த சபையுமே வாய் திறப்பதில்லை? ஏன் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு இதைக் குறித்த குறைந்தபட்ச அறிவுகூட இல்லை?

அது சரி, இந்த ஆவியை நாம் பழிவாங்குவதற்கும், சபையும் சபையோடு சேர்ந்து நாமும் செழிப்படைவதற்கும் என்ன சம்பந்தம்? **அவளைப் பழிவாங்குவது நாம் செழிப்படைவதோடு சம்பந்தமுடையதுதான்.** அவளிடமிருக்கும் நம்முடைய செல்வங்களைப் பிடுங்குவதுதான் நாம் செழிப்படைவது. உங்கள் தாத்தா காலத்து சொத்துக்களையெல்லாம் ஒருவன் பிடுங்கிக்கொண்டான் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் மிகவும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுகிறீர்கள். பல வருடங்கள் கோர்ட்டில் கேஸ் நடந்து உங்கள் பக்கம் தீர்ப்பாகிறது. அவனிடமிருந்து அத்தனை சொத்துக்களும் பிடுங்கி உரிமைக்குரிய வாரிசாகிய உங்களுக்குக் கொடுக்கப்பட்டால் நீங்கள் செழிப்படைவீர்கள்தானே! அது செய்ததின்படியெல்லாம் அதற்குச் செய்யுங்கள் (எரே 50:29) என்று வேதம் கூறுவதன் அர்த்தம் அவள் உங்களிடமிருந்து பிடுங்கிய உங்கள் உரிமைச் சொத்துக்களை நீங்கள் அவளிடமிருந்து பிடுங்குங்கள் என்பதாகும்.

அதுமட்டுல்ல, அவளை அம்பலப்படுத்தவும், அவளது பில்லி சூனியங்களை சிதறடித்து, அவளை மேற்கொள்ளவும் வேண்டும். அதைக்குறித்து பின்னால் தியானிப்போம். இப்போது இந்த பாபிலோன் வேசியின் ஆவியை குறித்த ஒரு அறிமுகத்தைக் காண்போம்.

வெளிப்படுத்தல் 17:1-3 வசனங்களைப் பார்ப்போம்:

ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே; அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன் என்று சொல்லி;

ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான். அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்.

ஆம், அந்த ஸ்திரீயைக் காட்டுகிறேன் என்று அப்போஸ்தலனாகிய யோவானை அழைத்துச் சென்ற தூதன் அவனை எருசலேம் தேவாலயத்துக்கு அழைத்துச் செல்லவில்லை, அல்லது அந்த ஸ்திரீ இருக்கும் பாபிலோனுக்கும் அழைத்துச் செல்லவில்லை, **மாறாக வனாந்தரத்துக்கு அழைத்துக் கொண்டுபோனான்** என்று 3-ஆம் வசனம் சொல்லுகிறது.

வனாந்தரம் மனிதன் தேவனோடு தனிமையில் சஞ்சரித்து, அவரிடமிருந்து படிக்கும் இடம். வனாந்தரத்தில் பழகிய மனிதனுக்கும் இந்த ஸ்திரீயின் ஆவிக்கும் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் ஒரு ஜென்மப்பகை உண்டு. அதைப்பற்றி பின்னர் எழுதுகிறேன்.

பாபிலோன் எனும் இடத்தோடு தொடர்புபடுத்தி அவள் அறியப்பட்டாலும் வேதம் அவளுக்குக் கொடுத்திருக்கும் தனிப்பெயர் **"வானராக்கினி (Queen of Heaven)"** என்பதாகும். எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் இவள் பெயர் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது (எரே 7:18, எரே 44:17,18,19,25). வானராக்கினி என்றால் "விண்ணரசி" என்று பொருள், உண்மையில் விண்ணில் எந்த அரசியும் இல்லை, விண்ணுக்கும் மண்ணுக்கும் கர்த்தர் ஒருவர் மட்டுமே மகாராஜாவாக இருக்கிறார். அவரின் அதிகாரத்துக்குக் கீழ்தான் எந்த துரைத்தனங்களும் அதிகாரங்களும் செயல்படமுடியும்.

அது சரி, யார் இந்த வானராக்கினி?

## வானராக்கினி: அதிகார வெறிபிடித்த ஆவி!

தேவனுக்கு திரித்துவம் இருப்பதுபோலவே சாத்தானுக்கும் ஒரு போலித் திரித்துவம் உண்டு. அந்த போலித்திரித்துவம் **சாத்தான், வானராக்கினி, அந்திகிறிஸ்து** என்பதாகும். அதாவது ஒரு பிதா, ஒரு மாதா, ஒரு குமாரன்...இந்த போலித் திரித்துவ வணக்கம் உலகத்தில் உள்ள பெரும்பாலான மதங்களில் உண்டு. அதாவது பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு அப்படியே எதிர்மறையான மாற்றாக இந்த வானராக்கினியின் ஆவி செயல்படுகிறது.

வரலாற்றில் இந்த போலித் திரித்துவம் முதல்முறையாக மனிதனுக்குள் வெளிப்பட்டது கூஷின் குமாரனும், நோவாவின் கொள்ளுப்பேரனுமான நிம்ரோத்(ஆதி 10:8) என்பவனது குடும்பத்தின் மூலமாகத்தான். இந்த நிம்ரோத் தேவனுக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாக இருந்ததாக ஆதி 10:9 சொல்லுகிறது. இவனுக்கு கில்காமேஷ் என்கிற வேறொரு பெயருமுண்டு. உலகின் ஆகப் பழைய செய்யுள் இலக்கியமாகக் கருதப்படும் Epic of Gilgamesh இவனைப்பற்றி புனையப்பட்ட நூல்தான்.

இந்த நிம்ரோத் உலகின் முதல் அரசன் என்று கருதப்படுகிறான். உலகின் முதல் நதிக்கரை நகர நாகரீகத்தை தோற்றுவித்தவனும் இவனே! இன்றைய ஈராக்கின் யூப்ரடிஸ் டைகரிஸ் நதிகளுக்கு இடையே இந்த நிம்ரோத் குடும்பத்தினர் உருவாக்கிய பாபிலோன் நாகரீகமே மனிதகுலத்தின்

முதல் நாகரீகமாகும். இது சுமேரிய நாகரீகம், மெசபதோமிய நாகரீகம் என்ற வேறு பெயர்களாலும் அறியப்படுகிறது, நீங்கள் சிறுவயதில் பள்ளியில் படித்திருக்கலாம்.

இந்த நிம்ரோத் மூலமாக சாத்தானின் ஆவியும், இவனது மனைவி செமிரமிஸ் என்பவளுக்குள் வானராக்கினியின் ஆவியும், அவர்களது மகன் தம்மூஸ் மூலமாக அந்திகிறிஸ்துவின் ஆவியும் முதன்முதலாக பூமியில் மனிதர்கள்மூலம் வெளிப்பட்டதாக நம்பப்படுகிறது. செமிரமிஸ் குறித்த எந்தக் குறிப்புகளும் வேதத்தில் இல்லை. தம்மூஸ் பற்றி எசேக்கியேல் 8:14 பேசினாலும் நிம்ரோத்தின் மகன்தான் தம்மூஸ் என்ற குறிப்பும் வேதத்தில் இல்லை.

அதுதான் வேதத்தில் இல்லை என்பதை நீங்களே சொல்லிவிட்டீர்களே, வேதத்தில் இல்லாதவற்றை ஏன் பேசுகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். சுமேரியப் பாரம்பரியக் கதைகளில் காணப்படும் சில விஷயங்கள் இந்த பூமியில் சாத்தானுடைய செயல்பாடுகள் பற்றி அறிந்துகொள்ள பெரிதும் மிகவும் உதவுகின்றன. நீங்கள் அறிந்துகொண்ட விஷயங்களை வேதாகம கருத்துக்களுடன் ஒப்பிடும்போது அவை அப்படியே பொருந்திப் போகின்றன. எனவே இந்தப் பகுதியில் வேதாகமத்தில் இல்லாத சில பாரம்பரிய மற்றும் வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுவேன். ஆனால் அவைகளைப் பயன்படுத்தி நான் எழுதும் காரியங்கள் வேத சத்தியத்துக்கு ஒருபொழுதும் புறம்பானதாக இருக்காது.

நிம்ரோத்தின் மனைவியும் உலகின் முதல் ராணியுமான செமிரஸின் இயற்பெயர் சம்முர்-அமாத், இதன் பொருள் "கடலின் பரிசு" என்பதாகும். இவளுக்குள் இருந்த வானராக்கினியின் ஆவிக்கும் கடலுக்கும்கூட ஒரு தொடர்புண்டு. அதை பின்னால் பார்ப்போம். இந்த செமிரமிஸ் உண்மையில் நிம்ரோத்தின் மனைவி அல்ல, நிம்ரோத்தின் தாய். நிம்ரோத்தின் தகப்பனான கூஷின் மனைவி.

நிம்ரோத் பூமியில் அதிகாரம் பொருந்திய நபராக உருவெடுத்தவுடன் அதிகார வெறிபிடித்த செமிரமிஸ் தன் மகனான நிம்ரோத்தையே திருமணம் செய்துகொண்டு பட்டத்து ராணியானாள். பின்பு ஒரு கட்டத்தில் எதிர்பாராதவிதமாக நிம்ரோத் மரணமடைந்த பின்னர், செமிரமிஸ் கைக்கு முழு ஆட்சி அதிகாரமும் வருகிறது, அந்த சமயத்தில் அவள் முறைதவறிய விதத்தில் கர்ப்பமாகி பின்னர் அதை மூடி மறைக்கவும், அரசு அதிகாரத்தைத் தக்க வைக்கவும் ஒரு புரளியைக் கிளப்பிவிட்டு அதை மக்களை நம்ப வைக்கிறாள். அதாவது தனது கணவன் நிம்ரோத் இறந்தபிறகு சூரிய கடவுளாக மாறிவிட்டதாகவும், அந்த சூரியகடவுளே தனது கர்ப்பத்தில் வந்து மகனாகப் பிறந்திருப்பதாகவும் சொல்ல அதை மக்களும் நம்பினார்கள். அப்படிப் பிறந்த மகன்தான் தம்மூஸ் என்பவன். அக்காலத்து மக்கள் நிம்ரோத்தை கடவுளாக வணங்கியதுபோல, செமிரமிஸையும், தம்மூஸையும் கடவுளாக வணங்கியிருக்கிறார்கள்.

என்ன இவ்வளவு அருவருப்பான கதையாக இருக்கிறதே என்கிறீர்களா? "வேசிகளுக்கும், பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்" என்றல்லவா வேதம் இவளுக்குள் இருக்கும் வானராக்கினியின் ஆவியைக் குறித்துச் சொல்லுகிறது! உள்ளே இப்படிப்பட்ட ஆவி இருக்க இவள் வாழ்க்கை மட்டும் பரிசுத்தமாகவா இருந்திருக்கும்? **அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வானராக்கினியின் ஆவி எந்த தரைமட்ட லெவலுக்கு வேண்டுமானாலும் இறங்கிச் செல்லும்.** நிம்ரோத் அரசை உருவாக்கியவன் என்றாலும் அரசை வெகுகாலம் கட்டி ஆண்டவள் இந்த செமிரமிஸ்தான். செமிரமிசுக்குள் புகுந்து இந்த உலக சிஸ்டத்தை தொடங்கி, அதை ஆளவும்

ஆரம்பித்த பாபிலோன் மகா வேசியின் ஆவி இன்றுவரை இந்த உலகை ஆண்டுகொண்டிருக்கிறது.

உலகம் முழுவதிலும் இந்த வானராக்கினி வணக்கம் பரவியிருக்கிறது. அவள் பல்வேறு கலாச்சாரங்களில் பல்வேறு பெயர்களால் வணங்கப்படுகிறாள். சில இடங்களில் சிங்கத்தின் மீது ஏறியிருக்கும் பெண்ணாக உருவகிக்கப்படுகிறாள். பிதாவாகிய தேவன் எப்படி பூமியில் குமாரன் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் செயல்படுகிறாரோ அப்படியே சாத்தானும் பூமியில் வானராக்கினியாகிய பாபிலோன் மகா வேசியின் ஆவி மூலமாகவும், அந்திகிறிஸ்துவின் ஆவி மூலமாகவும் செயல்படுகிறான்.

வானராக்கினி இந்த பூமியின் எப்படி தனது மேலாதிக்கத்தைச் செலுத்துகிறாள் என்பது குறித்து கர்த்தர் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். "திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே... அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே, அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன் (வெளி 17:1,6)"

இங்கே மூன்று காரியங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது:
முதலாவதாக பூமியின் ராஜாக்கள் அந்த ஸ்திரீயுடன் வேசித்தனம் பண்ணினார்கள் என்று வேதம் சொல்லுகிறது. இங்கு "வேசித்தனம்" என்கிற வார்த்தை உருவகமாகச் சொல்லப்படுகிறது. பூமியின் ராஜாக்கள் மனிதர்கள், பாபிலோன் மகா வேசி என்பது ஒரு சிஸ்டத்தையும் அதற்குப் பின்னால் இருக்கும் ஆவியையும் குறிப்பிடுகிறது. ஆகவே இது உடல்ரீதியான பாலுறவைக் குறிக்காமல் அந்த ஆவியின் அக்கிரமங்களில் அவர்கள் பங்குதாரர்கள் என்பதைக் குறிக்கிறது.

அப்படியானால் உலக நாடுகளின் பிரதமர்களும், அதிபர்களும் ஒரு ஆவியுடன் தொடர்பு வைத்திருக்கிறார்களா? என்ற கேள்வி தோன்றும். நிச்சயமாக இல்லை, உலக நாடுகளின் பிரதமர்களும், அதிபர்களும் நம்மைப்போன்ற மனிதர்களே. அவர்களில் நல்லவர்கள் பலர் உண்டு. அவர்கள் limelight-இல் இருப்பவர்கள். ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட ஒரு சிஸ்டத்துக்குள் குறிப்பிட்ட காலம் மட்டும் பணி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அவ்வளவே!

இந்த உலகத்தில் செல்வத்தையும், அதிகாரத்தையும் குவித்து வைத்திருக்கும் மனிதர்கள் பலர் limelight-க்கு வருவதில்லை. அவர்கள்தான் உலகில் உண்மையான அதிகாரவர்க்கமாக இருக்கிறார்கள். என்ன பிரதர், அங்க சுத்தி இங்க சுத்தி கடைசில இலுமினாட்டி கதைக்கு வந்துட்டீங்களே? என்று சிலர் கேட்பது புரிகிறது. இந்தத் தொடரில் நான் நிச்சயமாக conspiracy theory எதுவும் பேசப்போவதில்லை. வேதத்தைத்தான் பேசப்போகிறேன். ஆனால் ஆச்சரியம் பாருங்கள், இந்த conspiracy theory பேசும் அனைவரும் ஒத்த குரலில் சொல்லும் கருத்து இந்த இலுமினாட்டிகள் ஒரு அரசனுக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல, ஒரே ஒரு அரசிக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று சொல்கின்றனர். வேதத்தை அறியாத அவர்களுக்குத் தெரிந்திருக்கும் விஷயம் வேதத்தை அறிந்த கிறிஸ்தவர்களுக்கு தெரிவதில்லை என்பதே மிகவும் வேதனையான காரியம்.

ஆக, வானராக்கினியின் ஆவியோடு தொடர்புள்ள ராஜாக்கள் limelight-க்கு வருவதில்லை. இவர்கள் சுத்தமான, நயமான, கலப்படமில்லாத, அக்மார்க் சர்ப்பத்தின் வித்துக்கள். கிறிஸ்துவுக்கும், அவரது மணவாட்டி சபைக்கும் ஜென்மப்பகைவர்கள். இவர்களில் பெரும்பாலோனோர் பெருவணிகர்கள். பழைய ஏற்பாடானாலும் சரி, புதிய ஏற்பாடானாலும் சரி, வேதம் எப்பொழுதெல்லாம் பாபிலோன் வேசியைக் குறித்துப் பேசுகிறதோ அப்பொழுதெல்லாம் அது பெருவணிகர்களை அதிலும் குறிப்பாக கடல்வணிகர்களை அவளோடு தொடர்புபடுத்திப் பேசுவதை நீங்கள் வேதத்தில் காணலாம். இதைப்பற்றியும் விரிவாக பின்னால் எழுதுகிறேன்.

இரண்டாவது காரியம் அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே என்று அந்த வசனம் கூறுகிறது. பூமியின் குடிகள் அவளோடு வேசித்தனம் பண்ணவில்லை, ஆனால் அவளது வேசித்தனமாகிய மதுவின் போதையால் வெறிகொண்டிருந்தார்கள், அதாவது ஒரு matrix-க்குள் சிக்குண்டிருக்கிறார்கள். இவர்களது உடல்கள் சிறைப்படவில்லை, ஆனால் மனங்கள் சிறைப்பட்டிருக்கிறது. அவர்களது ஆவிக்குரிய கண் குருடாக்கப்பட்டு, சிந்தனை ஒரு வட்டத்துக்குள் அடைபட்டிருக்கிறது. அந்த வட்டத்தைத் தாண்டி அவர்களால் சிந்திக்க முடியாது. இந்த சிறைக்குள் இருந்து நமது சிந்தனையை விடுதலையாக்குவது கர்த்தரும், ராஜாதிராஜாவுமாகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து அருளிய **"சத்தியத்தால்"** மட்டுமே சாத்தியம் (யோவா 8:32).

மூன்றாவதாக, பூமியின் ஜனங்கள் அவளுடைய வேசித்தனமாகிய மதுவின் போதையால் வெறிகொண்டிருக்க அந்த ஸ்திரீயோ வேறு ஒரு போதையினால் வெறிகொண்டிருந்தாள் என்று 6-ஆம் வசனம் சொல்லுகிறது. "அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் தான் தரிசனத்தில் கண்டதை எழுதுகிறார். பரிசுத்தவான்களிலும் பிரத்தியோகமாய் அவள் பகைப்பது அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும்தான்.

**ஏனெனில் திரைமறைவில் இருட்டுக்குள் கிரியை செய்துகொண்டிருக்கும் அவளை குடுமியைப் பிடித்து இழுத்து, வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து அம்பலப்படுத்துகிறவர்கள் அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளுமே!** எனவேதான் வரலாற்றில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் இரத்தம் குடித்த பிசாசாக இவள் இருக்கிறாள். வேதத்தில் புதிய ஏற்பாட்டில் இவளை அம்பலப்படுத்தியது அப்போஸ்தலனாகிய யோவான், பழைய ஏற்பாட்டில் இவளைக் குறித்து ஏசாயா, எரேமியா, மற்றும் எசேக்கியேலின் புத்தகங்களில் குறிப்புகள் காணப்படுகிறன. இவர்கள் மூவரும் தீர்க்கதரிசிகள்!

பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்துக் களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே! என்று தூதன் சொன்னான் (வெளி 18:20).

எங்கெல்லாம் வானராக்கினியின் ஆவி கிரியை செய்கிறதோ அங்கெல்லாம் தேவன் தீர்க்கதரிசிகளை எழுப்புவதை நாம் காணமுடியும். ஏனெனில் தீர்க்கதரிசிகளை தேவன் வனாந்தரத்தில் பயிற்றுவிக்கிறார். வனாந்தரத்துக்கு இருக்கும் ஒரு மாபெரும் சிறப்பு என்னவென்றால் அது இந்த உலகத்தின் சிஸ்டம் செயல்படாத இடம். **இந்த உலகத்தின் சிஸ்டம் செயல்படாத இடத்தில் வாழப்பழகியவன் வானராக்கினிக்கு மிகவும் ஆபத்தான எதிரி.**

அவளுக்கு அவன் அடங்கமாட்டான், அவளும் அவனை விடமாட்டாள். எலியாவுக்கும் - யேசபேலுக்கும், யோவான் ஸ்நானகனுக்கும் - ஏரோதியாளுக்கும் நடந்த யுத்தம் அப்படிப்பட்டதுதான்.

வானராக்கினியின் ஆவி கண்ணுக்குத் தெரியாத இந்த உலகசிஸ்டத்தில் செயல்படுவது போலவே சில மனிதர்கள் மூலமாகவும் செயல்பட்டிருக்கிறது, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசாங்கங்களிலும், சபைகளிலும், நிறுவனங்களிலும், குடும்பங்களிலும் செயல்படுகிறது. அதிகார வெறிபிடித்த வானராக்கினியின் ஆவி எங்கு நுழைந்தாலும் அந்த இடத்தில் தலைமைப் பொறுப்பிலிருப்பவர்களுக்கு அடங்காது. ஏதாவது ஒரு ஜெகஜால வித்தை காட்டி அதிகாரத்தில் இருப்பவர்களை டம்மியாக்கி, தான் அந்த அதிகாரத்தைக் கைப்பற்றிவிடும்.

## அத்தியாயம் 5: ஆத்துமப் பிரதிகள்

பிசாசினால் பீடிக்கப்பட்டு பல துன்பங்களையும், வியாதிகளையும் அனுபவித்து, அலைக்கழிக்கப்பட்டு பின்னர் இயேசுவின் நாமத்தினால் விடுவிக்கப்படுகிறவர்களை நீங்கள் சபைகளிலும், சுவிசேஷக் கூட்டங்களிலும் பார்த்திருப்பீர்கள். இவர்கள் பாதிக்கப்பட்டவர்கள், பரிதாபத்துக்குரியவர்கள், விடுதலைக்காக ஏங்குபவர்கள், விடுவிக்கப்பட வேண்டியவர்கள்.

**ஆனால் இன்னொருவகை மனிதர்கள் இருக்கிறார்கள். சாத்தானுடைய ராஜ்ஜியத்தில் உயர்தரவரிசையில் இருக்கும் சில முக்கிய ஆவிகள் இப்படிப்பட்ட மனிதருக்குள் செயல்படுகின்றன.** அவற்றுள் முக்கியமானவை வானராக்கினியின் ஆவி மற்றும் அந்திகிறிஸ்துவின் ஆவி போன்றவைகள் ஆகும். இன்னும் வேறு சில ஆவிகளும் உண்டு அவற்றைப் பற்றி எழுத இங்கு சமயமில்லை. **இந்த நபர்கள் தெரிந்தோ, தெரியாமலோ துரைத்தன ஆவிகளை சுமந்து கொண்டு அவைகளின் சித்தத்தை நிறைவேற்றும் பாத்திரங்களாக பூமியில் உலவுகிறார்கள்.** இவர்கள் விடுவிக்கப்படுவது அரிது, ஏனெனில் இவர்கள் விடுதலையை விரும்புவதில்லை. ஆனாலும் இப்படிப்பட்டவர்களிலும் சிலர் கர்த்தருடைய கிருபையால் விடுவிக்கப்பட்டு சாட்சிகளாய் வாழ்ந்து மரித்த ஆதாரங்களும் உண்டு. கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை அல்லவா?

பொதுவாக பூமியில் செயல்படும் துரைத்தன ஆவிகளின் குறித்த குறிப்புக்கள் வேதத்தில் பல இடங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடப்பட்டிருக்கும். நீங்கள் ஆவியானவரின் உதவியோடு தேடி வாசித்தால் இந்தந்த ஆவியின் டெம்பிளேட் இதுதான். இது எந்த மனிதனைப் பிடித்திருக்கிறதோ அந்த மனிதனின் தன்மைகள் இப்படித்தான் இருக்கும், இவன் இப்படித்தான் சிந்திப்பான், இப்படித்தான் செயல்படுவான், இவனது வாழ்க்கை இந்த track-இல்தான் சென்று முடியும் என்பதை துல்லியமாக வரையறுத்துவிடலாம்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கும்கூட அவர்களுடைய வாழ்க்கையில் பல வேதாகமப் புருஷர்களின் வாழ்வில் நடந்த சில சம்பவங்கள் டெம்பிளேட் போல அப்படியே நடந்திருக்கும், நடந்துகொண்டிருக்கும். என்னுடைய வாழ்க்கையில் இதுபோல நடந்த சம்பவங்கள் நிறைய உண்டு. ஆனால் நாம் பல நேரங்களில் அவற்றை நிதானிக்காமல் கடந்துவிடுகிறோம்.

கர்த்தருடைய வேதத்துக்கு பல பரிமாணங்கள் உண்டு. அவற்றுள் ஒரு பரிமாணம் அது ஒரு "திரைக்கதை" போன்றது. ஒரு திரைக்கதையில் சில பாத்திரங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கும். அந்தந்தப் பாத்திரத்தின் தன்மைகள், அது பேசும் வசனங்கள், அந்தக் கதையில் அந்தப் பாத்திரத்தின் பங்கு, அது செய்யப்போகும் செயல்கள் அத்தனையும் ஏற்கனவே வரையறுக்கப்பட்டிருக்கும். வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு நடிகர்கள் அந்தப் பாத்திரங்களில் நடிப்பார்கள். அதுபோலத்தான் வேதாகமம் ஒரு மாபெரும் திரைக்கதை ஆகும். அதிலுள்ள சம்பவங்களும், பாத்திரங்களும் ஒரு சுழற்சி போல திரும்பத் திரும்ப நடந்துகொண்டிருக்கும் காலமும், நபர்களும் மட்டும் மாறிக்கொண்டிருப்பார்கள். இந்தக் கோணத்திலும் நீங்கள் வேதத்தை தியானித்துப் பாருங்கள். ஒரு புதிய பரிமாணம் விளங்கும்.

இந்த அத்தியாயத்தில் வானராக்கினி ஆவியின் டெம்பிளேட் குறித்துத்தான் பார்க்கப்போகிறோம். வேதத்திலும், சரித்திரத்திலும் வானராக்கினியின் டெம்பிளேட்டை அப்படியே வாழ்ந்த சிலரை உங்களுக்கு சுட்டிக்காட்டப்போகிறேன். அதற்கு முன்னால் இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பார்த்துவிட்டு கடந்து செல்லலாம். வானராக்கினியின் சிஸ்டம் எப்படி செயல்படுகிறது என்பதை கர்த்தர் தமது படைப்பின் மூலம் நமக்குக் காட்டிக்கொடுத்திருக்கிறார். இதை வேறுவிதமாகப் புரிந்துகொள்ள வைக்க ஒரு கற்பனையான நிகழ்வை உங்களுக்கு முன்வைக்கிறேன்.

### பாபிலோன் உலக சிஸ்டம் பூமியில் Install செய்யப்படுதல்:

ஆதாம் விழுந்துப்போன பின்னால் இந்த பூமியின் அதிகாரம் முழுவதும் சாத்தானின் கைக்கு வருகிறது. பூமியை தந்திரமாகக் கைப்பற்றியாகிவிட்டது, ஆனால் அதை நிர்வகிப்பது எப்படி? ஒரு கட்டமைப்பை உருவாக்கி அதைக்கொண்டு மனுக்குலத்தை காலங்காலமாக கட்டுபடுத்தி அவனை ஆளுகை செய்ய வேண்டும். சாத்தானுக்கு சொந்த புத்தியில்லை, கர்த்தரிடமிருந்துதான் எதையாகிலும் காப்பியடித்துக் கற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய படைப்புகள் அத்தனைக்கும் பின்னால் இருக்கும் நுட்பத்தை ஆராய்ந்து பார்க்கிறான். மிருகங்கள், பறவைகள், ஊர்வன, பூச்சிகள்...

அடடா... பூமியில் வேறெங்கும் இல்லாத மிக மிக வித்தியாசமான கட்டமைப்பு ஒன்று அவன் கண்களில் படுகிறது. ஆகா! இதுதான் நான் எதிர்பார்த்தது, பூமியை என் கட்டுப்பாட்டில் வைத்து ஆண்டுகொள்ள இதைவிட சிறந்த நுட்பம் வேறெதுவும் இல்லை என்ற முடிவுக்கு வருகிறான்... அது என்ன தெரியுமா?

**"தேன்கூடு..."**

ஒரு தேன்கூட்டில் தேனீக்களின் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிஸ்டத்தை வடிவமைக்க வேண்டுமென்றால், தன்னுடைய போலித் திரித்துவத்தில் இரண்டாம் நபராகிய வானராக்கினியே சிறந்த தெரிவு! இது ஒரு கற்பனையான வர்ணனையாக இருந்தாலும் இதற்குப் பின்னால் நான் விளக்கும் விஷயம் உண்மை. கர்த்தர் இந்த பூமியைப் படைத்தபோது அவர் மனிதனுக்கென்று உருவாக்கி வைத்திருந்த சிஸ்டம் வித்தியாசமானது, ஆசீர்வாதமானது. ஆனால் ஆதாமின் விழுகைக்குப் பின்பு ஏதோ ஒரு நாளில் பூமியில் பாபிலோன் வேசியின் சிஸ்டம் Install செய்யப்படுகிறது. அதைத்தான் சகரியா 5-ஆம் அதிகாரம் 5-11 வசனங்கள்

உருவகமாகக் கூறுகின்றன. இங்கு ஒரு கர்த்தருடைய தூதனானவர் சகரியா தீர்க்கதரிசிக்கு ஒரு தரிசனத்தைக் காட்டுகிறார்.

நீ உன் கண்களை ஏறெடுத்து, புறப்பட்டு வருகிறதை என்னவென்று பார் என்றார். அது என்னவென்று கேட்டேன்; அதற்கு அவர்: அது புறப்பட்டுவருகிறதாகிய ஒரு மரக்கால் என்றார். பின்னும் அவர்: பூமியெங்கும் இதுதான் அவர்களுடைய கண்ணோக்கம் என்றார்.

இதோ, ஒரு தாலந்து நிறையான ஈயமூடி தூக்கிவரப்பட்டது; மரக்காலின் நடுவிலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள். அப்பொழுது அவர்: இவள் **அக்கிரமக்காரி** என்று சொல்லி, அவளை மரக்காலுக்குள்ளே தள்ளி ஈயக்கட்டியை அதின் வாயிலே போட்டார்.

அப்பொழுது நான் என் கண்களை ஏறெடுத்து, இதோ, புறப்பட்டுவருகிற இரண்டு ஸ்திரீகளைக் கண்டேன்; அவர்களுக்கு நாரையின் செட்டைகளுக்கொத்த செட்டைகள் இருந்தது; அவர்கள் செட்டைகளில் காற்றிருந்தது; இவர்கள் மரக்காலை பூமிக்கும் வானத்துக்கும் நடுவாய்த் தூக்கிக்கொண்டு போனார்கள்.நான் என்னோடே பேசின தூதனை நோக்கி: இவர்கள் மரக்காலை எங்கே கொண்டுபோகிறார்கள் என்று கேட்டேன்.

**அதற்கு அவர் சிநெயார் தேசத்திலே அதற்கு ஒரு வீட்டைக் கட்டும்படிக்கு அதைக் கொண்டுபோகிறார்கள்; அங்கே அது ஸ்தாபிக்கப்பட்டு, தன் நிலையிலே வைக்கப்படும் என்றார்** (சக 5:5-11)

இங்கு குறிப்பிடப்படும் சிநேயார் தேசம் என்பது பாபிலோனைக் குறிக்கும் இடம்.

சகரியா தரிசனத்தில் கண்ட இந்த சம்பவம் ஆவிக்குரிய உலகில் நடைபெற்ற பிறகுதான் ஆதியாகமம் 11-ஆம் அதிகாரத்தின் சம்பவங்கள் தொடங்குகின்றன. அதன் துவக்கமாகத்தான் நிம்ரோத் குடும்பம் எழும்புகிறது. அதன் பின்னர் நடந்த சம்பவங்களை கீழ்க்காணும் வேதபகுதி விளக்குகிறது.

பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்தது. ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருந்தார்கள். அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்...(ஆதி 11:1-3) இந்த இடத்தில்தான் பாபேல் கோபுரத்தைக் கட்டத் தொடங்கினார்கள்

இந்த வேதபகுதி வானராக்கினியை **அக்கிரமக்காரி** என்று அழைக்கிறது. அவளுக்கு மேலும் இரு பெயர்கள் உண்டு அவையான **வேசி** மற்றும் **சூனியக்காரி** என்பது. **Wicked, Witch and Whore** இதை சுருக்கமாக **www** என்று நினைவில் வைத்துகொள்ளலாம். இது நாம் அடிக்கடி பயன்படுத்தும் பெயர்தானே!

**தேன்கூடு மாடல்:**

சரி இப்பொழுது மறுபடியும் தேன்கூடு விஷயத்துக்கு வருவோம். வானராக்கினியின் கட்டமைப்பு தேன்கூடு இயங்கும் அதே நுட்பத்தில்தான் இயங்குகிறது என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அது எப்படியென்று பார்ப்போம்.

ஒரு தேன்கூட்டில் ஒரே ஒரு ராணித் தேனீ மாத்திரமே இருக்கும். சில ஆண் தேனீக்களும், நிறைய வேலைக்காரத் தேனீக்களும் அந்தக் கூட்டில் வாழும். அந்த ராணித் தேனீயை வானராக்கினியாக கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்த ஆண் தேனீக்களை வெளிப்படுத்தல் 17:1 சொல்லும் அந்த மகாபாபிலோனோடு வேசித்தனம் பண்ணும் பூமியின் திரைமறைவு ராஜாக்களுக்கு ஒப்பாகக் குறிப்பிடலாம். வேலைக்காரத் தேனீக்களை limelight-இ இருக்கும் பூமியின் அதிபதிகள், பெருவணிகர்கள், அதிகாரிகள், அரசியல் மற்றும் மதத்தலைவர்களுடன் ஒப்பிடலாம்.

ஒரு தேன்கூட்டை நீங்கள் மேலோட்டமாகப் பார்த்தால் வேலைக்காரத் தேனீக்களை மட்டுமே நீங்கள் பார்க்க முடியும். அவைகள் மாத்திரமே கூட்டை கட்டுவதிலும், அதைப் பாதுகாப்பதிலும், அங்கும் இங்கும் பறந்து வேலைசெய்வதிலும் பிசியாக இருக்கும். ராணித்தேனீயோ அல்லது அந்த ஆண் தேனீக்களோ கூட்டைவிட்டு பெரும்பாலும் வெளியே வருவதே இல்லை, இனப்பெருக்கத்தைத் தவிர வேறு எந்த வேலையும் செய்வதும் இல்லை.

வெளியில் இருப்பவர்களுக்கு ராணித்தேனீயும், ஆண் தேனீக்களும் கண்ணுக்குத் தெரியாது, ஆனால் அவைகள் இல்லாமல் தேன்கூடு செயல்படவே முடியாது. அதுபோலவே வானராக்கினியும், அவளோடு வேசித்தனம் செய்யும் திரைமறைவு ராஜாக்களும் பொதுமக்களின் கண்களுக்குத் தெரியமாட்டார்கள். அவர்கள் யாரென்று யாருக்கும் தெரியாது. ஆனால் அவர்கள் இல்லாமல் உலக சிஸ்டம் செயல்படவே முடியாது. தன் கிரியைகள் அத்தனையையும் இருளிலேயே செய்யும் இருளின் அதிபதியாகிய சாத்தான், தான் திரைமறைவிலிருந்து ஒரு மாபெரும் ராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்ப இந்த நுட்பத்தை தெரிந்துகொண்டதில் ஆச்சரியமில்லை.

தேனீக்களின் வாழ்க்கைமுறையை ஆராய்ந்த அறிவியலாளர்கள் ராணித்தேனீ இல்லையென்றால் மற்ற வேலைக்காரத் தேனீக்கள் மிகவும் குழம்பிப்போய், தமது கட்டுக்கோப்பாக சேர்ந்து வாழும் பண்பை இழக்கின்றன எனவும், ராணித் தேனீயானது வேலை செய்யாவிட்டாலும் எல்லாத் தேனீக்களையும் ஈர்த்து ஓர் ஒழுங்கில் இருக்க உதவுகின்றது என்றும் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு தேன்கூட்டில் ஒரு ராணித்தேனீக்கு இணையாக ஒரு ஆண் தேனீ மட்டும் இருப்பதில்லை. பல ஆண் தேனீக்கள் இருக்கும். ராணித்தேனீ ஒருமுறை முட்டையிட ஒரே நேரத்தில் ஏறக்குறைய 10 முதல் 18 ஆண் தேனீக்களுடன் கலவிகொள்ளும். பாபிலோன் கட்டமைப்பில் பாபிலோன் வேசி பூமியின் ராஜாக்களோடு வேசித்தனம் செய்வதாக வேதம் குறிப்பிடுவது சரிதானே?

ஆண் தேனீக்கள் பல இருந்தாலும் ஒட்டுமொத்த அதிகாரமும் ராணித்தேனீக்கே! ஆண் தேனீக்கள் அனைத்தும் டம்மிகள்தான். இவைகள் கூட்டிற்குள் தனக்கு எந்தத் தகுதியும் இல்லை

என்பதை உணர்ந்து நடந்து கொள்கின்றன. இவை தங்கள் உணவுத் தேவை மற்றும் பாதுகாப்புத் தேவைக்கு வேலைக்காரத் தேனீக்களைச் சார்ந்து வாழ்கின்றன. தனது கூட்டில் இருக்கும் முட்டைகளில் எந்த முட்டையை ஆண் தேனீயாக மாற்றுவது, எதை வேலைக்காரத் தேனீயாக மாற்றுவது என்பதை ராணித்தேனீயே முடிவு செய்யும்.

ராணித்தேனீக்கு வயதாகி அது செயல்படும் நிலையை இழந்துவிட்டதை அறிந்தால் வேலைக்காரத் தேனீக்களே ராணித்தேனீயைக் கொன்றுவிடும். பின்னர் வேலைக்காரத்தேனீக்கள் அனைத்தும் சேர்ந்து, ஏற்கனவே முட்டையிலிருக்கும் குஞ்சுகளில் மூன்றைத் தேர்ந்தெடுத்து அதற்கு அந்த இனத்தின் சிறந்த உணவான “ராயல் ஜெல்லியை” வழங்கும். அந்த ராயல் ஜெல்லியை உட்கொள்ளும் குஞ்சுகள் ராணித்தேனீக்களாக உருவெடுக்கும். அந்த மூன்றில் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துவிட்டு எஞ்சியுள்ள இரண்டு இராணித்தேனீக்களை வேலைக்காரத் தேனீக்களே கொன்றுவிடும். தேனீக்களின் கட்டமைப்பு பற்றி ஒரு சிறிய அறிமுகம் மாத்திரம் கொடுத்திருக்கிறேன். இது போதுமென்று நினைக்கிறேன்.

தேன்கூட்டின் கட்டமைப்பைப் புரிந்துகொள்வதன் மூலம் மகாபாபிலோன் செயல்படும் விதத்தைப் புரிந்துகொள்ளலாம். இந்தக் கட்டமைப்பில் காணப்படும் தன்மைகளில் பெரும்பாலானவற்றை வானராக்கினியின் டெம்பிளேட்டில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையிலும், சுபாவத்திலும் காணமுடியும்.

## செமிராமிஸ் (கிமு 811-806):

நாம் ஏற்கனவே நிம்ரோத்தின் மனைவியாகிய செமிரமிஸைப் பற்றிப் பார்த்தோம். அவளைப்பற்றி வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டிருந்தேன். அது செவிவழி வந்த பாரம்பரியக் கதைதான். நிம்ரோத்தின் மனைவியின் உண்மைப்பெயர் எதுவென்று யாருக்கும் தெரியாது. அவளுக்கு செமிராமிஸ் என்று பெயரிட்டது கிபி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த யூசிபியஸ் என்ற வரலாற்று ஆசிரியர்.

கிமு 811 முதல் 806 வரை அசீரியாவை அரசாண்ட ஷம்முர்-அமாத் என்ற இயற்பெயரைக் கொண்ட செமிராமிஸ் என்ற அரசியின் பெயரைத்தான் யூசிபியஸ் நிம்ரோத்தின் மனைவி என்கிற கதாபாத்திரத்துக்கு சூட்டியிருக்கிறார். அதன் பிறகு கிபி 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அலெக்ஸாண்டர் ஹிஸ்லாப் என்பவர் எழுதிய The Two Babylons என்ற புத்தகத்தின் மூலம் இந்தக் கதை உலகம் முழுவதும் பிரபலமானது.

புராண செமிராமிஸைப் பார்த்துவிட்டோம். இந்த வரலாற்று செமிராமிஸும் அப்பட்டமான வானராக்கினியின் டெம்பிளேட்தான். எனவேதான் யூசிபியஸ் புராண செமிராமிஸுக்கு இவளது பெயரைச் சூட்டியிருக்க வேண்டும். இவள் கிமு 823 முதல் 811 வரை அசீரியப் பேரரசை அரசாண்ட ஷம்ஷி-ஆதாத் V-யின் மனைவி. கணவன் இறந்த பிறகு தன் மகன் ஆதாத்-நிராரி III ஆட்சிக்கு வரும்வரை அரசாண்டாள். அக்காலகட்டங்களில் ஒரு பெண் சமூகப் பொறுப்புக்கு வருவதே அரிது. அரசாட்சி செய்வதென்பது யாராலும் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத விஷயம். செமிராமிஸ் அதை நிகழ்த்திக்காட்டியதோடு மட்டுமல்லாமல் மகா வல்லமை பொருந்திய சக்தியாக உருவெடுத்து கோலோச்சியதை வரலாறு உறுதிப்படுத்துகிறது.

இவள் ஆட்சிப் பொறுப்பை எப்படி கைப்பற்றினாள் என்பதை கிரேக்க வரலாற்றாசிரியர் டிடோரஸ் விளக்குகிறாள். இவள் தனது கணவனிடம் தனக்கு வெறும் ஐந்து நாட்கள் மட்டும் ஆட்சிப்பொறுப்பு தரும்படி கெஞ்சியிருக்கிறாள். அரசனும் விளையாட்டாக அவளுக்கு ஐந்து நாட்கள் ஆட்சிப் பொறுப்பைத் தரவே, அந்த ஐந்து நாட்கள் அவள் செய்த நிர்வாகத்தைப் பார்த்து அரசன் மட்டுமல்லாது ஒட்டுமொத்த அரண்மனையும் பிரம்மித்து அவள் பக்கம் சாயவே அந்த ஐந்தாம் நாளின் இறுதியில் தன் கணவனை தூக்கிலிடச் செய்து ஆட்சியை நிரந்தரமாக தக்கவைத்துக்கொண்டாள்.

ஒரு தேன்கூட்டில் ஒரே ஒரு ராணித்தேனீ மாத்திரமே இருக்கும். தனக்குப் போட்டியாக கூட்டில் உருவாகும் இதர ராணித்தேனீக்களை அது கொன்றுவிடும், அல்லது வேலைக்காரத் தேனீக்களுக்கு கட்டளையிட்டு அவைகளைக் கொல்ல வைத்துவிடும். கிட்டத்தட்ட நிம்ரோத்துக்கும் இதேதான் நடந்திருக்க வேண்டும். **வானராக்கினியின் ஆவி ஒரு தேசத்துக்குள் புகுந்தால் அரசனை டம்மியாக்கிவிடும் அல்லது கொலை செய்துவிடும், குடும்பத்துக்குள் புகுந்தால் கணவனை டம்மியாக்கிவிடும், ஒரு சபைக்குள் புகுந்தால் பாஸ்டரை டம்மியாக்கிவிடும்.**

தன் கணவனை வஞ்சித்த அவள் தனது மகன் ஆதாத்-நிராரி III-ஐ வஞ்சிக்காமல் தனது கணவனது ஆட்சிகாலத்தில் குழப்பங்களோடும், பிரச்சனைகளோடும் இருந்த இராஜ்ஜியத்தை அழகாக சீரமைத்து அதை அவளது மகன் கையில் கொடுத்தாள். அப்படியெனில் அவளது மகனுக்குள் அந்திகிறிஸ்துவின் ஆவி இருந்திருக்க வேண்டும். பிசாசுகளாக இருந்தாலும் வானராக்கினிக்கும் அந்திகிறிஸ்துவுக்கும் இருக்கும் பந்தம் விந்தையானது. **வானராக்கினி உலக சிஸ்டத்தை நிர்வகித்து அதை ஏற்றவிதமாக உண்டாக்கி, போலித்திரித்துவத்தின் மூன்றாம் நபராகிய அந்திகிறிஸ்துவிடம் ஒப்படைப்பாள்.** எனவே டெம்பிளேட் அப்படித்தான் செயல்படும்.

### யேசபேல் (இறப்பு கிமு 843):

கிமு 874 முதல் 853 வரை இஸ்ரவேலை அரசாண்ட ஆகாப் எனும் அரசனின் மனைவி. இவள் இஸ்ரவேல் வம்சத்தைச் சேர்ந்தவளல்ல, ஏத்பாகால் எனும் ஃபொனீஷிய அரசனின் மகள். இந்த ஃபொனீஷியக் கடல்வணிகர்கள்தான் சதிக்கோட்பாட்டாளர்கள் சொல்லும் இலுமினாட்டிகளின் முன்னோடிகள். கனெக்ஷன் எங்கே போகிறது பாருங்கள்!

ஆகாப் ஏற்கனவே ஒரு டம்மியாக இருந்தபடியால், பெயருக்கு அவன் அரசனாக இருந்தாலும் ஒட்டுமொத்த நிர்வாகமும் யேசபேல் கைக்கு வந்துவிடுகிறது. **இந்த பூமியில் வானராக்கினியின் டெம்பிளேட்டை முழுமையாக வாழ்ந்த நபர் யேசபேல்தான்.** எனவேதான் புதிய ஏற்பாட்டு தியாத்தீரா சபையில் வானராக்கினியின் ஆவியைப் பெற்றிருந்த ஒரு பெண்ணை வேதம் யேசபேல் என்றே அழைக்கிறது(வெளி 2:20). **யேசபேல் ஆவி என்ற வார்த்தையை எங்காவது கேள்விப்பட்டால் அது வானராக்கினியின் ஆவியைத்தான் குறிக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.**

இவள் நில ஆக்கிரமிப்பு செய்து அந்த நிலத்துக்கு சொந்தக்காரர்களை கொன்றுபோடுவதில் கை தேர்ந்தவள். இதுவும் வானராக்கினி ஆவியின் பொதுவான பண்புகளில் ஒன்றுதான்.

வானராக்கினி டெம்பிளேட்டின் மிகமிக முக்கியமான பண்புகளில் ஒன்று அவள் தனக்கு அடிமைகளை உருவாக்குவதும், பின்பு அந்த அடிமைகளாலேயே கொல்லப்படுவதும் ஆகும். தேன்கூட்டில் ராணித்தேனீ உருவாக்கும் வேலைக்காரத் தேனீக்கள் அண்ணகத் தன்மை உடையவை. அவைகள் பெண் இனத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் அவைகளால் இனப்பெருக்கம் செய்ய முடியாது. வெறும் வேலை செய்ய மட்டுமே அவை உருவாக்கப்பட்டிருக்கும். கடைசியில் அந்த வேலைக்காரத் தேனீக்களேலேயே அந்த ராணித்தேனீ கொல்லப்படும்.

வெளிப்படுத்தின விசேஷம் 17-ஆம் அதிகாரத்தில் பாபிலோன் வேசி ஏறியிருந்த மிருகத்தில் இருந்த பத்து கொம்புகள் பத்து ராஜாக்கள் என்று வேதம் கூறுகிறது. அவர்கள் வானராக்கினிக்கு அடிமைச் சேவகம் செய்தவர்கள். ஆனால் கடைசியில் என்ன ஆகிறது பாருங்கள்! "நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக்கொம்புகளானவர்கள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள்" என்று வெளி 17:16 கூறுகிறது.

யேசபேலும் தனக்கு நிறைய அண்ணகர்களை(eunuchs) வைத்திருந்தாள். அவளுக்கு முன்பாக கேள்விக்குறி போல முதுகு வளைந்து கும்பிட்டவர்கள், அவள் சாரட்டு வண்டியில் செல்லும்போது அந்த வண்டியின் சக்கரத்தைத் தொட்டுக் கும்பிட்ட அதே அடிமைகள்தான் அவளைக் கொன்றும் போட்டார்கள் (2 இராஜா 9:30-33).

## ஏரோதியாள் (கிமு 15- கிபி 39):

தேவன் மனிதனைப் படைக்கும்போது எல்லோருக்கும் எல்லாமும் சமமாகவும், அபரிமிதமாகவும் கிடைக்கும்படிதான் படைத்தார் அதுதான் தேவராஜ்ஜியத்தின் சிஸ்டம். ஆனால் ஆதாமின் விழுகை காரணமாக உலகம் எப்போது பிசாசின் கைக்கு வந்ததோ அவன் உருவாக்கிய சிஸ்டம் மேடு பள்ளங்கள் நிறைந்தது. பள்ளங்களை மேடுகள் விழுங்கி, சிறு மேடுகளை பெருமேடுகள் விழுங்கி கடைசியில் ஒரே ஒரு மாபெரும் மேடு மாத்திரமே உருவாகி நிற்கும். அதன் உச்சியில் அந்திகிறிஸ்து தனது சிங்காசனத்தை அமைப்பான். இதுதான் அவன் திட்டம், இதை நோக்கித்தான் உலகத்தை நகர்த்துகிறான். அவனது நம்பிக்கையின் ஆதாரமே இந்த உலக சிஸ்டம் இதுவரை உருவாக்கி வைத்திருக்கும் மேடு பள்ளங்கள்தான்.

அப்படி நான்காயிரம் வருடங்களாக பாடுபட்டு உருவாக்கிய கட்டமைப்பின் அஸ்திபாரத்தைப் பிடித்து உலுக்கும் ஒரு சத்தம் திடீரென்று ஒருநாள் வனாந்தரத்திலிருந்து கேட்கிறது..."பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும், கரடானவைகள் சமமாகும், மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார் (லூக் 3:4,5)"

முற்றிலும் வனாந்தரத்தில் பழகிய அந்த சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட பாதாளத்தின் நரிக்கு அல்லையைப் பிடித்தது. நான் யேசபேலை அனுப்பினால் அவர் எலியாவை அனுப்புவாரே! நான் ஏரோதின் அரண்மனைக்குள் வைத்து வளர்த்துக்கொண்டிருக்கும் யேசபேலுடன் மோத இதோ எலியா களத்தில் தயாராக வந்து நிற்கிறான், யோவான் ஸ்நானகன் என்கிற பெயரில்!!...

ஏரோதியாள் யோவான் ஸ்நானகனுக்கும், கர்த்தராகிய இயேசுவுக்கும் கிட்டத்தட்ட 12 வயது மூத்தவள். அவளது இளமைக்காலம் பயமும், திகிலும், துக்கமும் நிறைந்தது. அவளது தாத்தா பெரிய ஏரோது ஒரு சைக்கோ. யூதரின் நன்மதிப்பைப் பெற சாலோமோன் தேவாலயத்தை திரும்பக் கட்டினவனும், கர்த்தராகிய இயேசு பிறந்தபொழுது 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை கொல்லச்சொல்லி ஆணையிட்டவனும் இந்த ஏரோதுதான்.
தனது பதவிக்கு ஆபத்து யார்மூலமாய் வந்தாலும் அவர்களைக் கொல்ல ஏரோது ஒருபோதும் தயங்கமாட்டான். இவனுக்கு 8-க்கும் மேற்பட்ட மனைவிகள், பல மகன்கள். தனது சொந்தக் குடும்பத்துக்குள்ளேயே தனக்கு விரோதமாக யார் சதிசெய்கிறார்கள் என்று நினைக்கிறானோ அத்தனை பேரையும் ஈவு இரக்கமின்றி போட்டுத்தள்ளினான். இறந்ததில் அவனுடைய இரு மனைவிகள், மூன்று மகன்கள், ஒரு மாமியார் மேலும் பல உறவினர்களும் அடக்கம்.

அப்படி இறந்த இரு மகன்களில் ஏரோதியாளின் தந்தையாகிய அரிஸ்டோபுலஸ் IV-ம் அடக்கம். தனது பாட்டி, அப்பா, மற்றும் பல நெருங்கிய உறவினர்கள் சொந்த தாத்தாவாலேயே கொல்லப்பட்டால் அதே வீட்டில் வளரும் ஒரு சிறுமியின் மனம் எப்படியிருந்திருக்கும்? இளம் வயதிலேயே அவள் மனம் முழுக்க ஆறாத ரணங்கள் நிறைந்திருந்தன.

வானராக்கினி டெம்பிளேட்டைக் குறித்து நீங்கள் ஒரு விஷயத்தைக் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும். **வானராக்கினியின் ஆவி யாருக்குள் புகுந்து செயல்படுமோ அந்த நபர்களின் இளமைப்பருவம் புறக்கணிப்புகளும், காயங்களும், வன்கொடுமைகளும் நிறைந்ததாக இருக்கும்.** அந்த காயங்கள்தான் வானராக்கினி வந்து அமரவும் அந்த நபர்களை தன்போக்கில் நடத்தவும் காரணமாக இருக்கும். யேசபேலுடைய இளமைப்பருவமும் அப்படித்தான் இருந்ததாகவும், அவளுடைய தகப்பனாகிய ஏத்பாகால் அரசியல் ஆதாயங்களுக்காக அவளுடைய விருப்பமின்றியே அவளை ஆகாபுக்கு திருமணம் செய்து கொடுத்ததாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

வானராக்கினியின் ஆவியை, அதாவது யேசபேல் ஆவியைக் கொண்டிருக்கும் நபர்கள் பொதுவாக விடுதலையடைய விரும்பமாட்டார்கள். அப்படி விரும்பினால் நாம் முதலாவதாக அவர்களது இளவயதின் உள்ளான காயங்களை ஆற்றச்சொல்லி கர்த்தரிடம் ஜெபிக்க வேண்டும். **அந்தக் காயங்கள் ஆறாதவரை யேசபேல் அவர்கள்மீதுள்ள தனது பிடியைத் தளர்த்தாது.** இன்னொரு விஷயம் நாம் நம்முடைய குழந்தைகளை காயப்படுத்தாமலும், வீட்டில் எப்போதும் அவர்கள் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் உணரும் சூழலை நாம் அவர்களுக்கு உருவாக்கித் தரவேண்டும்.

சரி இப்போது மீண்டும் ஏரோதியாள் கதைக்கு வருவோம். ஏரோதியாள் தனது 15-ஆவது வயதில் ஏரோது பிலிப்பு I-க்கு மனைவியாகிறாள். இருவருக்கும் சலோமி என்கிற மகள் பிறக்கிறாள். ஏரோது பிலிப்பு I-க்கு எந்த பதவியோ பொறுப்புகளோ இல்லை. ஏரோதியாளுக்கோ தான் அரசியாக வேண்டும் என்கிற கனவு. வானராக்கினியின் டெம்பிளேட் வேறென்ன விரும்பும்! சரி, எப்படியாகிலும் தனது கணவனுக்கு அரச பதவி நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தாள். ஆனால் திடீரென அவளது கணவனின் தாயார் மீது தேசதுரோக குற்றம் பாய்ந்ததால் அவளது நம்பிக்கை முற்றிலும் தகர்ந்து போனது. அதன் விளைவாக அவளுக்கு தனது கணவன் மீது இருந்த மரியாதையும் நீர்த்துப்போனது.

இந்தச் சூழலில்தான் அவளது கணவனின் சகோதரனான ஏரோது அந்திப்பா விருந்தினராக அவள் வீட்டுக்கு வருகிறான். இவன் கலிலேயாவின் ஆளுனராக இருப்பவன். இவனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில்தான் ஆண்டவராகிய இயேசு வாழ்ந்தார். சுவிசேஷங்களில் நாம் அடிக்கடி பார்க்கும் ஏரோது இவனே. கர்த்தராகிய இயேசு கலிலேயாவைச் சேர்ந்தவர் என்று அறிந்து பிலாத்து இவனிடம்தான் அவரை விசாரணைக்கு அனுப்பி வைத்தான். ஏற்கனவே பதவியில்லாத தனது கணவனைக் குறித்து திருப்தியற்றிருந்த ஏரோதியாள், தனது கணவனின் சகோதரனான ஏரோது அந்திப்பாவுக்கு வலை வீச, அவனும் அந்த வலையில் விழுந்தான். இருவரும் தங்கள் தங்கள் வாழ்க்கைத் துணைகளை விவாகரத்து செய்துவிட்டு திருமணம் செய்துகொண்டார்கள். ஏரோதியாள் தனது மகள் சலோமியை அழைத்துக்கொண்டு ஏரோது அந்திப்பாவின் அரண்மனையில் குடியேறுகிறாள்.

வானராக்கினி ஆவி ஒரு விபச்சார ஆவி என்று அறிந்திருக்கிறோம். ஆனால் அது ஆண்களை அறவே வெறுக்கும் ஆவியும்கூட. ஆண்களை அடிமைப்படுத்தி அதில் மகிழ்ச்சியடையும் ஆவி. வானராக்கினியின் ஆவியைக் கொண்டிருப்பவர்கள் ஒருபோதும் மாம்ச இச்சைக்காக வேசித்தனத்தில் ஈடுபடமாட்டார்கள். காரணம் அவர்களுக்கு ஆண்களை அறவே பிடிக்காது. அவர்கள் வேசித்தனம் என்கிற ஆயுதத்தை கையில் எடுக்க ஒரே காரணம் உயர்ந்த பதவிகளையும், அந்தஸ்தையும் பிடிக்க மாத்திரமே!

ஏரோது அந்திப்பாவும் லேசுப்பட்ட ஆள் அல்ல, அவன் ஏரோதியாளை திருமணம் செய்ய வேறு ஒரு காரணம் இருந்தது. அவன் ஒரு இதுமேயன், அதாவது ஏசா வம்சாவழியைச் சார்ந்தவன். ஏரோதியாளோ யூதரால் பெரிதும் மதிக்கப்பட்ட ஹாஸ்மோனிய அரசமரபைச் சேர்ந்தவள். அவளைத் திருமணம் செய்வதன் மூலம் யூதர்களின் நன்மதிப்பைப் பெற்று கலிலேயாவுடன் யூதேயாவையும் இணைத்து ஆளுனர் என்ற நிலையிலிருந்து அரசனாக ரோமானியப் பேரரசிடமிருந்து பதவி உயர்வைப் பெறலாம் என்று நினைத்திருந்தான். ஏரோதியாளைப் பொறுத்தவரை இது நடந்தால் அவளுக்கும் தனது "ராணி" கனவு நிறைவேறும் என நினைத்தாள். ஆனால் நடந்தது வேறு...

இருவருக்கும் நடந்த இந்தத் திருமணம் யூதர்களிடையே கடும் அதிருப்தியை உண்டாக்கியது. லேவியராகமம் 20:21 மீறப்பட்டதாக கொதித்தார்கள். லேவியராகமம் 20:21 என்ன சொல்கிறது.."ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம்பண்ணினால், அது அசுத்தம்; தன் சகோதரனை நிர்வாணமாக்கினான், அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள்". யோவான் ஸ்நானகன் பகிரங்கமாகவே ஏரோது அந்திப்பாவைக் கண்டிக்கிறான். ஏரோதியாளின் கோபம் யோவான் ஸ்நாகனுக்கு விரோதமாகப் பற்றி எரிகிறது. தனது மகள் சலோமியை நடனமாட வைத்து, அவளைக் கொண்டு ஏரோது அந்திப்பாவிடம் யோவான் ஸ்நானகனின் தலையைப் பரிசாகக் கேட்டுப் பெறுகிறாள். ஒரு மாபெரும் தீர்க்கதரிசியின் சகாப்தம் நிறைவு பெறுகிறது.

அடுத்த சில வருடங்கள் அவர்களுடைய வாழ்க்கை சமாதானமாகப் போகிறது. ஆனால் அந்திப்பா இன்னும் ஆளுனராகத்தான் இருக்கிறான், அரசனாகவில்லை. அந்த சூழலில் உலகறிந்த மாபெரும் கிறுக்கனான காலிகுலா ரோமச் சக்கரவர்த்தியாக முடிசூடுகிறான். இவனும் ஏரோதியாளின் உடன்பிறந்த சகோதரன் ஏரோது முதலாம் அகரிப்பாவும் சிறுவயது நண்பர்கள். அப்போஸ்தலனாகிய யாக்கோபை கொலை செய்தவனும், தேவதூதனால் அடிக்கப்பட்டு புழுபுழுத்து இறந்தவனும் இந்த ஏரோது அகரிப்பாதான். இவனது மகனான இரண்டாம்

அகரிப்பாவிடம் தான் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவைக் குறித்துப் பேசுகிறார் என்பது கொசுறுச் செய்தி.

தன் கணவன் அந்திப்பாவை அரசனாக அறிவிக்கும்படி ஏரோதியாள் காலிகுலாவிடம் மன்றாட தன் கணவனுடன் ரோமுக்குச் செல்கிறாள். அதை அறிந்த அவளது சகோதரனான முதலாம் அகரிப்பா இவர்களுக்கு வேட்டு வைக்கிறான். தன் சகோதரியும், மாமனும் சீசருக்கு துரோகம் செய்வதாக பற்றவைக்க, அதை அப்படியே நம்பும் சீசர் காலிகுலா, அந்திப்பாவிடம் உள்ள ஆளுனர் பொறுப்பையும் பறித்து, அவர்களை குடும்பத்தோடு பிரான்ஸில் உள்ள கவ்ல் என்ற இடத்துக்கு நாடு கடத்துகிறான். ஏரோதியாளின் ஆட்டம் இத்தோடு முடிந்தது..

இதுவரை வேதாகம உண்மைகளையும், வரலாற்றுச் சான்றுகளையும் கலந்து எழுதினேன். சரி நாடுகடத்தப்பட்ட ஏரோதியாளுக்கு என்ன ஆனது?

அவர்கள் நாடுகடத்தப்பட்ட கவ்ல் பகுதியில் ஒரு பனியால் உறைந்த ஆற்றின்மீது நடக்கையில் அது உடைந்து சலோமி ஆற்றில் மூழ்க அவளது தலை மட்டும் கத்தி போல உறைந்திருந்த ஐஸ்கட்டி கிழித்து துண்டானதாகவும், உடல் மட்டும் ஆற்றில் மூழ்கியதாகவும் ஒரு செவிவழிச் செய்தி இருக்கிறது. அதன் பின்பு சில நாட்களுக்குப் பிறகு ஐஸ்கட்டி ஆற்றின் மீது நின்று நடனமாடுகையில் அது உடைந்து ஏரோதியாளும் இறந்ததாக நம்பப்படுகிறது. ஆனால் இதை உறுதிப்படுத்த வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

## அத்தியாயம் 6: பிடிவாதக்கார கடல் தாயும், கிரிமினல் மான்ஸ்டர் மகனும்

இதுவரை வானராக்கினி ஆவியின் டெம்ப்பிளேட் உள்ள மனிதர்கள் எப்படி செயல்படுவார்கள் என்பதைப் பார்த்தோம். இனி இந்த வானராக்கினி ஆவி பூமியில் எங்கிருந்து செயல்படுகிறது என்பதை நிதானிப்போம்.

இந்த உலகில் மொத்தம் மூன்று அதிகார மண்டலங்கள் செயல்படுகின்றன. இந்த மூன்று மண்டலங்களின் அதிபதியாக கர்த்தர் மனிதனைத்தான் நியமித்தார்.

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் **சமுத்திரத்தின்** மச்சங்களையும், **ஆகாயத்துப்** பறவைகளையும், மிருகஜீவன்களையும், **பூமியனைத்தையும், பூமியின்மேல்** ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார் (ஆதி 1:26)

அதாவது **சமுத்திரம், ஆகாயம்(space), பூமி** என்பனவாகும். ஆதாம் விழுந்துபோன பின்னர் இந்த மூன்று அதிகாரமண்டலங்களும் சாத்தானுடைய கைக்கு வந்தது. ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய **சாத்தான் ஆகாயத்தையும்**, திரளான தண்ணீர்களின் மேல் அமர்ந்திருக்கும் ஸ்திரீயாகிய **வானராக்கினி சமுத்திரத்தையும்**, பூமியை ஆளும்படி சாத்தானால் தெரிந்துகொள்ளப்பட்ட **அந்திகிறிஸ்து பூமியிலிருந்தும்** ஆளுகை செய்வதாக கருதப்படுகிறது. எனவேதான் "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு

விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" என்று மோசேக்கு யாத் 20:4-இல் கர்த்தர் கட்டளையிட்டார்.

மேற்கத்திய நாடுகளில் விடுதலை ஊழியம் (Deliverance ministry) செய்யும் சில ஊழியர்களின் கருத்துப்படி இவை மூன்றிலும் மிகவும் வலிமை மிகுந்ததாகவும் கொடியதாகவும் கருதப்படுவது கடல் அதிகார மண்டலமாகும். **ஏனெனில் சகல பில்லி சூனியங்களின் தலைமை பீடமாகக் கருதப்படுவது இதுவே.** கடல் அதிகார மண்டலம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, Queen of Heaven என்ற பெயரில் இந்தியப் பெருங்கடலிலும், Queen of Coasts என்ற பெயரில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும் வானராக்கினி ஆட்சி செய்வதாக அவர்கள் கூறுகிறார்கள். இதற்கு வேதத்தில் நேரடி ஆதாரம் இல்லை, ஆனால் சமுத்திரத்தில் அசுத்த ஆவிகளின் அதிகார மையம் இருப்பதை வேதம் பல இடங்களில் உறுதிப்படுத்துகிறது (வெளி 17:1, ஏசா 27:1, எசே 29:1-3, வெளி 12:12)

கர்த்தராகிய இயேசு கதரேனருடைய நாட்டில் லேகியோன் பிசாசு பிடித்திருந்தவனை விடுதலையாக்கியபோது அவனுக்குள் இருந்த ஆவிகள் சமுத்திர ஆவிகள் எனவும், அவை தண்ணீரற்ற பாதாளத்துக்குச் செல்ல விரும்பாமல், மீண்டும் கடலுக்குச் செல்ல விரும்பி கர்த்தராகிய இயேசுவிடம் தங்களை பன்றிகள் கூட்டத்துக்குள் செல்ல அனுமதிக்கும்படி வேண்டிக்கொண்டன. அவர் அனுமதித்ததும் அவை பன்றிகளை கடலுக்குள் தள்ளி மரணிக்கச் செய்ததன் மூலம் மொத்தமாக மீண்டும் கடலுக்குள் சென்று சேர்ந்தன என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம்.

இந்தியப்பெருங்கடல் பகுதியில் லெமூரியா என்றழைக்கப்படும் குமரிக்கண்டமும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் அட்லாண்டிஸ் என்ற பெருநிலப்பரப்பும் இருந்ததாகவும், அப்பகுதியில் நோவாவின் ஜலப்பிரளயத்துக்கு முந்தைய காலத்தில் நாகரீகமான மக்கள் இனங்கள் வாழ்ந்ததாகவும் நம்பப்படுகிறது. குமரிக் கண்டத்தில் பெண்வழி அரசாங்கங்களே நடைபெற்றன எனவும், குடும்பங்களிலும் பெண்வழி ஆளுகையே இருந்தது எனவும் அதைக் குறித்து ஆராயும் ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். இதன் நிமித்தம் வானராக்கினியின் ஆளுகை அந்தப் பகுதியில் இருந்தது என நாம் கருத இடமிருக்கிறது. ஆனால் இவை வரலாற்றால் உறுதிப்படுத்தப்படாத தகவல்களாகும்.

**கடலின் ஆவியாகிய வானராக்கினியும், நிலத்தின் ஆவியாகிய அந்திகிறிஸ்துவும் இணைந்தே செயல்படுகின்றன.** எனவேதான் மிருகத்தின் மீது ஏறியிருக்கிற பெண்ணாக வெளிப்படுத்தின விசேஷத்தில் அவள் சித்தரிக்கப்படுகிறாள், ஒரு ஆண் குழந்தையை கையில் ஏந்தியிருக்கும் பெண்ணாக பல மதங்களில் வணங்கப்படுகிறாள். உண்மையில் அந்திகிறிஸ்துவை அந்திகிறிஸ்துவாக வளர்த்தெடுத்து உருவாக்குவதே வானராக்கினிதான். இவை இரண்டுக்கும் இடையே இருக்கும் பந்தம் மிகவும் ஆழமானது.

"இந்தப் படத்துல அப்படி என்னதான் இருக்குன்னு தெரியல, இந்த நாடே இதை தலைல தூக்கி வச்சுக் கொண்டாடுது!" என்று சினிமா விமர்ச்சகர்களையே குழப்பிய படம் கடந்த 2018 மற்றும் 2022-ஆம் ஆண்டுகளில் வெளிவந்து, வசூலில் சாதனை படைத்த KGF Chapter 1 மற்றும் 2. உணர்ச்சியை வெளிப்படுத்த நம்ம 2K Kids-க்கு தெரிந்த ஒரே வார்த்தையான "வேற லெவல்"

என்று கொண்டாடப்பட்ட படம். உண்மையிலேயே இது "வேற லெவல்" படம்தான். அதாவது வேற லெவலில் (dimention) நடப்பவற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டும் படம்.

ஒரு டம்மியான குடிகார அப்பாவுக்கும், நாடி நரம்பெல்லாம் இந்த உலகத்தையே ஜெயிக்க வேண்டும் என்ற பேராசையோடு இருக்கும் அம்மாவுக்கும் ஒரு மகன் பிறக்கிறான். அவன் பெயர் Rocky (நிலத்தைக் குறிக்கும் பெயர்). "நீ இந்த உலகத்தையே ஜெயிக்க வேண்டும், அத்தனையையும் உன் காலடியில் கொண்டுவர வேண்டும்" என்ற அம்மாவின் பேச்சைக் கேட்டுக் கேட்டு கிரிமினலாக வளர்கிறான். சின்னப் பையனாக இருக்கும்போதே "உனக்கு என்னதாண்டா வேணும்?" என்று கேட்டால், "இந்த உலகம்" என்கிறான்.

அவன் சிறுவனாக இருக்கும்போதே அம்மா இறந்துவிட, அவள் கல்லறை அந்த ஊரிலேயே இருக்கிறது. அவன் வாழ்க்கை முழுக்க அம்மாவின் அறிவுரைகளும், அவள் தந்த உத்வேகமுமே அவனை வழிநடத்துகிறது. அதன் விளைவாக அசைக்கமுடியாத வலிமை மிக்க நபராக உருவெடுக்கிறான். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அவன் எந்த இடத்தைப் பிடிக்க வேண்டுமோ அந்த இடத்தை அடைய வேண்டிய வாய்ப்பு உருவாகிறது. அந்த இடம்தான் கோலார் தங்கவயல். அந்த இடத்தில் ஒரு "சிஸ்டம்" செயல்படுகிறது, அந்த சிஸ்டத்துக்குள் இருக்கும் மனிதர்கள் சிறைக்குள் அடைக்கபட்ட அடிமைகள் போல இருக்கிறார்கள். விடுதலைக்காக ஏங்குகிறார்கள், அந்த அடிமைகளின் இரட்சகனாக அவன் உள்ளே நுழைகிறான். அந்த மக்கள் அவனை நம்பி தங்கள் தலைவனாக ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அந்த மக்களின் உதவியோடு அவன் அந்த தங்க வயலைக் கைப்பற்றுகிறான்.

அந்திகிறிஸ்துவும் வலுக்கட்டாயமாக நுழையப்போவதில்லை. மக்கள் அனைவரையும் ஏமாற்றி இரட்சகன் போலவே அதிகார பீடத்தைக் கைப்பற்றுவான். மக்களே அவனை விரும்பி ஏற்றுக்கொள்வார்கள். பார்வைக்கு நல்லவனாகத் தோன்றினாலும் அவன் யேசபேலால் வளர்க்கப்பட்ட அந்திகிறிஸ்துவாக இருக்கக்கூடும். மக்கள் ஏமாறுவதற்கென்றே டிசைன் பண்ணப்பட்டவர்கள்தானே!

ஒட்டுமொத்த தங்க வளத்தையும் அபகரித்ததன் விளைவாக ராக்கி இந்தியாவிலேயே மாபெரும் கிரிமினலாக உருவாகிறான். அவனை அனைவரும் "மான்ஸ்டர்" என்று அழைக்கிறார்கள். அந்த நேரத்தில் அவனது ஆட்டத்தை ஒடுக்க அதிகார மட்டத்தில் ஒரு "பெண்" வெளிப்படுகிறாள், அவளுக்குப் பின்னால் ராஜ்ஜியமும், அதன் அதிகாரமும் இருக்கிறது. தான் ஒரு அசைக்க முடியாத சக்தியாக இருந்தாலும் அவளை அவனால் எதிர்த்து நிற்கமுடியவில்லை. இயந்திரத் துப்பாக்கியைக் கையில் வைத்திருந்தாலும் அவளை அவனால் சுடமுடியவில்லை. அவளிடம் அவன் தோற்றுத்தான் ஆகவேண்டும், சரணடைவதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற நிலை உருவாகிறது.

கடைசியில் அவன் தான் சம்பாதித்த ஒட்டு மொத்த தங்கத்தையும் கப்பலில் எடுத்துக்கொண்டு இந்தியப் பெருங்கடலுக்குச் செல்லுகிறான். "உலகத்தில் உள்ள ஒட்டு மொத்த தங்கத்தையும் உனக்கே கொடுக்கிறேன் அம்மா" என்று சொல்லி அத்தனை தங்கத்தையும் இந்தியப் பெருங்கடலில் கொட்டி தானும் அங்கே மடிகிறான். அவனைப் பெற்ற அம்மாவின் கல்லறை ஊரில் இருக்க, இந்தியப் பெருங்கடலில் எந்த அம்மா இருக்கிறது என்று தெரியவில்லை. இப்படி ஒரு கதையையும் சம்பவங்களையும் படத்தின் இயக்குனர் தெரிந்தே வடிவமைத்திருப்பாரா?

அந்த நடிகர் இதையெல்லாம் தெரிந்தே நடித்திருப்பாரா என்றால் நிச்சயமாக அப்படி இருக்க வாய்ப்பில்லை என்றே நான் கருதுகிறேன்.

இதை ஏன் என்னால் உறுதியாக சொல்ல முடிகிறது என்றால், நானும் திரைத் துறையில் எழுத்தாளராக  பணிபுரிந்திருக்கிறேன். சில நேரங்களில் எனது சில இயக்குனர் நண்பர்கள் அழைக்கும் கதை டிஸ்கஷனுக்கு நான் செல்ல வேண்டியதிருக்கும். அவர்கள் சொல்லும் கதைகள் முழுக்க முழுக்க சிஸ்டத்தின் டெம்பிளேட்டை ஒட்டியதாகவே இருக்கும். எனக்கு அது மிகவும் ஆச்சரியமாக இருக்கும். அவர்களோடு பழகியவன், அவர்களை நன்கு அறிந்தவன் என்ற முறையில் அவர்கள் இதை தெரிந்து செய்திருக்க வாய்ப்பே இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன். இதைத்தான் நான் KGF திரைப்படத்துக்கும் பொருத்திப் பார்க்கிறேன்.

இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடப்பதாக வேதம் சொல்லுகிறது. சினிமாத்துறை மட்டுமல்ல உலகில் உள்ள அத்தனை துறைகளிலும் அவனது சிந்தையே நிறைந்து கிடக்கிறது. எனவே இயற்கையாகவே கதாசிரியர்களின் சிந்தையில் ஓடுவது டெம்பிளேட்டில் உள்ள கதையாகவே இருக்கிறது. இதைத் தாண்டி சிந்திக்கமுடியாத சிறைப்பறவைகளாகத்தான் நாம் இருக்கிறோம். அதைப் பார்க்கும் மக்களும் இந்த சிஸ்டத்துக்குள்ளேயே ஊறியவர்களாக இருப்பதால் அவர்களையும் அறியாமல் அதை அவர்கள் கொண்டாடுகிறார்கள். இவ்வளவு ஏன், யேசபேல் சபையிலேயே உட்காந்திருப்பதாகவும், அந்த சபையில் சாத்தானின் ஆழங்கள் போதிக்கப்படுவதாகவும் வெளி 2:18-24 சொல்லியிருக்க, பாவம் சினிமாத்துறையெல்லாம் எம்மாத்திரம்!

## அத்தியாயம் 7: பாபிலோனே, உனக்கு கண்ணி வைத்தேன்

பாபிலோனே, உனக்குக் கண்ணியை வைத்தேன், நீ அதை அறியாமல் அதிலே சிக்குண்டுபோனாய்; நீ அகப்பட்டும் பிடிபட்டும் போனாய், நீ கர்த்தரோடே யுத்தங்கலந்தாயே (எரே 50:24)

செழிப்பு உபதேசம் என்று ஆரம்பித்து விசுவாசம், வாக்குத்தத்தம், நாவின் அறிக்கை, விதைப்பு/அறுப்பு என எழுதாமல் இவர் ஏன் உலக சிஸ்டத்தைப் பற்றி எழுத ஆரம்பித்துவிட்டார். அதாவது பரவாயில்லை வானராக்கினி ஆவிக்கும் செழிப்புக்கும் என்ன தொடர்பு? இதென்ன சம்பந்தமே இல்லாத திசையில் புத்தகம் செல்கிறதே என்று சிலருக்குத் தோன்றியிருக்கும்.

இந்தத் தொடரில் பேசப்படும் செழிப்பு பூமியில் உள்ளவைகள் வேண்டும் என கேட்கும் செழிப்பல்ல, இந்த பூமியே வேண்டும் என்று கேட்கும் செழிப்பு. கேட்பவர்கள் தனித்தனி நபர்கள் அல்ல, தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒரே சரீரமாய் ஏக சிந்தையுடன் எழும்பி நிற்கும் ஒரு மாபெரும் மக்கள் கூட்டம்! கேட்பதும் தங்களுக்காக அல்ல, அவன் விசுவாசியோ அவிசுவாசியோ, பூமியில் இருக்கும் ஒரு கடைசி மனிதனுக்கும் பிதா உருவாக்கித்தந்த பூமியின் அத்தனை வளங்களும் சமமாகவும் அபரிமிதமாகவும் கிடைக்க வேண்டும். பூமியில் இருக்கும் அத்தனை சிருஷ்டிகளும் விடுதலையடைந்து சுகமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பதற்காக! இதுதான் நம் பிதாவின் கனவும், அவரது நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தமுமாய் இருக்கிறது.

எல்லா செழிப்புகளையும் பிதா ஏற்கனவே நிறைவாகவும், உபரியாகவும் உருவாக்கி வைத்துவிட்டார். **ஆனால் அவை இந்த உலக சிஸ்டத்தின் விளைவாக அயோக்கியத்தனமாக பகிரப்பட்டு இருக்கிறது.** அதன் விளைவாக மேடுபள்ளங்களும், ஏற்ற தாழ்வுகளும் உருவாகி இருக்கிறது, மனித வாழ்வும் கடினமாகிவிட்டது. அந்த பள்ளங்களெல்லாம் நிரப்பப்பட வேண்டும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்பட வேண்டும், கோணலானவைகள் செவ்வையாக வேண்டும், கரடானவைகள் சமமாக வேண்டும் (லூக் 3:4) என்பதே பிதாவின் ஆழ்மன விருப்பம்.

பரலோக ராஜ்ஜியத்தின் மகா முக்கியமான அம்சமும் இதுதான். பரலோக ராஜ்ஜியத்துக்கு கட்டியம் கூறவந்த யோவான் ஸ்நானகனின் முதல் பிரசங்கமும் இதுதான், பெந்தேகொஸ்தே நாளில் பரலோக ராஜ்ஜியம் பூமிக்கு வந்தவுடன் நடந்த முதல் சம்பவமும் இதுதான். ஆதித்திருச்சபை விசுவாசிகள் தங்களுக்குள் உள்ளவைகளைப் பகிர்ந்து அனுபவித்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்று அப் 4:35 சொல்லுகிறது. இது ஒரு குறுகிய காலம் நடந்த நிகழ்வாக இருந்தாலும் ஈராயிரம் ஆண்டு மொத்த சபைச் சரித்திரத்திலும் இதுவே வசந்தகாலமாகும்.

பிதாவின் கனவை நனவாக்குவதுதான் குமாரர்களின், குமாரத்திகளின் கடைமை. அதற்கான அஸ்திபாரத்தைத்தான் நமது மூத்த அண்ணனாகிய இயேசுகிறிஸ்து போட்டுவிட்டுச் சென்றிருக்கிறார். **ஆனால் நாம் அந்த அஸ்திபாரத்தின் மேல் ஒரு மதத்தைக் கட்டி, அந்த மதத்துக்கு ஆள் சேர்த்து, மதத்தை வளர்த்துகொண்டிருக்கிறோம்.** இதற்குப் பின்னால் உள்ள சாத்தானின் சதி உங்களுக்குப் புரியவில்லையா?

இங்கே மதம் அறிவிக்கும் சுவிசேஷம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? "இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள் அப்பொழுது நீ இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்லலாம். இல்லாவிட்டால் நரகத்தில் தள்ளப்படுவாய்". இது சரியான சுவிசேஷம்தான் அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் எப்பொழுதோ வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பிறகோ, அல்லது அந்த தனிமனிதனின் மரணத்துக்குப் பிறகோ வரப்போகும் நித்தியம் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அதை மட்டும்தான் சுவிசேஷம் வாக்குப் பண்ணுகிறதா?

இந்த பூமியை விட்டு எப்படியாவது எஸ்கேப் ஆகி பரலோகத்துக்கு சென்றுவிட வேண்டும் என்கிற உணர்வு உங்களுக்கு எதனால் உருவாகிறது? பிதா மீது உள்ள அன்பினாலா? அந்த பிதா நமக்குக் கொடுத்த வீடு இந்த பூமிதானே? உங்கள் சொந்த வீட்டைக் குறித்த பயத்தை உங்களுக்குள் விதைத்தது எது? இந்த வீட்டை விட்டு ஓடிவிட வேண்டும் என்கிற எண்ணத்தை உங்களுக்குக் கொடுத்தது எது? இந்த வீட்டில் வாழும் நாட்களை பாரமாக்கி, விரக்தியில் கழிக்க வைத்தது எது? பூமியை எல்லாம் கெடுக்கிற கேடான பர்வதம்(எரே 51:25) என்று அழைக்கப்படும் இந்த பாபிலோனிய சிஸ்டம்தானே!

ஒரு கற்பனை செய்து பாருங்கள். ஒருநாள் திடீரென இந்த சிஸ்டம் பூமியை விட்டு அகன்றுவிட்டது என்று வைத்துக் கொள்வோம். எங்கும் செழிப்பும், அன்பும், சந்தோஷமும், ஐக்கியமும் நிலவுகிறது, அப்போது உங்களுக்கு இந்த பூமியை விட்டு எப்படியாவது ஓடிவிட

வேண்டும் என்கிற எண்ணம் வருமா, அல்லது நித்திய வீட்டுக்கு அழைப்பு வரும்வரை இங்கேயே தங்கித் தாபரிக்க வேண்டும் என்கிற எண்ணம் வருமா?

"அவர் சேனைகளின் கர்த்தர், யுத்தத்தில் வல்லவர்" என்று பாடுகிறோம். அந்த யேகோவா சபயோத்தின் பிள்ளைகள் கேவலம் ஒரு கண்ணுக்குத் தெரியாத சிஸ்டத்துக்கு பயந்தா வீட்டை விட்டு ஓடுவது? அது வெறும் மிதிக்கப்படுங் களத்துக்குச் சமானம் என்று எரே 51:33 சொல்லுகிறது. நீங்கள் அதைக் கண்டு பயந்துகொண்டிருக்க, அது உங்களைக் கண்டு பயந்து கொண்டிருக்கிறது. எப்படித் தெரியுமா?

அவர் ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டார்...

பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும், அது தன் பலமான அரணை உயர்த்தினாலும், அதைப் பாழாக்குகிறவர்கள் என்னிடத்திலிருந்து வருவார்கள் (எரே 51:53)

"ஐய்யோ, அரண் இவ்வளவு தாழ்வாக இருந்தால் வந்துவிடுவார்களோ, அதை இன்னும் இன்னும் உயர்த்திக் கட்டலாம்" என்று நமக்குப் பயந்து, நம்மைக் கொண்டே அதாவது இன்னும் மனதளவில் மறுரூபமாகாமலிருக்கும் நம்மைக் கொண்டே, நம்மை சக்கையாகப் பிழிந்து தன் அரணைக் கட்டிக்கொண்டிருக்கிறான். பாழாக்குகிறவர்களைக் கொண்டே அரணைக் கட்டுவது அவனது தந்திரமென்றால், கட்டி முடித்தபின்பு கட்டியவர்களை வைத்தே அரணைப் பாழாக்குவது அவரது வெற்றி!

வசனம் தெரியாதவரை இந்த அரணைக் கட்டும் வேலையை விட்டு பரலோகத்துக்கு ஓடி அங்கே சென்று இளைப்பாறலாம் என்று ஏங்கிக் கொண்டிருப்போம், வசனம் தெரிந்து மனங்கள் மறுரூபமாகிவிட்டால் "அட, அந்த அரணை இடித்துத் தள்ளப்போவதே நாம்தான்" என்பதை நாம் அறிந்துகொள்வோம்.

என்ன பிரதர், கர்த்தராகிய இயேசு வந்து, ஆயிரம் வருட அரசாட்சி துவங்கிய பின்புதான் இந்த சிஸ்டங்கள் மாறும் என்று நினைத்திருந்தேன், தேவன் அதை நம்மைக் கொண்டு வீழ்த்தப் போகிறார் என்று சொல்கிறீர்களே! இதற்கு வேதத்தில் ஆதாரம் இருக்கிறதா?

ஆதாரம் இருக்கிறது. மணவாட்டி சபை எழும்பி, சிஸ்டத்தை உடைத்து நொறுக்குவது எதிர்காலத்தில் நடக்கப்போகும் நிகழ்வு, அதுமட்டுமல்ல, அந்த மணவாட்டி சபையின் அங்கங்களான தனிப்பட்ட நபர்களாகிய நாம் ஒவ்வொருவரும், நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் சிஸ்டத்தின் தாக்கத்தை உடைத்து நொறுக்கி விடுதலை பெறமுடியும், நீங்கள் விரும்பினால் அந்த யுத்தத்தை இன்றே தொடங்க முடியும்!

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் நம்மில் பலருக்கும் விளங்கிக்கொள்ள கடினமானதாக இருக்கக் காரணம் அதில் இடம் பெரும் சம்பவங்களின் காலவரிசையைப் புரிந்துகொள்வது சற்று சிரமமாக இருப்பதுதான். எது முந்தி நடக்கும் எது அடுத்து நடக்குமென்பது புரியாது. ஆனாலும் ஆவியானவரின் ஒத்தாசையோடு நிதானமாக வாசித்தால் சில சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக "இவைகளுக்குப் பின்பு இது சம்பவிக்கும்" என்பது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கும். அப்படித்தான் வெளிப்படுத்தல் 17-இல் வானராக்கினியாகிய பாபிலோன்

வேசி அறிமுகப்படுத்தப்படுகிறாள். அதைத் தொடர்ந்து "இவைகளுக்குப் பின்பு" என்று சம்பவங்கள் கிரமமாக வரிசைப் படுத்தப்படுகின்றன.

வானராக்கினி அறிமுகம் (வெளி 17) > இவைகளுக்குப் பின்பு (வெளி 18:1) பாபிலோனின் விழுகை > பாபிலோனின் விழுகைக்குப் பின்பு மிருகத்தின் ஆளுகை (வெளி 17:17) > இவைகளுக்குப் பின்பு (வெளி 19:1) அர்மெகதான் யுத்தம், அந்திகிறிஸ்துவின் வீழ்ச்சி > ஆயிரம் வருட அரசாட்சி (வெளி 20:2).

வெளிப்படுத்தின விசேஷம் 17,18,19,20 அதிகாரங்களை வாசிக்கும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலே சொன்னதை விளக்கமாக எழுதுகிறேன். நாம் வாழும் இக்காலத்தில் வானராக்கினியின் கீழ் பாபிலோனிய உலகக் கட்டமைப்பின் ஆளுகை நடந்து கொண்டிருக்கிறது. இக்காலத்தில் இரகசிய வருகை இருக்கப்போவதும் இல்லை, கர்த்தராகிய இயேசு தம் சபையோடு திரும்பி வந்து அந்திகிறிஸ்துவுடன் அர்மெகதான் யுத்தத்தில் ஈடுபடப்போவதும் இல்லை. அதற்கு முன்பாக வேறொரு சம்பவம் நடந்தாக வேண்டும். அது என்னவென்றால் பாபிலோன் கட்டமைப்பு உடைக்கப்பட வேண்டும். பாபிலோனிய கட்டமைப்பு உடைக்கப்படும் சம்பவத்தைத்தான் வெளி 18 பேசுகிறது.

யார் பாபிலோன் கட்டமைப்பை உடைக்கப்போகிறார்கள் என்றால், வானராக்கினியின் அடிமைகளாக இருக்கும் பத்து கொம்புகளாகிய பத்து ராஜாக்களே அதைச் செய்யப்போகிறார்கள். அவர்கள் ஏன் அதைச் செய்கிறார்கள், அதை அவர்களைச் செய்ய வைக்கப்போவது யார் என்பதுதான் இப்புத்தகத்தின் மையப்புள்ளியே!

வெளி 17:16,17:
நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக்கொம்புகளானவர்கள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள். தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும், அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும், ஒரே யோசனையுள்ளவர்களாயிருந்து, தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களை ஏவினார்.

முழு பூமியையும் பத்து பிரிவுகளாக பிரித்து ஆளும் அந்த பத்து ராஜாக்களும் பாபிலோனியக் கட்டமைப்பை உடைத்து, உலகின் மொத்த ஆளுகையையும் மிருகமாகிய அந்தி கிறிஸ்துவின் கையில் கொடுப்பார்கள்.

இந்த இரு சம்பவங்களுக்கும் இடையில், அதாவது பாபிலோனிய கட்டமைப்பு உடைக்கப்படுவதற்கும், அந்திகிறிஸ்து ஆட்சியைப் பெறுவதற்கும் இடைப்பட்ட காலத்திலோ, அல்லது அந்திகிறிஸ்துவின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆரம்ப நாட்களிலோ, ஏதோ ஒரு நாளில் இரகசிய வருகை நிகழ வேண்டும். இதை ஏன் திட்டவட்டமாகச் சொல்கிறேனென்றால் பாபிலோனிய கட்டமைப்பு உடைக்கப்பட வேண்டுமானால் சபை பூமியில் இருந்தாக வேண்டும். அர்மெகதான் யுத்தத்தில் அந்திகிறிஸ்து அழிக்கப்படவேண்டுமென்றால் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்ட சபை, கிறிஸ்துவுடன் மத்திய ஆகாயத்திலிருந்து

பூமிக்கு வந்தாகவேண்டும்(வெளி 17:14, 19:11-20). எனவேதான் **பாபிலோனிய கட்டமைப்பு உடைக்கப்பட்ட பிறகுதான் இரகசிய வருகை இருக்கும்** என்று சொல்கிறேன். இரகசிய வருகையைத் தொடர்ந்து, மணவாட்டி சபைக்கும் ஆட்டுக்குட்டியானவருக்குமான கல்யாண விருந்து மத்திய ஆகாயத்தில் நடப்பதாக வெளி 19: 7-9 கூறுவது நமக்கு கூடுதல் அத்தாட்சியாகும்.

அதாவது அந்திகிறிஸ்துவின் ஆட்சி பூமியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் மணவாட்டியோடு ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து மத்திய ஆகாயத்தில் நடந்து கொண்டிருக்கும். அதற்குப் பிறகுதான் மத்திய ஆகாயத்திலிருந்து ஆட்டுக்குட்டியானவரும், மணவாட்டியும் இறங்கி வந்து அந்திகிறிஸ்துவை அழிப்பார்கள், வலுசர்ப்பம் சிறைப்பிடிக்கப்பட்டு பூமியில் ஆயிரம் வருட அரசாட்சி துவங்கும். ஆயிரம் வருட ஆட்சியின் முடிவில் வலுசர்ப்பம் விடுவிக்கப்பட்டு, கோகுமாகோகு யுத்தமும், அதைத்தொடர்ந்து வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பும் இருக்கும்.

அந்த பத்து ராஜாக்களும் பாபிலோன் கட்டமைப்பை உடைத்து உலகத்தின் ஆட்சியை அந்திகிறிஸ்துவின் கையில் ஒப்புக்கொடுக்க சபைதான் காரணமாக இருக்கும் என்பதை எதன் அடிப்படையில் சொல்கிறீர்கள் என்று சிலர் கேட்கலாம். சபை என்பது தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் கூட்டத்தைக்(Ecclesia) குறிக்கும் சொல்லாக இருந்தாலும் தேவனுடைய பார்வையில் **அது "மணவாட்டி" எனும் ஒற்றை நபர்தான்.** ஒரு தனி மனிதன் எப்படி வளர்கிறானோ அப்படித்தான் சபையும் வளர்கிறது. ஒரு பெண் குழந்தை சிறுமியாக இருக்கிறாள், அவளுக்குள் குழந்தைதனம் நிறைய இருக்கிறது, பின்னர் பருவமடைந்து உடல் அளவிலும், மனதளவிலும் முதிர்ச்சியடைகிறாள். அதற்குப் பின்னர்தான் அவளுக்குத் திருமணம் நடக்கிறது.

எபிரேயர் நிருப ஆசிரியர் சபையை பாலுண்கிற குழந்தைகள் என்றும், பலமான ஆகாரத்தை உண்ணத்தக்க பூரண வயதுள்ளவர்கள் என்றும் இரு வகையாகச் சொல்லுகிறார் (எபி 5:12-14). இதே விஷயத்தை அப்போஸ்தலனாகிய பவுலும் 1 கொரி 3:1,2 வசனங்களில் பேசுகிறார். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய் இருக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவர்களாக இருக்கிறார்கள், பாலை உண்ணத்தக்கவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். மூலமொழியான கிரேக்கத்தில் குழந்தைப் பருவ சபை TEKNON என்றும், முதிர்ச்சியடைந்த சபை HUIOS என்றும் அழைக்கப்படுகிறது. இந்த HUIOS-ஐத்தான் நாம் "தேவபுத்திரர்" என்று அழைக்கிறோம். மணவாட்டி இந்த HUIOS நிலையை அடைந்தபிறகுதான் அவளுக்கும் கிறிஸ்துவுக்கும் திருமணம் நடக்குமே தவிர, பூரண புருஷனாகிய மணவாளன் ஒரு குழந்தையை மணக்க மாட்டார். TEKNON-ஆக இருக்கும் மணவாட்டியை HUIOS-ஆக வளர்த்தெடுக்கும் பணியைத்தான் பூமியில் இப்போது ஆவியானவர் செய்துகொண்டிருக்கிறார்.

பல ஆண்டுகாலம் ஒரு மாணவனாக சத்தியத்தைக் கற்றுக்கொண்டதிலிருந்து ஒரு விஷயத்தை என்னால் தாழ்மையாகச் சொல்ல முடியும். **சபை தற்பொழுது குழந்தைப் பருவத்திலிருந்து வாலிபப் பருவத்துக்குள் அடியெடுத்து வைக்கிறது.** அதன் விளைவாகத்தான் இதுபோன்ற சத்தியங்கள் உலகெங்கிலும் பேசப்பட ஆரம்பித்திருக்கிறது. இப்போதிருக்கும் சபை குழந்தைப் பருவத்தில் இருக்கிறபடியால் அது மாம்சத்துக்குரியதாகத்தான் இருக்கும். பலர் அதை விழுந்துபோனதாகவும், சோரம்போனதாகவும் கருதி, கண்டித்து உணர்த்துவதாக நினைத்துக்கொண்டு வேசியோடு ஒப்பிட்டுப் பிரசங்கிக்கிறார்கள். அது மாபெரும் தவறு, அவள்

இப்போது மாம்சத்துக்குரியவள் போல தோன்றினாலும் உள்ளே இருப்பது பிதாவின் வித்து, ஒருநாள் அவள் சாதாரண Bride-ஆக அல்ல, Warrior Bride-ஆகத்தான் வளர்ந்து நிற்ப்பாள். அவளைக் கண்டு ஒட்டுமொத்த இருளின் ராஜ்ஜியமும் குலைநடுங்கிப் போகும்.

நீங்கள் சற்று கற்பனை செய்து பாருங்கள், Warrior Bride-ஆக, கிறிஸ்துவுக்கு ஒப்பான பூரண வளர்ச்சியடைந்த சபை என்ன செய்வாள்? பாபிலோனிய சிஸ்டத்தின் அக்கிரமங்களைக் கண்டு சீயோன் குமாரத்தி அமைதியாக இருப்பாளா? மாயைக்குள் கட்டுண்டு கிடக்கும் சர்வ சிருஷ்ட்டியும் HUIOS-ஆகிய மணவாட்டி வெளிப்பட காத்திருப்பதாக வேதம் கூறுகிறது. **ஆக, முதிர்ச்சியடைந்த சபையாகிய மணவாட்டி இந்த உலகில் ஒரு மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறாள் என்பது உறுதி!**

அதுதான் பாபிலோனை சபை பழிதீர்க்கும் காலம், "என் ஜனங்களே...அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள். அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச்செருக்காய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள் (வெளி 18:4-7)

பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான்.உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்(சங் 137:8,9), அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மோதியடிக்கப்படும் (ஏசா 13:16) இங்கு கல்லில் மோதியடிக்கப்படுவது மனிதக் குழந்தைகள் அல்ல, ஒருவன் தான் சேர்த்துவைத்த சொத்துக்களை எதிர்காலத்தில் தன் குழந்தைகளிடம்தான் விட்டுச்செல்வான். அந்தக் குழந்தைகள்தான் அவனது நம்பிக்கை, அவர்கள்தான் அவனது எதிர்கால சொத்துக்களை தொடர்ந்து அனுபவிக்கவும், ஆளுகை செய்யவும் போகிறார்கள். பிள்ளைகள் போனால் நம்பிக்கையும் போயிற்று. பாபிலோன் தான் சேர்த்த சொத்துக்களை பாதுகாக்கவும், தன்னிடமே தக்க வைத்துக் கொள்ளவும் என்னென்ன "ஏற்பாடுகள்" செய்திருந்ததோ அந்த "ஏற்பாடுகள்" சிதறடிக்கப்படும், பாபிலோனின் எதிர்கால நம்பிக்கை சிதைக்கப்படும். இதைத்தான் மேற்கண்ட வசனங்கள் உருவகமாகச் சொல்கின்றன.

ஆதாம் இழந்த, கிறிஸ்துவினால் மீட்கப்பட்ட சகல சொத்துக்களையும் மணவாட்டி மறுபடியும் கொண்டுவந்து பிதாவின் களஞ்சியத்தில் சேர்ப்பாள். அதுவரை அத்தனை சொத்துகளையும் திருடி வைத்திருந்த பாபிலோன் அத்தனையையும் இழக்க வேண்டியது வரும்.

சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்; நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய்; அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியைப் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும் நியமிப்பாய்.(மீகா 4:13)

அதின் வியாபாரமும், அதின் பணையமும் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்படும்; அது பொக்கிஷமாய் சேர்க்கப்படுவதும் இல்லை; பூட்டி வைக்கப்படுவதும் இல்லை; கர்த்தருடைய

சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும் (ஏசா 23:18)

நான் பரிசுத்தமாக்கினவர்களுக்கு கட்டளை கொடுத்தேன்; என் கோபத்தை நிறைவேற்ற என் பராக்கிரமசாலிகளை அழைத்தும் இருக்கிறேன்; அவர்கள் என் மகத்துவத்தினாலே களிகூருகிறவர்கள் என்கிறார் (ஏசா 13:3)

பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும், அது தன் பலமான அரணை உயர்த்தினாலும், அதைப் பாழாக்குகிறவர்கள் என்னிடத்திலிருந்து வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 51:53)

திரளான தண்ணீர்களின்மேல் வாசம்பண்ணுகிறவளே, திரண்ட சம்பத்துடையவளே, உனக்கு முடிவும் உன் பொருளாசைக்கு ஒழிவும் வந்தது. மெய்யாகவே, பச்சைக்கிளிகளைப்போல் திரளான மனுஷரால் உன்னை நிரம்பப்பண்ணுவேன்; அவர்கள் உன்மேல் ஆரவாரம் பண்ணுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டார் (எரே 51:13,14)

சபை மட்டுமல்ல, உலகத்தின் அநேகம் ஜாதிகள் ஒன்றுகூடி பாபிலோன் கட்டமைப்பை எதிர்க்கும். உலகின் அத்தனை ஜாதிகளின் இருதயத்தையும் பாபிலோனுக்கு விரோதமாக கர்த்தர் எழுப்புவார். கிட்டத்தட்ட உலகப்போருக்கொத்த கலவரம் வெடிக்கும். **"பாபிலோனை அழிக்கவேண்டுமென்பதே அவருடைய நினைவு; இது கர்த்தர் வாங்கும் பழி, இது தமது ஆலயத்துக்காக அவர் வாங்கும் பழி (எரே 51:11)"**. இனி வேறு வழியே இல்லை, இனியும் மனிதர்களை வஞ்சகத்தாலும், சூனியத்தாலும் கட்டிவைக்க முடியாது என்ற சூழ்நிலையில்தான் வானராக்கினியின் அடிமைகளான அந்த பத்து ராஜாக்களும் இந்த பில்லி சூனிய உலகக் கட்டமைப்பை முற்றிலும் சீர்குலைத்து, அந்திகிறிஸ்துவின் கொடூர ஆட்சிக்கு உலகத்தை ஒப்புக்கொடுப்பார்கள்.

பாபிலோன் கட்டமைப்பு உடைக்கப்பட காரணமாக இருக்கப்போவது மணவாட்டி சபைதான் என்பதற்கு மேலும் ஒரு வலுவான ஆதாரத்தோடு அடுத்த அத்தியாயத்தில் சந்திப்போம்.

## அத்தியாயம் 8: யெகூ வருகிறான்

வானராக்கினியின் ஆவிக்கும் தீர்க்கதரிசிகளின் ஆவிக்கும் ஜென்மப் பகை உண்டென்பதை நாம் ஏற்கனவே கண்டோம். தீர்க்கதரிசிகள் வானராக்கினியின் ஆவியை எதிர்த்து நிற்பார்கள், அம்பலப்படுத்துவார்கள், ஜனங்களை அந்த ஆவிக்கு விரோதமாக திருப்புவார்கள். ஆனால் வானராக்கினியின் ஆவியை வெற்றிகொள்ள, அழித்துப்போட ராஜரீக அபிஷேகம் பெற்ற ஒருவன் வரவேண்டும். எலியாவும், எலிசாவும் யேசபேலை எதிர்த்து நின்றார்கள் ஆனால் அவளை அவர்கள் கொல்லவில்லை, அவளைக் கொல்ல யெகூ எனும் ராஜாவை எலிசா அபிஷேகம் பண்ணவேண்டியதாயிற்று.

அதுவரை ஏரோதியாளுக்குள் இருந்துகொண்டு கலிலேயாவில் கோரதாண்டவம் ஆடிக்கொண்டிருந்த வானராக்கினியின் ஆவி, ஸ்திரீகளின் வயிற்றில் பிறந்தவர்களிலேயே ஆகச்சிறந்தவன் என்று கர்த்தரின் வாயாலேயே புகழப்பட்ட மாபெரும் தீர்க்கதரிசியை தன் வாளுக்கு இரையாக்கின அந்த ஆவி, காலிகுலா எனப்படும் அரசனுக்கு முன்பாக பொட்டிப்பாம்பாக அடங்கிப் போயிற்று. அந்தக் காலிகுலா மோசமானவன்தான். ஆனாலும் அவன் ராஜா... அவனது ஒரே கட்டளையில் அவள் தன் ஆளுகையையும், அந்தஸ்தையும் இழந்து, அகதியாகி ஏரோதியாள் நாடு கடத்தப்பட்டாள்.

சிங்கத்தை ஒத்த எலியாவுக்கே மரணபயத்தைக் காட்டிய யேசபேல், ராஜாவாகிய யெகூ இரதத்தில் ஏறி புயலென வரும்போது தன் கண்களுக்கு மையிட்டுக்கொண்டு, தன்னை அலங்கரித்துக்கொண்டு, அவனிடம் இச்சக வார்த்தைகள் பேசும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

ராணித்தேனீ அதன் வேலைக்காரத் தேனீக்களாலேயே கொல்லப்படுவதுதான் படைப்பின் நியதி. அப்படி கொல்லப்பட வேண்டுமானால் ராணித்தேனீ பலவீனப்பட வேண்டும், இனி இவளால் பிரயோஜனமில்லை என்பதை வேலைக்காரத் தேனீக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அப்படியே வானராக்கினியின் ஆவியால் நடத்தப்படும் அந்த நபரைவிட வலுவான ஒரு ராஜா அதிகாரமட்டத்தில் மக்கள் மத்தியில் தலைவனாக எழும்புவான். அந்த தலைவன் எழும்பியபின்பு வானராக்கினி செயலற்றுப் போவாள். அந்தத் தலைவன் கொடுக்கும் தைரியத்தால் வானராக்கினியின் அடிமைகளே அவளைக் கீழே தள்ளி கொன்று போடுவார்கள். வேதத்திலும் வரலாற்றிலும் இதுதான் டெம்பிளேட்! இந்த டெம்பிளேட்டைப் வாசகர்களுக்குப் புரியவைக்கத்தான் நான் இத்தனை அத்தியாயங்கள் எழுத வேண்டியதாயிற்று.

ஏன் தீர்க்கதரிசிகளால் வானராக்கினியின் ஆவியை அழிக்க முடியவில்லை, ராஜரீக அபிஷேகம் பெற்றவர்களால்தான் அழிக்க முடிகிறது என்றால் அதுதான் தேவன் வைத்திருக்கும் டிசைன். இந்த டிசைன் மூலம் அவர் நமக்கு ஒரு பாடம் கற்றுக்கொடுக்க விரும்புகிறார். அந்தப் பாடம் என்ன?

**"எலியாவின் ஆவி எதிர்க்கும், ஆனால் கிறிஸ்துவின் ஆவிதான் அழிக்கும்"** இதுதான் அந்தப் பாடம். கிறிஸ்து பிரதான ஆசாரியர் மட்டுமல்ல, அவர் ராஜாதி ராஜா (வெளி 17:14, வெளி 19:16, 1 தீமொ 6:15). அவர் மெல்கிசேதேக்கின் வழிவந்த ராஜரீக ஆசாரியர் (எபி 5:10, 7:1). கிறிஸ்துவின் ஆவிக்குள் எலியாவின் ஆவியும் அடக்கம். அதனால்தான் ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களிடம் கேட்டபோது அவர்கள் உம்மை எலியா என்றும், யோவான் ஸ்நானகன் என்றும் சொல்கிறார்கள் என்று சீஷர்கள் பதிலளித்தார்கள் (மத் 16:13,14).

அதே நேரத்தில் வானராக்கினியின் ஆவியை அழிக்க கிறிஸ்துவே நேரடியாக வரமாட்டார் என்பதை கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம். அவர் அந்திகிறிஸ்துவோடு நடக்கப்போகும் அர்மெகதான் யுத்தத்தில்தான் நேரடியாக வெளிப்படுவார். ஆனால் அதற்கு முன்பாக வானராக்கினி அழிக்கப்பட்டாக வேண்டும். அதைக் கிறிஸ்துதான் அழிக்க வேண்டும், இது எப்படி சாத்தியம்?

கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன்

**"அவன்தான் அவர்"** என்பதுதான் அந்தப் பெயரின் அர்த்தம். நமக்கு வேதத்தில் பலவேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் மக்கள் நமக்குக் கொடுத்து, அதை வேதமும் ஏற்றுக்கொண்ட பெயர்தான் "கிறிஸ்தவன்" என்பது. **ராஜரீக ஆசாரிய அபிஷேகம் பெற்ற நம்மைக் கொண்டுதான் அவர் வானராக்கினியின் ஆவியை அழிக்கப்போகிறார்.** இதற்கு யெகூ அடையாளமாய் இருக்கிறான். இப்போது ஒரு ஆச்சரியமான செய்தியைச் சொல்கிறேன். "யெகூ" என்ற பெயரின் அர்த்தம் தெரியுமா? יֵהוּא Yēhū', meaning "Yahu is He"

**"அவன்தான் அவர்"** என்பதுதான் யெகூ என்ற பெயரின் அர்த்தம். இந்த ஒற்றை உண்மையைப் புரியவைக்கத்தான், இந்த ஒற்றை அத்தியாயத்துக்குத்தான் இத்தனை அத்தியாயங்களையும், இத்தனை செய்திகளையும் எழுதினேன். பழைய ஏற்பாட்டிலேயே வானராக்கினியின் ஆவியை மொத்தமாக முடிக்கப்போவது யார் என்பதை பிதா சூசகமாக சொல்லிவிட்டார். ஆனானப்பட்ட எலியாவும் எலிசாவுமே யேசபேல் காலத்தில் வாழ்ந்தாலும், யேசபேலின் சாவு யெகூவின் கையில்தான் என்பது எழுதப்பட்ட நியதி. **அதே போல பாபிலோன் மகா வேசியின் முடிவு யெகூவாகிய சபையின் கையில்தான் என்பது கர்த்தர் எழுதின சட்டம்.** இது மாறவே மாறாது.

இன்று சபை தூங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் உலகத்தார் விழித்துக்கொண்டார்கள், இந்த உலகக் கட்டமைப்பின் தீமைகள் குறித்து உரக்கப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். இதுபற்றி திரைப்படங்களும் அநேகம் வெளிவர ஆரம்பித்துவிட்டன. இந்த சிஸ்டத்துக்கு தப்ப வேண்டுமானால் "தற்சார்பு பொருளாதாரம்தான்" சரியான வழி என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள். மகிழ்ச்சியான விஷயம், இப்படி எழும்பியிருப்பவர்களை நாம் உண்மையிலேயே பாராட்ட வேண்டும். ஆனால் பாபிலோனுக்குள் இருந்துகொண்டே பாபிலோனை வீழ்த்தமுடியாது என்பதை அவர்கள் விரைவில் அறிந்துகொள்வார்கள். ஒன்று உங்கள் தற்சார்பு பொருளாதாரத்தை பாபிலோன் விழுங்கிக் கொள்ளும், அல்லது உங்களையே விழுங்கிவிடும். அது பயங்கர கொலைபாதக ஆவி!

கிறிஸ்துவின் ஆவியால் மாத்திரமே இந்த சிஸ்டத்தை வீழ்த்தமுடியும். ஏனெனில் அதற்கென்று அபிஷேகிக்கப்பட்டது கிறிஸ்துவின் ஆவி மாத்திரமே! கிறிஸ்துவின் ஆவி "சபை" எனும் அமைப்பில் மாத்திரமே இருக்கிறது. சபை என்றவுடன் தயவு செய்தி கிறிஸ்தவ மதத்தைச் சொல்வதாக நினைத்துக் கொள்ளாதீர்கள். மதரீதியான கிறிஸ்தவமும் பாபிலோனின் ஒரு அங்கமாகத்தான் இருக்கிறது. அது பாபிலோனின் கையில் அது ஒரு வலுவான ஆயுதமாகவும் இருக்கிறது, அதில் கிறிஸ்து இல்லை.

"சபை" என்று நான் குறிப்பிடுவது பல்வேறு டினாமினேஷன்களாக பிரிந்து கிடக்கும் "திருச்சபைகள்" பற்றியும் இல்லை.

இங்கு நான் குறிப்பிடும் “சபை (மூலமொழியில் எக்ளீஷியா)" என்பது கண்ணுக்குப் புலப்படாதது. **கிறிஸ்துவின் ஆவியைப் பெற்ற தனித்தனி மனிதர்கள் ஆவியில் ஒரே அங்கமாக இணைந்திருக்கும் அமைப்பு.** இவர்களை பரிசுத்தவான்கள் என்று வேதம் அழைக்கிறது, இவர்கள் "சிறப்பான நோக்கத்துக்காக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" இவர்கள் நீங்கள்

காணும் எல்லா டினாமினேஷன் திருச்சபைகளிலும் உண்டு, இன்னும் சீனா போன்ற நாடுகளில் இரகசியமாக ஆராதிக்கும் பெயரிடப்படாத சபைகளிலும் உண்டு.

**சுருங்கச் சொன்னால் எக்ளீஷியாவில் உள்ளவர்கள் எல்லா டினாமினேஷன் திருச்சபைகளிலும் இருப்பார்கள். ஆனால் டினாமினேஷன் திருச்சபைகளில் உள்ள எல்லோரும் எக்ளீஷியாவில் அங்கமாக இல்லை.** வேதம் சொல்லுகிறபடி இந்த பூமியில் இருக்கும் சபைகளில் கோதுமையும் உண்டு, களைகளும் உண்டு. இந்த எக்ளீஷியா, HUIOS, மணவாட்டி என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படும் சபை இனி வரும் காலத்தில் ஒரு மாபெரும் சக்தியாக எழும்பி நிற்கும். அந்த சக்திக்கு முன்னால் வானராக்கினி எனும் போலி சக்தி இச்சகம் பேசி அடங்கியே ஆக வேண்டும்!

வானராக்கினிக்கு எதிரான சபையின் யுத்தம் எந்தத் தளத்தில் நடக்கப் போகிறது? அதில் சபை எப்படி வெல்லப்போகிறது?

## அத்தியாயம் 9: இரு யுத்தங்கள்

வானராக்கினியின் ஆவியை வீழ்த்தி இந்த வஞ்சகமான உலகக் கட்டமைப்பை உடைக்கப்போவது மணவாட்டி சபைதான் என்ற உண்மையை கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம். இதற்கான யுத்தம் எந்தத் தளத்தில் நடக்கப்போகிறது?

அதற்கு முன்னால் ஒரு ஒப்பீட்டுக்காக அந்திகிறிஸ்துவுடன் நடக்கப்போகும் அர்மெகதான் யுத்தம் பற்றி கொஞ்சம் பார்ப்போம். அது கிருபையின் காலம் முடிந்த பிறகு நடைபெறவிருக்கும் யுத்தம். அது இந்த பௌதிக உலகில், இரத்தம் தெறிக்க தெறிக்க நடக்கப்போகும் ஒரு பயங்கர யுத்தமாகும். இந்த யுத்தத்துடன் இதற்கு முன் நடந்த இரு உலகப்போர்களையும் ஒப்பிட்டால் அவை வெறும் தெருச்சண்டைக்கு சமானம்.

2022-ஆம் ஆண்டு கணக்கின்படி பூமியில் மொத்தம் சுமார் 13,080 அணு ஆயுதங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மொத்த அணுஆயுதங்களும் ஒரே நேரத்தில் வெடித்தால் மொத்த பூமியும் புல் பூண்டுகூட இல்லாமல் பஸ்பமாவது மட்டுமன்றி, பூமியிலிருந்து சுமார் 250 முதல் 460 கிலோமீட்டர் உயரத்திலிருந்து பூமியைச் சுற்றிவரும் சர்வதேச விண்வெளி மையமும்கூட பொசுங்கிப் போகுமாம். சமுத்திரத்தின் ஆழத்துக்குச் சென்று, அங்கிருக்கும் தரையை ஆழமாகத் தோண்டி, அதற்குள் போய் ஒரு underground bunker அமைத்தால் மட்டுமே தப்ப முடியும் என்ற நிலை.

என்னதான் சுயநலவாதியாக இருந்தாலும், சிந்திக்கும் திறனுள்ள மனிதன் இப்படிப்பட்ட ஒரு சேதத்தை தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்வானா? ஒரு தேசத்தில் இரண்டே இரண்டு இடங்களில் அணுகுண்டு போட்டதற்கே அமெரிக்காவிடம் ஜப்பான் சரணடைந்து ஒரு உலகப்போரே முடிவுக்கு வந்துவிட்டது. இதுதான் மனிதனின் இயல்பு. தேசங்களுக்குள் மூன்றாம் உலகப்போர் வெடித்தாலும் மனிதர்கள் இப்படித்தான் செயல்படுவார்கள். ஒருவர் மீது ஒருவர் அணுகுண்டுகளை வீசி மொத்தமாக அழிந்துபோகும் மூடத்தனத்தை மனிதன் ஒருபோதும் செய்ய மாட்டான். எந்த ஒரு உயிரினமும் ஒட்டுமொத்தமாக தன்னைத்தானே அழித்துக் கொள்ளாது.

அப்படியானால் இத்தனை அணு ஆயுதங்கள் எதற்காக?

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் அதே மனிதர்கள் அதைத் தடுக்கவும், தவிர்க்கவும், அழிக்கவும் போராடிக் கொண்டிருக்கும் விந்தையையும் நாம் இந்த உலகத்தில் பார்க்கிறோம். அணு ஆயுதப் பரவல்தடுப்பு ஒப்பந்தம் (NPT), முழுமையான அணுகுண்டு சோதனைத் தடை உடன்பாடு (CTBT), அணுஆயுத தடை சட்டம் (TPNW) இவைகளெல்லாம் எதற்கு?

வகைதொகையில்லாமல் அணு ஆயுதங்களை தயாரித்துக் குவிக்கும் மனிதனே அதற்குப் பயந்து அதை அழிக்கவும் போராடுகிறான் என்றால் இவன் என்ன split personality-யா? இந்த முரணை எப்படிப் புரிந்துகொள்வது?

ஒரே இனமாக உள்ள மனிதர்களை தேசம் என்கிற எல்லைக்கோடுகளால் பிரித்து, அவர்களுக்குள் சண்டைமூட்டி, அவர்களை வைத்தே தனது இறுதி யுத்தத்துக்குத் தேவையான ஆயுதங்களை சத்துரு தயார் செய்கிறான். இன்னொரு பக்கம் பல மில்லியன்கள் செலவு செய்து ஹாலிவுட் படங்களில் ஏலியன்கள் பூமியை ஆக்கிரமிக்க வருவதாக பூச்சாண்டியும் காட்டுகிறான். **ஆக, இத்தனை அதிநவீன பயங்கர ஆயுதங்களும் அர்மெகதானுக்காகத்தான் தயாராகிறது என்பதை உங்களால் யூகிக்க முடிகிறதா?**

அதுமட்டுமன்றி 1962-ஆம் ஆண்டு அமெரிக்கா விண்வெளியில், அதாவது பூமியிலிருந்து 400 கிமீ உயரத்தில் ஒரு அணுகுண்டை வெடிக்க வைத்து சோதனை செய்தது. இந்த சோதனைக்குப் பெயர் Starfish Prime என்பதாகும். இந்த ஆய்வுக்கான காரணங்கள் பல சொல்லப்பட்டாலும், பூமியில் நடைபெறப்போகும் யுத்தத்துக்கு தயாரிக்கப்பட்ட ஒரு அணுகுண்டை, பூமியின் சூழலுக்கு சம்பந்தமே இல்லாத விண்வெளியில் வைத்து சோதிக்க வேண்டிய அவசியம் என்ன? அந்த அணுகுண்டு space warrior-ஆக புராணங்களில் காட்டப்படும் Thor என்ற நார்டிக் கடவுளின் பெயருடைய ராக்கெட்டில் வைத்து அனுப்பப்பட்டது கூடுதல் தகவல். இது விண்வெளியில் நடக்கப்போகும் யுத்தத்துக்கான முன்னோட்டம்தான் என்பதில் சந்தேகமில்லை. தற்பொழுது அமெரிக்கா United States Space Command என்ற பெயரிலும், ரஷ்யா Russian Space Force என்ற பெயரில் விண்வெளிப் போருக்கான படைகளை தயார் செய்து வைத்துள்ளன. முன்னாள் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஒரு உரையில் "நம்முடைய படையில் ஐந்தாவது படையான விண்வெளி போர் படை நம்மிடையே உள்ளது" என்று பெருமிதத்தோடு பேசியதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

யுத்தத்தில் ஒரு அணி இப்படி நேர்த்தியாக தயாராகிக் கொண்டிருக்க, அதன் எதிரணியின் ஆயத்தங்கள் எப்படி இருக்கும்? அந்த எதிரணி மத்திய ஆகாயத்தில் கல்யாண விருந்தை முடித்துவிட்டு, எந்த ஆயுதங்களும் இல்லாமல் வெறுங்கையுடன் மெல்லிய வெண்ணங்கி தரித்து ஏதோ church choir-இல் போய் பாட்டுப்பாடப் போகிறது போல யுத்தத்துக்கு வருவதாகத்தான் வெளி 19-ஆம் அதிகாரம் சொல்கிறது. ஐயய்யோ என்ன சொல்றீங்க? அப்படியானால் யுத்தம் என்னாவது? இந்த அதிபயங்கர அணு ஆயுதங்களுக்கு முன்பாக அந்த எதிரணி தாக்குப்பிடிக்குமா?

வெண்ணங்கி தரித்த அந்த எதிரணியின் மாபெரும் சேனை பூமிக்கு வந்து இறங்கும் முன்பதாக ஒரு தூதன் வந்து சூரியனில் நின்று அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து: நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், யுத்த கமாண்டர்களின் மாம்சத்தையும்,

போர்வீரர்களின் மாம்சத்தையும் புசிப்பதற்கு மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று மகா சத்தமாக கூப்பிடுவதாக வெளி 19:18 கூறுகிறது. நீங்கள் ஹாலிவுட் படங்களில்கூட பார்க்கமுடியாத மரண மாஸ் சீன் இது!

எதிரி தன் அணு ஆயுதங்களை இன்னும் நூறு மடங்காகப் பெருக்கினாலும் யுத்தத்தின் முடிவு ஏற்கனவே நிர்ணயிக்கப் பட்டாகிவிட்டது. கர்த்தர் அந்திகிறிஸ்துவை தமது நாசியின் சுவாசத்தினால் அதம்பண்ணுவார் என்று 2 தெச 2:8 கூறுகிறது. நாம் அப்பேற்பட்ட மகா வல்லமையுள்ள ஆண்டவரைப் பின்பற்றுகிறோம்!

இந்த அர்மெகதான் யுத்தமானது கிருபையின் காலம் முடிந்த பின்னால் இந்த முப்பரிமாண, மாம்ச உலகில் நடக்கும் யுத்தமாகும். ஆனால் வானராக்கினிக்கும் சபைக்குமான யுத்தம் நாம் வாழும் கிருபையின் காலத்தில் நடக்கப்போகும் யுத்தம். "உங்களுக்கு யுத்தம் உண்டு" என்று சொன்னதே தவிர இந்த யுத்தத்துக்கு வேதாகமம் எந்தப் பெயரும் இடவில்லை, இரு ஒரு குறிப்பிட்ட காலக்கணக்கில் நடைபெறும் யுத்தமல்ல, விடிகாலையில் மெதுமெதுவாக இருளை வெளிச்சம் கவ்விக்கொள்வதுபோல படிப்படியாகவும் இறுதியில் மகா வலிமையாகவும் ஆவி மண்டலத்தில் நடக்கப்போகும் யுத்தம்.

இந்த கிருபையின் காலத்தில் நமக்கு மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யுத்தம் இல்லை. இது துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் ஆவிக்குரிய மண்டலத்தில் நடக்கவிருக்கும் போராட்டமாகும். **யுத்தம் வேறு பரிமாணத்தில் நடந்தாலும், அதன் விளைவுகளும், தாக்கங்களும் இந்த பௌதீக உலகில் அப்பட்டமாகத் தெரியும்.**

யுத்தம் வேறொரு பரிமாணத்தில் நடக்கும் என்றால் அதை எப்படி விளங்கிக் கொள்வது? அந்திகிறிஸ்து என்பவன் மாம்சத்தில் வெளிப்படப்போகும் ஒரு நபர். ஆனால் இந்த உலகக் கட்டமைப்பும், அதற்குப் பின்னால் உள்ள வானராக்கினியின் ஆவியும் கண்ணுக்குப் புலப்படாதவை. எனவே அவைகளோடு நடக்கும் போரும் ஆவிமண்டலத்தில் நடைபெறும் யுத்தமாகத்தான் இருக்கும்.

இந்த உலகக் கட்டமைப்பு ஒரு அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது. அதை நொறுக்கினால், உலகக் கட்டமைப்பும் நொறுங்கிப் போகும். அதைத்தான் சபை நொறுக்கப்போகிறது. அந்த அஸ்திபாரம் எது தெரியுமா?

"பில்லி சூனியம்..."

## அத்தியாயம் 10: மாபெரும் பில்லிசூனியம்

ஒரு யுத்தம் செய்வதற்கு முன்னால் எதிரியின் பலம் என்ன? அவனுடைய அரண் எப்படிப்பட்டது? அது எதினால் கட்டப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளுதல் அவசியம். கடந்த ஆறாயிரம் ஆண்டுகளாக மனிதனை அடக்கி வைத்திருக்கும் இந்த பாபிலோனிய உலகக் கட்டமைப்பு எதின்மேல் நிற்கிறது? பொதுவாகவே எந்த சட்டம் போட்டாலும் அதை மீறக்கூடிய

இயல்புடையவன்தான் மனிதன். ஏதேன் தோட்டத்தில் பல்லாயிரம் நன்மைகளை வைத்து, ஒரே ஒரு சட்டத்தைப் போட்டதற்கு அதையும்கூட உடைத்தெறிந்ததுதான் அவனுடைய சுபாவம். அப்படியிருக்க அவனுக்கு எதிரான, அவனை முழுக்க முழுக்க கட்டுப்படுத்தி வைத்திருக்கும் ஒரு சிஸ்டத்துக்குள் அவன் எதிர்த்து நிற்காமல், பொட்டிப் பாம்பைப்போல அடங்கிக் கிடப்பது எப்படி?

பிசாசின் இரகசியங்களை அறிந்துகொள்வது எளிது. தேவன் என்னனென்ன செய்கிறாரோ அதையே காப்பியடித்து அதற்கு எதிராக செய்வதுதான் அவனுடைய இயல்பு. தேவன் தாம் சிருஷ்டித்த நட்சத்திரங்களையும், கோள்களையும், பூமியையும் எதினால் நிலைநிறுத்தி வைத்திருக்கிறார்? எந்த வல்லமையினால் அவைகள் கட்டுண்டு, அதனதன் சுற்றுப்பாதையிலிருந்து சற்றும் விலகாமல் கோடிக்கணக்கான ஆண்டுகளாக அவை சுற்றிவருகின்றன? அவருடைய "வார்த்தை" எனும் வல்லமையினால்...

(வார்த்தையாகிய) அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் (வார்த்தையாகிய) அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோ 1:17), "குமாரனாகிய இவர் பிதாவுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்..." என்று எபி 1:3 கூறுகிறது. ஆம், அகிலமும் அவருடைய "வார்த்தை" என்கிற அஸ்திபாரத்தில்தான் நிற்கிறது.

இப்போது மறுபடியும் பாபிலோனுக்கு வருவோம். **எப்படி அண்டமானது வார்த்தை எனும் அஸ்திபாரத்தில் நிற்கிறதோ அப்படியே உலகக் கட்டமைப்பு பில்லிசூனியம் எனும் அஸ்திபாரத்தில்தான் நிற்கிறது.** பில்லிசூனியத்துக்கு "Spell" என்கிற பெயரும் உண்டு. "Spell" என்கிற வினைச்சொல் "சொல்" என்கிற வினையைக் குறிக்கிறது. சில சொற்களை திரும்பத் திரும்ப சொல்வதன் மூலம் ஒரு சக்தியை உருவாக்குவதுதான் மாந்திரீகம் ஆகும். இரண்டுமே வார்த்தைதான், ஒன்று நேர்மறையான தேவனுடைய வார்த்தை, இன்னொன்று எதிர்மறையான பிசாசின் வார்த்தை.

வேதத்தில் லூசிபர், அந்திகிறிஸ்து, பெயல்செபூல், அப்பொல்லியோன், மேமன் என பல விழுந்துபோன தூதர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பாபிலோன் வேசியாகிய வானராக்கினியை மட்டுமே வேதம் திரும்ப திரும்ப பில்லிசூனியத்துடன் இணைத்துப் பேசுகிறது.

பாபிலோன் குமாரத்தியாகிய கன்னிகையே...சந்தான சேதமும் விதவையிருப்பும் ஆகிய இவ்விரண்டும் உனக்குச் சடிதியாக ஒரேநாளில் வரும்; உன் திரளான சூனியங்களினிமித்தமும், உன் வெகுவான ஸ்தம்பன வித்தைகளினிமித்தமும் அவைகள் பூரணமாய் உன்மேல் வரும் (ஏசா 47: 1,9)

தன் வேசித்தனங்களினால் ஜாதிகளையும், தன் சூனியங்களினால் வம்சங்களையும் விற்கிற மகா சூனியக்காரியும் ரூபவதியுமாயிருக்கிற வேசியினுடைய திரளான வேசித்தனங்களினிமித்தம் (நாகூம் 3:4)

விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன்

வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே (வெளி 18:23)

நிம்ரோத், ஹமுராபி போன்றோர் வாழ்ந்த பண்டைய பாபிலோன் இருந்த மெசபடோமியா பகுதியில் நடந்த அகழ்வாராய்ச்சியில் க்யூனிஃபார்ம் எழுத்துக்களில் எழுதப்பட்ட, பில்லிசூனியம் சார்ந்த கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. பிறகு நேபுகாத்நேச்சார் காலத்திய பாபிலோன் நகரத்தில் இருந்த நூலகங்களில் பில்லிசூனியம் மற்றும் ஆபாசம் சார்ந்த ஏகப்பட்ட நூல்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. ஆக, சகல பில்லிசூனியங்களின், வேசித்தனங்களின் தாயகம் பாபிலோன்தான்.

பாபிலோன் வேசியாகிய வானராக்கினியின் மனிதவடிவமாகவே வாழ்ந்த யேசபேலை யெகூ சூனியக்காரி என்று அழைக்கிறான். இரதத்தில் ஏறி யெஸ்ரயேலை நோக்கி வந்துகொண்டிருந்த யெகூவை, யேசபேலின் மகனாகிய யோராம் இடையில் வழிமறித்து "யெகூவே சமாதானமா?" என்று கேட்க, அதற்கு யெகூ, "உன் தாயாகிய யேசபேலின் வேசித்தனங்களும் அவளுடைய பில்லி சூனியங்களும், இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் ஏது?" என்று கேட்டதாக 2 இராஜா 9:22 கூறுகிறது.

பிரியமானவர்களே! இந்த உலகக் கட்டமைப்பு பில்லிசூனியம் எனும் ஒரு ஆவிமண்டலத்துக்குரிய சக்தியை அஸ்திபாரமாகக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறபடியினால்தான் மாம்சத்தில் இருக்கும் மனிதனால் அதை மேற்கொள்ள முடியவில்லை. எனவேதான் வேதம் உங்கள் யுத்தம் ஆவிக்குரிய மண்டலத்தில்தான் இருக்கிறது என்று சொல்லுகிறது, அதற்கேற்ற விதத்திலான சர்வாயுதவர்க்கத்தையும் நமக்குக் கொடுத்திருக்கிறது. நாமோ அதைக்குறித்த சிந்தனையே இல்லாமல் இருக்கிறோம்.

சூனியம் என்ன செய்யும்?

இருள் என்ன செய்யுமோ அதைத்தான் சூனியமும் செய்யும். இருள் பொருட்களை மறைக்கும், மறைத்தது இருள்தான் என்பது பார்ப்பவர்களுக்குத் தெரிந்துவிடும். **ஆனால் சூனியம் வஞ்சகமானது, அது கண்களை மறைக்கும், மறைத்தது தான்தான் என்பதையும் மறைத்துவிடும்.** யாராவது வந்து கண்களை திறந்துவிடாத வரையில் உண்மை விளங்கவே விளங்காது. இந்த உலகக் கட்டமைப்பை ஆளும் பிரபஞ்சத்தின் தேவனுடைய ஆவி மனதைக் குருடாக்கும் ஆவி என்று 2 கொரி 4:4 சொல்லுகிறது. தமிழில் பிரபஞ்சத்தின் தேவன் மனதைக் குருடாக்கினான் என்று ஆண்பாலில் மொழிபெயர்த்திருந்தாலும் மூலமொழியில் Theos என்பது இருபாலையும் குறிக்கும். உண்மையில் ஆவிகளுக்குள் பாலினம் என்பதே இல்லை. ஒரு புரிதலுக்காக அவற்றின் செயல்பாடுகளை வைத்து அவை வகைபிரிக்கப்பட்டுள்ளன. பிரபஞ்சம் என்ற வார்த்தைக்கு "Age" என்று அர்த்தம். சாத்தானின் பிரதிநிதியாக அந்திகிறிஸ்து வெளிப்படும் Age of Tribulation வரும்வரை, இந்த Age of Grace-இல் சாத்தானின் பிரதிநிதியாக உலகில் செயல்படுவது பாபிலோனின் ஆவிதான்.

பில்லிசூனியத்தில் மந்திர உச்சரிப்புகள் மட்டுமன்றி பல்வேறு மூலிகைப் பொருட்களும் பயன்படுத்தப்படுகின்றன. அப்படி பயன்படுத்தப்படும் பல மூலிகைகளில் Tropane Alkaloid என்ற புத்திமயக்கத்தை (halucination) ஏற்படுத்தும் மூலப்பொருள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

நீங்கள் சிறுவயதில் படித்த கதைகளில் சூனியக்காரிகள் ஒரு துடைப்பத்தில் ஏறி வானத்தில் பறப்பதாக கதைகள் படித்திருப்பீர்கள். அது சூனியத்தின் விளைவாக ஏற்படும் புத்திமயக்கத்தை (halucination) குறிக்கிறது.

உலகம் ஒரு Matrix-க்குள் சிக்குண்டிருப்பதாக இந்த புத்தகத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். அந்த Matrix என்பது பில்லிசூனியத்தால் ஏற்படும் புத்திமயக்கம்தான். இதை அறிவியல் மொழியில் விளக்க வேண்டுமென்றால் மூளையை programme செய்து வைப்பது. எப்படி ஒரு programme செய்யப்பட்ட கம்பியூட்டர் அந்த programme-ஐத் தாண்டி செயல்பட முடியாதோ, அப்படியே programme செய்யப்பட்ட மனித மூளையும் அதைத் தாண்டி சிந்திக்க முடியாது. இங்கு மனித மூளையை programming செய்யும் வேலையில் கல்வி, ஊடகங்கள், கலைத்துறை, வணிகம், மதம், அரசியல் அத்தனையும் பங்கு வகிக்கின்றன.

உதாரணத்துக்கு, ஒரு மனிதனுக்கு பணம் சம்பந்தமான பிரச்சனை ஏற்பட்டால் "இப்போ தெரியுதா பணத்தின் அருமை?" என்று அவனைது குடும்பத்தினரும், சுற்றியிருப்பவர்களும் சொல்வார்களே தவிர "இப்போ தெரியுதா இந்த உலக சிஸ்டத்தின் வஞ்சகம்?" என்று சொல்லவே மாட்டார்கள். அப்படி சொல்ல அவர்களுக்குத் தெரியாது. இந்த பூமியின் வளங்கள் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது, இந்த உலகில் உள்ள அனைவருக்கும் அது சமமாகவும், அபரிமிதமாகவும் வழங்கப்பட்டுள்ளது என்கிற "ஒரிஜினல் சிஸ்டம்" பற்றிய புரிதல் அவர்களது சூனியத்துக்குள் அகப்பட்ட மூளைக்குள் வரவே வராது.

தனக்கு பணத்தின் அருமை புரியாததால்தான் இத்தனை பிரச்சனைகளும் என்று நம்பும் அந்த மனிதன் மேலும் மேலும் சிஸ்டத்துக்குள் விழுந்து சின்னாபின்னமாவானே தவிர அதிலிருந்து மீளமாட்டான். இந்த உலகத்தின் value சிஸ்டங்களும், போதனைகளும் அப்படித்தான் கட்டமைக்கப்பட்டுள்ளன. "இப்போ தெரியுதா இந்த உலக சிஸ்டத்தின் வஞ்சகம்?" என்று என்றைக்கு பேச்சுவழக்குகள் வருகிறதோ அன்றைக்கு பாபிலோனின் அஸ்திபாரங்களில் விரிசல் விழத் துவங்கிவிட்டது என்று அர்த்தம். "இதைச் சொல்லிக்கொடுப்பவன் யார்?" என்று இந்த உலகின் திரைமறைவு ராஜாக்கள் தேட ஆரம்பிப்பார்கள்.

சொல்லிக்கொடுப்பது தேவபுத்திரராக இருந்தால் அவர்களை எதிரிகளால் ஒன்றும் செய்ய முடியாது. **ஏனெனில் தேவபுத்திரருக்குப் பின்பாக ஒரு அதிகாரமிக்க அரசும், வலிமைமிக்க சேனையும், சர்வவல்லமை பொருந்திய தேவனும் இருக்கிறார்கள்.** ஆனால் சபை தனது தூக்கத்தை இன்னும் தொடருமானால் சாதாரண மனிதர்கள் இந்த சிஸ்டத்துக்கு எதிராக போர்குரல் எழுப்பத் தொடங்குவார்கள். நாம் கூப்பிடாவிட்டால் கல்லுகளும் கூப்பிடும். ஆனால் பாவம், அவர்கள் குரல்கள் நசுக்கப்படும், குரல்வளைகள் அறுக்கப்படும்!

சபையே! பாபிலோனுக்கு எதிராக உன் யுத்தத்தை என்றுதான் தொடங்கப்போகிறாய்???

வேசித்தனமும் பில்லிசூனியமும் எப்பொழுதுமே ஒருங்கிணைந்து போகும் விஷயங்களாகும். இரண்டிற்குமே ஃபார்முலா ஒன்றுதான். இவை இரண்டுக்குமே ஆதாரத் தேவை இரு விஷயங்கள். ஒன்று **வலிமையான நோக்கம்**, மற்றொன்று அந்த நோக்கத்திற்கு நேராக **ஒன்று திரட்டப்பட்டு வெளியிடப்படும் சக்தி(energy).** உடலுறவின்போது வலிமையான மனித மனம் அந்த உறவையும் அதில் கிடைக்கும் இன்பத்தையும் தவிர வேறு எதையுமே சிந்திக்காது. இதுதான் வலிமையான

நோக்கம். அந்த வலிமையான நோக்கம்தான் இறுதியில் சக்தியானது உடலிலிருந்து வெளியேறக் காரணமாகிறது. இதே நுட்பத்தைத்தான் பில்லிசூனியம் பயன்படுத்துகிறது.

எனவேதான் வானராக்கினியை வேசி என்றும் சூனியக்காரி என்றும் வேதம் அடையாளப்படுத்துகிறது.. முதலாவதாக வலிமையான நோக்கம், அடுத்ததாக அந்த நோக்கத்துக்கு நேராக ஒன்று திரட்டி வெளியிடப்படும் சக்தி இந்த இவ்விரண்டும் இல்லையானால் பில்லி சூனியம் செயல்படமுடியாது. இந்த இரண்டில் ஒன்றை அழித்தாலும் பில்லிசூனியத்தின் செயல்பாட்டைத் தடுத்துவிடலாம்.

ஆதியில் பாபேல் கோபுரத்தைக் கட்டத் துவங்கிய மனிதர்களுக்கு தாங்கள் பூமியெங்கும் சிதறிப்போய்விடக்கூடாது என்கிற ஒருமித்த வலிமையான நோக்கம் இருந்தது. "இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள் (ஆதி 11:6) என்று கர்த்தரே கூறுவதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். கர்த்தர் அவர்கள் பாஷையை தாறுமாறாக்கி ஒருமித்த, வலிமையான நோக்கத்தை சீர்குலைக்க, அவர்களது செயல்பாடும் தடைபட்டுப் போனது.

பரலோக ராஜ்ஜியம் பூமியில் கட்டப்பட நமக்கும் ஒரு வலிமையான நோக்கம் தேவை. அந்த வலிமையான நோக்கம் மூன்று விஷயங்களுக்கு நேராக குவிக்கப்பட வேண்டும். **முதலாவது கர்த்தருடைய நாமம் பூமியில் மகிமைப்பட வேண்டும், இரண்டாவது அவருடைய அரசு பூமியில் நிலைநிறுத்தப்பட வேண்டும், மூன்றாவது அவருடைய சித்தம் பூமியில் செய்யப்பட வேண்டும்(மத் 6:9,10).** இதைத்தான் கர்த்தர் நமக்கு ஜெபமாகவும் கற்றுக்கொடுத்தார். சாத்தானுடைய ராஜ்ஜியமாகிய பாபிலோனைக் கட்டும் பணியை கர்த்தர் எந்த யுத்தியைப் பயன்படுத்தி சிதறடித்தாரோ, சாத்தானும் அதே யுத்தியை நம்மிடம் பயன்படுத்தி கர்த்தருடைய இராஜ்ஜியம் கட்டப்படும் பணியை தடைசெய்கிறான். நாமும் பரமண்டல ஜெபத்தை வெறும் சடங்காச்சாரமாக சொல்லிவிட்டு, நம்முடைய பெயரைப் பெருமைப்படுத்தவும், நம்முடைய சுயராஜ்ஜியம் கட்டப்படவும், நம்முடைய சொந்த விருப்பங்களை நிறைவேற்றவும் நமது வலிமையான நோக்கத்தைப் பயன்படுத்தி, செய்ய வேண்டிய வேலையை விட்டுவிட்டோம்.

இப்பொழுது teknon ஆக இருக்கும் சபை huios-ஆக வளரவேண்டுமென்றால் விசுவாசிகளின் நோக்கங்கள் மீண்டும் இந்த மூன்று விஷயங்களை நோக்கித் திருப்பப்பட வேண்டும். **அதைத் திரும்பத் திரும்ப சபையில் பிரசங்கிக்க வேண்டும்.** இன்னமும் "ஆலயத்துக்குள் செருப்புப் போடாதே, ஜீன்ஸ் போடாதே, தலைக்கு டை அடிக்காதே" என்பது போன்ற பயனற்ற, புளித்துப்போன, பரிசேயப் பிரசங்கங்களைச் செய்துகொண்டிருந்தால் எதிர்காலத்தில் அப்படிப்பட்டவர்களிடமிருந்து பிரசங்கபீடங்கள் பிடுங்கப்பட்டு தேவசித்தத்துக்கேற்ற பிரசங்கங்களைச் செய்வோரின் கையில் ஒப்படைக்கப்படும். சவுல்களை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் தேவசித்தம் செய்யும் தாவீதுகளை அமரவைப்பது தேவனுக்கு கடினமான காரியமல்ல, அவருக்கு இது ஒன்றும் புதிதுமல்ல.

சரி, இப்போது அந்த பில்லிசூனியத்திலுள்ள இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பார்ப்போம். உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் ஆண் உறுப்பு வழிபாடு இருப்பது நமக்குத் தெரியும். இதை

phallic worship என்பார்கள். இதுவும் பாபிலோனிலிருந்து துவங்கியதுதான். இதற்குப் பின்னால் உள்ள தாத்பரியம் என்ன?

வேசித்தனமும், பில்லிசூனியமும் ஒருங்கிணைந்து செல்லும் விஷயங்கள் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த வேசித்தன அடையாளத்தைப் புரிந்துகொண்டால், பில்லிசூனியத்தின் சூட்சுமத்தையும் விளங்கிக்கொள்ளலாம். இந்த உலகக் கட்டமைப்புக்கு அஸ்திபாரமான பில்லிசூனியம் வலுவாக நிற்பதற்குப் பின்னால் சாத்தானுடைய வலிமையான நோக்கம் இருக்கிறது. இந்த வலிமையான நோக்கத்தை ஆண் உறுப்பிற்கு உதாரணமாகக் கொண்டால், அந்த வலிமையான நோக்கத்துக்கு இடமளிக்கும் பெண் உறுப்பு மனிதனின் "பயம்" ஆகும். **சாத்தானின் வலிமையான நோக்கமும், மனிதனின் பயமும் சேர்ந்ததுதான் இந்த பில்லிசூனியக் கட்டமைப்பு.** ஆக, இந்த வேசித்தனத்தில் மனிதனுக்கும் பங்குண்டு! ஆண் உறுப்பையும், பெண் உறுப்பையும் சேர்த்து ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதை வணங்கச் செய்யும் பிசாசின் தந்திரம் எத்தனை மோசமானது பாருங்கள்! மனிதனை எந்தக் கட்டமைப்பு அடிமை கொண்டிருக்கிறதோ அந்த கட்டமைப்பை விளக்கும் சூட்சுமத்துக்கே ஒரு உருவம் கொடுத்து, அதை விக்கிரகமாக்கி அதையே மனிதனை வணங்கச் செய்யும் வஞ்சகப் புத்தியை என்னென்பது!

மனிதனை 24/7 பயத்திலேயே வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான் செய்தி ஊடகங்கள் வழியாகவும், சினிமாக்கள், சோஷியல் மீடியாக்கள் வழியாகவும் மனிதனின் பயத்தை அதிகரிக்கும் விஷயங்கள் தொடர்ந்து காட்டப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. மனிதனிடம் பயம் அதிகரிக்க அதிகரிக்க இந்த பில்லிசூனியத்தின் பிடி இன்னும் இறுகிக்கொண்டேதான் இருக்கும்.

ஆகவேதான் வேதம் "பயப்படாதே" என்ற வார்த்தையை திரும்பத் திரும்பக் கூறுகிறது. பயம் எனும் நதி ஊற்றெடுக்கும் மூலம் "மரணம்" ஆகும். நன்றாக சிந்தித்துப் பாருங்கள், இங்கு மரணம் இல்லாவிட்டால் பயமும் இல்லை. பயத்திலெல்லாம் பெரிய பயம் மரண பயமே! எனவேதான் மரணத்தையும், மரணபயத்தையும் அழிக்க கர்த்தரே மனிதனாக அவதரிக்க வேண்டியிருந்தது.

ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் (எபி 2: 14,15).

இந்த உலகின் மிகப்பெரிய, பிரபல போதகர்கள் அங்கீகரிக்கிறார்களோ இல்லையோ, வேதாகமக் கல்லூரிகள் அங்கீகரிக்கின்றனவோ இல்லையோ, சாவாமை என்ற நிலையை huios-ஆகிய சபை ஒருநாள் எட்டியே தீரும். சாவாமையை எட்டிய பிறகு அல்ல, சாவாமை குறித்த சத்தியப் புரிதலை அடைந்தாலே பயங்கள் எல்லாம் அற்றுப்போய்விடும். சாவாமை குறித்து இங்கு எழுத சமயமில்லை. அது மிக மிகப் பெரிய சப்ஜெக்ட். கர்த்தருக்கு சித்தமானால் அதைக்குறித்த புத்தகம் ஒன்றை எழுத விரும்புகிறேன்.

இப்படியாக மரணபயம் உட்பட, எந்த பயமுமே இல்லாத ஒரு சந்ததி ஒருநாள் எழும்பி நிற்கும். அப்பொழுது சாத்தானின் பில்லிசூனிய அஸ்திபாரம் உடையத் துவங்கும். இங்கு எண்ணிக்கை என்பது விஷயமே இல்லை. ஒட்டுமொத்த பாபிலோன் கட்டமைப்பையும் மொத்தமாக சரியவைக்க

ஒரு சிறு கூட்ட விசுவாசிகள் போதும். ஒருவன் ஆயிரம் பேருக்கும், இருவர் பத்தாயிரம் பேருக்கும் சமம் என்பதுதான் தேவனுடைய கணக்கு. இது புதிதல்ல, இதற்கு நிழலாட்டமாக ஏற்கனவே ஒரு சம்பவம் வேதத்தில் நடந்திருக்கிறது. ஒருவன் ஆயிரம் பேரை வீழ்த்திய கதை!

யேசபேல் நானூற்றைம்பது பாகால் தீர்க்கதரிசிகளையும், நானூறு தோப்பு விக்கிரத்தின் தீர்க்கதரிசிகளையும் தன்னுடன் கூடவே வைத்திருந்தாள். இவர்கள் யேசபேலோடு பந்தியிருக்கிறவர்கள் என்று வேதம் சொல்லுகிறது. கர்மேல் பர்வதத்தில் நடந்த போட்டியில் எலியாவிடம் தோற்றுப்போய் கொல்லப்பட்டவர்கள் இவர்கள்தான். அந்த சம்பவத்தைப் படித்து நாம் இவர்களை டம்மியாகவும், காமெடியன்களைப் போலவுமே பார்த்து பழகிவிட்டோம். ஆனால் இவர்கள் நாம் நினைப்பதுபோல சாதாரண ஆட்கள் அல்ல, யேசபேல் உண்டாக்கி வைத்திருந்த பில்லிசூனிய ராஜ்ஜியத்தின் தூண்கள்தான் இவர்கள்தான். இவர்கள் அத்தனைபேர்களும் பில்லிசூனியத்தில் வித்தகர்கள். இவர்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷயத்தில் வல்லவனாக இருந்திருப்பான்.

பலிபீடத்திலுள்ள பலியை அக்கினியை வரவைத்து சுட்டெரிப்பதெல்லாம் இவர்களுக்கு எளிதான காரியமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் ஒரு எலியாவின் விசுவாசத்துக்கு முன்பாக இந்த 950 பேரின் பில்லிசூனியம் செயலற்றுப் போயிற்று என்பதுதான் உண்மை. இப்படி நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்து வந்திருக்கமாட்டார்கள். எலியா அவர்களை கிண்டல் செய்ததும், இகழ்ந்ததும் அவர்களைக் குறித்தோ, அவர்களது சூனியத்தைக் குறித்தோ அவனுக்கு துளியும் பயமே இல்லை என்பதைக் காட்டுகிறது.

ஒருவரை கேலி, கிண்டல் செய்து இகழுவோமானால் அவர்களைக் குறித்து நமக்கு பயமே இல்லை என்று அர்த்தம். கர்த்தருக்கு விரோதமாகவும்,கிறிஸ்துவுக்கு விரோதமாகவும், பூமியின் திரைமறைவு ராஜாக்களும், அதிகாரிகளும் எழும்பி நின்று "அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம்" என்று சொல்லும்போது "பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்" என்று சங்கீதம் 2:2-4 கூறுகிறது. இது தேவனுடைய பயமற்ற தன்மையைக் காட்டுகிறது. "மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே?" என்ற வார்த்தைகள் மரணத்தின் மீது பயம் அற்றவன், மரணத்தை ஜெயித்தவன், மரணத்தை இகழும் வார்த்தைகளாகும்.

கடைசி நாட்களில் நான் எலியாவை அனுப்புவேன் என்று கர்த்தர் மல்கியா 4:5-இல் கூறுவதை அறிந்திருக்கிறோம். கிறிஸ்துவின் ஆவிக்குள் எலியாவின் ஆவியும் அடக்கம் என்று ஏற்கனவே கடந்த அத்தியாயங்களில் எழுதியிருந்தேன். கிறிஸ்துவின் சாயலை ஒத்த பூரண சாயலை அடையும் பயணத்தில் நாம் எலியாவைக் கடந்துதான் செல்வோம். இந்தக் கடைசிகால யுத்தத்தில் யெகூவும், எலியாவும் வெவ்வேறு ஆட்களல்ல, இரண்டும் சபை என்னும் ஒரே நபர்தான். பாபிலோன் வேசியின் பில்லிசூனியத்தை எலியாவைப் போல உடைக்கப்போவதும், யெகூவைப்போல அவளுடைய அழிவுக்கு காரணமாக இருக்கப்போவதும் சபையாகிய நாம்தான்!

இந்த உலகத்தில் இருக்கும் ஏற்ற தாழ்வுகளுக்கும், மேடுபள்ளங்களுக்கும் இந்த உலகக் கட்டமைப்புதான் காரணம் என்பதை இந்த தொடரின் பல இடங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்த மேடுபள்ளங்கள் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும் இந்த ஏற்றதாழ்வின் blue print மக்களது மனங்களில்தான்

கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது மனம் என்கிற பரிமாணத்தில் (mental realm) என்ன இருக்கிறதோ அதுதான் இந்த பௌதீகப் பரிமாணத்தில் (physical realm) வெளிப்படுகிறது. அது அப்படித்தான் வெளிப்படும், அதுதான் நியதி. அது எப்படியென்பதை விளக்குகிறேன்.

Occult என்றதும் நம்மில் அநேகருக்கு சாத்தான் வழிபாடு, மாந்திரீகம் ஆகியவைதான் நினைவுக்கு வரும். ஆனால் Occult என்ற சொல்லின் பொருள் "மறைக்கப்பட்ட ஞானம்" என்பதாகும். இந்த பிரபஞ்சத்தின் இயங்கியலுக்குப் பின்னால் இருக்கும் சூட்சுமத்தைக் கண்டுபிடிப்பதுதான் Occult ஆகும். இது பண்டைய கிரேக்கத்தில் மிகவும் பிரபலம். கிரேக்க ஞானம் கோலோச்சியிருந்த முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த "மறைக்கப்பட்ட ஞானம்" சுத்த சுவிசேஷத்தோடு கலந்துவிடாமல் நிறையவே போராட வேண்டியிருந்தது.

இந்த Occultist-டுகள் ஒருவிஷயத்தை தங்கள் அடிப்படைச் சூத்திரமாக கூறுவார்கள். அது "As above so below, as within so without" என்பதாகும். இதை தமிழ் வழக்கில் சொன்னால் உங்களுக்கு தெளிவாகப் புரியும். "அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது, பிண்டத்தில் உள்ளதே அண்டத்திலும் உள்ளது". அதாவது காணக்கூடாத பரிமாணத்தில் என்ன இருக்கிறதோ அதுதான் காணக்கூடிய பரிமாணத்திலும் வெளிப்படுகிறது. இது உண்மையா பொய்யா என்று என்னைக் கேட்டால், இதை சொன்ன நபர்களோடு நமக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், சொன்ன கருத்து வேதத்தின் பிரமாணத்துக்குப் புறம்பானதல்ல. நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்களோ அதைத்தான் பெற்றுக்கொள்வீர்கள் என்பதும், நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது என்பதும், பரமண்டலங்களில் உமது சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று நாம் ஜெபிப்பதும் இதன் அடிப்படையில்தான்.

வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார் என்று சங்கீதம் 115:16 சொல்லுகிறது. பூமியின் ஆளுகை மனிதருக்குரியது. **இங்கு "ஆளுகை" என்பதன் பொருள் "காணக்கூடாத பரிமாணத்தில் என்ன இருக்க வேண்டும் என நிர்ணயிக்கும் உரிமை" ஆகும்.** காணக்கூடாத பரிமாணத்தில் என்ன இருக்க வேண்டும் என்று மனிதனது **பொதுமனம் (collective mind)** நிர்ணயிக்கிறதோ, அதுவே இந்த காணக்கூடிய பௌதிக உலகத்தில் வெளிப்படுகிறது. வானங்கள் நேர்த்தியாகவும், கிரமமாகவும், ஒரு குறிப்பிட்ட ஒழுங்கிலும் இருக்கக் காரணம் அவை கர்த்தருடையவைகள். அதாவது கர்த்தருடைய மனதில் என்ன இருக்கிறதோ அது அங்கு வெளிப்பட்டிருக்கிறது. அதை நிர்ணயிக்கும் உரிமை அவருக்குரியது.

பூமியின் ஆளுகை மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் சாத்தானாலும் நேரடியாக தனது சித்தத்தை இந்த பூமியில் செயல்படுத்த முடியாது. அவன் தனது சித்தத்தை இந்த பூமியில் செயல்படுத்த மனிதனின் பொதுமனதைக் (collective mind) கைப்பற்ற வேண்டும். இங்குதான் வானராக்கினியின் சூனியம் சாத்தானுக்கு உதவுகிறது. **அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருப்பதாக வெளி 17:1 கூறுவதன் பொருள் மனிதர்களின் பொதுமனம் அவளுடைய பில்லிசூனியத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான்.**

அந்த பில்லிசூனியமாகிய மதுவின் போதை மனிதனுடைய பொதுமனதில் ஏற்படுத்திய தாறுமாறுதான் இந்த பூமியில் மேடுபள்ளங்களாக, சமூக ஏற்றதாழ்வுகளாக வெளிப்பட்டிருக்கிறது. சில பொருளாதார நிபுணர்கள் இவ்விதம் கூறுவதுண்டு, இந்த உலகில்

ஒரு சிறுகூட்ட பணக்காரர்களும், ஒரு பெருங்கூட்ட நடுத்தரவர்க்க மக்களும், இன்னொரு பெருங்கூட்ட ஏழைகளும் இருக்கிறார்கள். இந்த உலகத்தில் இருக்கிற பணத்தையெல்லாம் சமமாகப் பிரித்து அனைவருக்கும் கொடுத்தால், அடுத்த ஐந்தே வருடங்களில் அதே பழைய நிலை திரும்பிவிடும். அதாவது பெரும்பகுதிப் பணம் ஐந்தே ஆண்டுகளில் மீண்டும் அதே சிறுகூட்ட பணக்காரர்களைச் சென்று சேர்ந்துவிடும். முன்பு நடுத்தரவர்க்கமாகவும், ஏழைகளாகவும் இருந்தவர்கள் மீண்டும் அதே நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவார்கள் என்கிறார்கள். இது எப்படி சாத்தியம்? இதற்கான programming மனிதனது பொதுமனதில் எழுதப்பட்டிருக்கிறது. ஆயிரம் காரல் மார்க்சுகள் எழும்பினாலும் இந்த நிலை மாறாது.

பிதாவின் சித்தம் பரமண்டலங்களில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்பட வேண்டுமென்றால் மனிதனது பொதுமனம் கர்த்தருடைய நன்மையும் பிரியமுமான சித்தத்தினால் மறுரூபமாகவேண்டும். மனிதனது பொதுமனம் ஒருநாளில் மொத்தமாக சூனியத்திலிருந்து விடுபட்டுவிடாது. அதற்குத்தான் கர்த்தர் ஒரு சிறுகூட்ட ஜனத்தை இந்த பூமியில் தனக்கென பிரித்தெடுத்து அவர்களது பொதுமனதை தனது சித்ததினால் மறுரூபப்படுத்தினார். அதன் விளைவாக “விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்” என்று அப் 4:32 கூறுகிறது.

இங்குதான் பரலோகராஜ்ஜியத்தின் புளித்தமாவு உவமை பொருந்துகிறது. புளித்தமாவு எப்படி ஆகச்சிறியதாக இருந்தாலும் விரைந்து பரவி மொத்த பிசைந்த மாவையும் புளிக்கச் செய்கிறதோ, அப்படியே ஒரு சிறுகூட்ட ஜனங்களின் விடுதலையாக்கப்பட்ட, மறுரூபமாக்கப்பட்ட பொதுமனமானது சூனியத்தில் பீடிக்கப்பட்டிருக்கும் பெருங்கூட்ட ஜனங்களின் பொதுமனதை பாதித்து அதையும் மறுரூபமாக்கும். அப்பொழுது சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். முழங்கால்கள் யாவும் கிறிஸ்துவுக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிடும்.

பிசைந்த மாவின் பொதுமனதில் இருக்கும் மேடுபள்ளம் எப்படி இந்த பூமியில் சமூக ஏற்றதாழ்வுகளாக வெளிப்பட்டதோ அப்படியே புளித்த மாவின் பொதுமனதில் ஏற்பட்ட மறுரூபம் ஆதித் திருச்சபைக்குள் சமநிலையைக் கொண்டுவந்தது. காரல் மார்க்ஸும், ஏங்கல்ஸும் பிறப்பதற்கு முன்பாகவே, யாரும் செங்கொடி பிடித்துவந்து கம்யூனிசம் கற்றுக் கொடுக்காமலேயே பொதுவுடமை அங்கு பூத்துக் குலுங்கத் தொடங்கியது.

விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது (அப் 4:32). ஒரு கடையில் இருக்கும் மொத்த ஸ்வீட்டுக்கும் ஒர் சாம்பிளை எடுத்து கடைக்காரர் ருசிபார்க்கக் கொடுப்பதுபோல, அது ஒரு முன்ருசி மாத்திரமே! மொத்த ஸ்வீட்டையும் இனி நாம்தான் அனுபவிக்கப்போகிறோம். நம்மூலமாக இந்த பூமியின் ஒவ்வொரு சிருஷ்ட்டியும் அனுபவிக்கப்போகிறது.

ஆனால் கர்த்தர் வேறுபிரித்து எடுத்துவைத்த கொஞ்ச மாவு இன்னும் புளிக்கவில்லை என்பதுதான் இங்கு பிரச்சனையே! ஒட்டுமொத்த சிருஷ்டியும் விடுதலைக்குக் காத்திருக்கிறது, பூமி ஒரு மாபெரும் மாற்றத்துக்காக காத்திருக்கிறது. பூமியைக் கெடுத்த தள்ளப்பட்ட தூதர்

சேனையை துவம்சம் செய்ய பரலோக தூதர் சேனை காத்திருக்கிறது. எடுத்து வைத்த கொஞ்ச மாவு இன்னும் புளிக்கவில்லை. ஆனால் அதற்கான நேரத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது நம்முடைய தேவையெல்லாம் இருக்கும் கொஞ்ச மாவை சரியான பதத்துக்குப் புளிக்க வைக்கும் சாரம் மிகுந்த பிரசங்கங்களே!

## அத்தியாயம் 11: நாம் செய்ய வேண்டியது என்ன?

புதிய ஏற்பாடு சபை மக்களை பிள்ளைகள் (teknon) என்றும் புருஷர் (huios) என்றும் இரண்டு பிரிவாக பிரித்திருப்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். எல்லா சபைகளிலும் ஒரே நேரத்தில் இந்த இரண்டுவிதமான மக்களும் இருப்பார்கள். அதே நேரத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை என்பது ஒற்றை நபர்தான். அவள் பெந்தேகொஸ்தே நாளன்று பிறந்து, சிறுமியாக(teknon) இருந்து, வளர்ந்து வாலிபப் பருவத்தை(huios) எய்துகிறாள், அதன் பிறகே ஆட்டுக்குட்டியானவருடன் மனைவியாக இணைகிறாள் என்பதை கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம். இந்த இருவிதங்களிலும் நாம் இந்த காரியத்தை விளங்கிக்கொள்ள வேண்டும்.

நம் வீட்டிலுள்ள சிறு குழந்தைகள்மீது, அவர்கள் செய்ய வேண்டிய அடிப்படைக் கடைமைகளைத் தவிர வேறு எந்த பெரிய பொறுப்புகளையும் சுமத்தமாட்டோம். அதே நேரத்தில் அந்தக் குழந்தை வாலிபனாக வளர்ந்த பின்னர், அதுவரை தந்தை செய்துவந்த பெரிய பொறுப்புகளை தன் தோளில் சுமக்கும் கடைமை அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. அவன் தன் தந்தை போலவே தானும் நடந்துகொள்ளும்படி எதிர்பார்க்கப்படுகிறான். ஒரே நபர்தான் ஆனால் அவன் வளர்ச்சியைப் பொறுத்து அவன் பொறுப்புகளும், அவன் மீது உள்ள எதிர்பார்ப்பும் மாறுபடுகிறது. சபை என்ற தனி மனுஷிக்கும் அப்படித்தான்!

மணவாட்டி குழந்தைப் பருவத்தில் இருந்தபொழுது, பெற்றுக்கொண்ட இரட்சிப்பை காத்துக்கொள்வதையும், பிரதான கட்டளையை நிறைவேற்றும் அடிப்படைக் கடைமையையும் தவிர அவளுக்கு வேறு எந்த பெரிய பொறுப்புக்களும் கொடுக்கப்படவில்லை. அவள் தனது சகல குழந்தைத்தனங்களோடும்கூட, ஆவியானவரது துணையோடு தனக்குக் கொடுக்கப்பட்ட பணியை இதுவரை சிறப்பாக செய்து முடித்திருக்கிறாள் என்றே சொல்ல வேண்டும்.

பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி 1:28)

இக்கட்டளையில் முதல் பாதியை கிட்டத்தட்ட நிறைவேற்றியாகிவிட்டது. பலுகவும், பெருகவும், பூமியை நிரப்பவும் பிள்ளைகளாக இருந்தாலே போதுமானது. ஆனால் பூமியைக் கீழ்ப்படுத்தவும், அதை ஆண்டுகொள்ளவும் அந்தப் பிள்ளை வாலிபப்பருவம் எய்தவேண்டும். அந்தப் பருவத்தின் ஆரம்ப கட்டத்தைத்தான் இப்பொழுது எட்டியிருக்கிறோம். இதை எப்படிச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டால், அந்தந்த வயதில் பிள்ளைகளுக்கு அந்தந்தப் பருவத்துக்குரிய முதிர்ச்சியும், செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்கிற எண்ணமும் தானாக வந்துவிடும். யாரும் சொல்லித்தராமெலேயே சில பொறுப்புக்களை அவர்களாகவே நிறைவேற்றத் தொடங்கிவிடுவார்கள்.

இந்த programming-ஐ தேவன் நமது டி.என்.ஏவிலேயே எழுதி வைத்திருக்கிறார். சரியான பருவம் வரும்பொழுது அந்த code தானாக activate ஆகி, இயங்கத் தொடங்கிவிடும், அதற்கேற்ற ஆவிக்குரிய ஹார்மோன்கள் சுரக்கத் தொடங்கிவிடும். அதன் விளைவுதான் நாம் இப்பொழுது இதுபோன்ற விஷயங்களை யோசிக்கவும், தியானிக்கவும், விவாதிக்கவும் தொடங்கியிருக்கிறோம்.

சபை பிள்ளையாக (teknon) இருந்த காலத்தில் ஒரு குழந்தை எப்படி தனது பெற்றோரால் பராமரிக்கப்படுமோ அப்படியே ஒவ்வொரு teknon-ம் கர்த்தருடைய நேரடி பராமரிப்பின் கீழ் இருக்கிறான். இந்தச் சூழலில் பொருளாதாரச் செழிப்பை அறிந்துகொள்வதைவிட பிதாவின் பராமரிப்பை விசுவாசிக்கும்படி கர்த்தராகிய இயேசு மத்தேயு 6: 24-34-இல் மலைப்பிரசங்கத்தில் உபதேசித்த காரியங்களே அவன் அறிந்துகொள்ள வேண்டிய பிரதான சத்தியமாக இருக்கிறது.

அதுமட்டுமன்றி, பிள்ளையாக இருக்கும் ஒரு விசுவாசி இன்னும் மாம்சத்துக்குரியவனாகத்தான் இருக்கிறான் என்று 1 கொரி 3:1 கூறுகிறது. ஏற்கனவே தேவனோடு இணங்க முடியாமல், மாம்சத்தோடு போராடிக்கொண்டிருக்கும் ஒருவனிடம் பொருளாதாரச் செழிப்பைக் குறித்து பிரசங்கித்தால் அது பஞ்சுக்கு அருகில் நெருப்பை வைத்த கதையாகிவிடும் என்று சமகாலத்தில் இருந்த பல போதகர்களும், பிரசங்கிமார்களும் நினைத்ததால் அதை எதிர்த்தார்கள், எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் நியாயமும் இருக்கிறது. காரணம் பண ஆசைக்கு எதிராக ஏகப்பட்ட வசனங்கள் வேதம் முழுக்க காணப்படுகிறது. மாம்சத்தில் இருக்கும் ஒரு teknon எளிதாக பண ஆசைக்குள் விழுந்துவிடும் அபாயத்தில் இருக்கிறான்.

இந்தச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திகொண்ட பிசாசானவன் தனது "வறுமை உபதேசத்தை" சபைக்குள் கொண்டு வந்தான். அது இன்னும் பல மடங்கு ஆபத்தானது. **teknon-க்கு செழிப்பை handle பண்ணும் பக்குவம்தான் இல்லையே தவிர அவனுக்கு செழிப்பே இல்லை என்று வேதத்தில் இல்லை.** செழிப்பு பிள்ளைகளின் அப்பம். எனவே அவனை பண ஆசை இல்லாதவனாகவும் உருவாக்க வேண்டும், பெரும் செழிப்பைப் பெற்றுக்கொள்ளவும், அதை பிதாவின் சித்தப்படி பயன்படுத்தும் முதிர்ச்சிக்கு நேராகவும் அவனை ஆயத்தப்படுத்த வேண்டும்.

இங்கு பிரச்சனை என்னவென்றால் பக்குவம் இல்லாத ஒரு கூட்ட teknon-களிடம் செழிப்பைப் பேசி அவர்களை செழிப்பு பரிசேயராக்கும் பிரசங்கியார்கள் இருக்கிறார்கள். அல்லது இன்னொரு கூட்ட teknon-களிடம் செழிப்புக்கு எதிராகப் பேசி அவர்களை தரித்திர மனநிலைக்குள் தள்ளும் பிரசங்கியார்கள் இருக்கிறார்கள். இந்த இரு தரப்புக்கும் இடையே விசுவாசிகள் கிடந்து "எது சரி?" என்ற குழப்பத்தில் அல்லாடுகிறார்கள்.

இங்கு நமக்கு இருக்கும் நம்பிக்கை என்னவென்றால் குழம்பின குட்டைதான் தெளியும் என்பது போல இந்த இருதரப்பாரும் ஒரு காலத்தில் தெளிவுக்கு வந்துவிடுவார்கள் என்பது உறுதி. teknon-களுக்கு பிதாவின் பராமரிப்பை விசுவாசிக்கச் செய்யும் பிரசங்கங்களும், பயிற்சிகளும் அவசியத் தேவை. இந்தப் பருவத்தில் ஒரு தேவபிள்ளை முழுக்க முழுக்க தேவனைச் சார்ந்து வாழும் வாழ்வைக் கற்றுக்கொள்ள வேண்டும். **மத்தேயு 6: 24-34 தான் அவர்களுக்கான அடிப்படை syllabus.** இந்தப் பாடமும், பயிற்சியும்தான் அவர்களை உலகக் கட்டமைப்பு தரும்

பயத்திலிருந்தும், அதன் சூனிய மயக்கத்திலிருந்தும் விடுவிக்கும். இந்த syllabus நமக்குள் பண ஆசையையும் அனுமதிக்காது, நம்மை செழிப்பிலிருந்து வேறுபக்கமும் திருப்பாது.

இந்த syllabus-இல் கற்றுத் தேர்ந்த huios-க்கள் செழிப்பை அபரிமிதமாகவும், இடங்கொள்ளாமல் போகுமட்டும், நிரம்பி வழியும் அளவு பெற்றுக்கொள்ளவும் ஆயத்தமாக இருப்பார்கள். **இங்கு அழகு என்னவென்றால் அவர்களுக்கு "நான்" என்கிற உணர்வு முற்றிலும் அற்றுப் போயிருக்கும், "நாம்" என்கிற உணர்வே மேலோங்கியிருக்கும்.** அந்த "நாம்"-க்குள் அத்தனை சிருஷ்டிகளும் அடக்கம். இரண்டாம் ஆதாமின் மக்கள் பூமியைக் கீழ்ப்படுத்தவும், அதை ஆண்டுகொள்ளவும் போகும் தருணம் இதுதான். இந்த ஆளுகைக்குத் தேவை செல்வம், அதற்கு இந்த பூமியின் ஒட்டுமொத்த கஜானாவும் தேவபுத்திரர் வசம் வந்தாக வேண்டும். கானானின் ஏழு ஜாதிகள் தாங்கள் சம்பாதித்துக் கட்டியவைகளை இஸ்ரவேலரிடம் விட்டுவிட்டு ஓடியது போல, பாபிலோனிய வேசி தான் சம்பாதித்து கட்டிய அனைத்தையும் தேவபுத்திரரிடம் விட்டுவிட்டு ஓட வேண்டிய நிலை வரும்.

சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்; நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய்; அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியைப் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும் நியமிப்பாய் (மீகா 4:13).

அதின் வியாபாரமும், அதின் பணையமும் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்படும்; அது பொக்கிஷமாய் சேர்க்கப்படுவதும் இல்லை; பூட்டி வைக்கப்படுவதும் இல்லை; கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும்(ஏசா 23:18)

### மணவாட்டியின் சிம்மாசனம்:

பூமியில் கர்த்தர் தனது மணவாட்டிக்கென்றே பிரத்யேகமாக நியமித்த சிம்மாசனம் ஒன்று இருக்கிறது. அந்த சிம்மாசனம் பெந்தேகொஸ்தே நாளில் மணவாட்டி பிறப்பதற்கு முன்னிருந்தே, ஆதியிலிருந்தே இந்த பூமியில் இருக்கிறது. அது ராஜாக்களின் சிம்மாசனம் அல்ல, ராஜாக்களை ஆளுகை செய்யும் கண்ணுக்குப் புலப்படாத சிம்மாசனம்.

ஆதியாகமம் முதற்கொண்டு யாராரெல்லாம் இந்த huios மனநிலைக்கு வருகிறார்களோ அவர்களையெல்லாம் அந்த சிம்மாசனம் தன்னிடத்தில் ஈர்த்துக்கொள்ளுகிறது. யோசேப்பு, தானியேல், தெபோராள், சாமுவேல், நாத்தான், எலியா, எலிசா, மொர்தேகாய் என இப்பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. எதற்கும் தலைவணங்காத பூமியின் ராஜாக்கள் இந்த சிம்மாசனத்துக்கு முன்பாக பணிந்துதான் ஆகவேண்டும்.

ஏனென்றால் இந்த கண்ணுக்குப் புலப்படாத சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்களும் ராஜாக்கள்தான், ஆவிக்குரிய ராஜாக்கள். மாம்சீக ராஜாக்கள் இந்த ஆவிக்குரிய ராஜாக்களை எளிதில் இனம் கண்டுகொள்வார்கள், அவர்களுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துவார்கள்,

அவர்களை கனம் பண்ணுவார்கள், கௌரவிப்பார்கள் அதுதான் டிசைன்...அதைத்தான் வேதம் முழுவதிலும் பார்க்கிறோம்.

"ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான்; என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான்"(லூக்கா 7:6-8).

பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல(யோசேப்பு) வேறொருவன் உண்டோ என்றான் (ஆதி 41:38)

பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து...(ஆதி 41:42,43)

அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, அவனுக்குக் காணிக்கை செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான் (தானி 2:46)

பூமியின் ராஜாக்களுக்கு ஏன் இந்த ஆவிக்குரிய சிம்மாசனத்தின் மீது ஒரு தீராக்காதலும், மரியாதையும் இருக்கிறதென்றால், இந்த ஆவிக்குரிய சிம்மாசனம் "ஞானத்தின்" சிம்மாசனம் ஆகும். அந்த ஞானத்தின் மேன்மை நமக்குத்தான் புரியவில்லை, அதை ராஜாக்கள் நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள். அந்த "ஞானம்" இல்லாவிட்டால் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர்களுக்குத் தெரியும்.

என்னாலே (ஞானம்) ராஜாக்கள் அரசாளுகிறார்கள், பிரபுக்கள் நீதிசெலுத்துகிறார்கள் (நீதி 8:15)

அதனால்தான் உனக்கு என்ன வேண்டும் என்று கர்த்த சாலொமோனிடம் கேட்ட பொழுது, அவன் "வேறு எதுவும் வேண்டாம், அரசாள ஞானம் தாரும்; அது போதும்" என்றான். அந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்ட அவன் உலகிலேயே தலைசிறந்த அரசனாக வாழ்ந்து மரித்த வரலாறும் நமக்குத் தெரியும்.

வேதத்திலும் சரி, இன்றைய நடைமுறை உலகிலும் சரி, தன்னைச் சுற்றிலும் ஜோதிடர்களையும், மந்திரவாதிகளையும், ஆன்மீகத் தலைவர்களையும் வைத்துக்கொள்ளாத அரசர்களும், பிரதமர்களும், அதிபர்களும், முதல்வர்களும் யாராவது உண்டா? யாரிடம் ஆன்மீக ஞானமும், ஆவிக்குரிய அதிகாரமும் இருக்கிறதோ அவர்களைச் சார்ந்துகொண்டு, அவர்கள் சொல்கேட்டு ஆட்சி செலுத்துவதுதான் அன்றுமுதல் இன்றுவரை நடைமுறையாக இருக்கிறது.

பண்டைய கிரேக்கத்தில் உண்மையில் நடந்ததாக ஒரு புத்தகத்தில் நான் வாசித்த சம்பவம். அது ஜோதிடமோ அல்லது வானசாஸ்திரமோ அதிகமாக பரவாமல் இருந்த காலம். அப்பொழுது

கிரகங்களின் நகர்வுகளை ஆய்வு செய்துகொண்டிருந்த ஒரு மனிதன், எந்த சீரான இடைவெளியில் கிரகணங்கள் நிகழ்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கிறான். அடுத்த சூரிய கிரகணம் எந்த நாளில் வருகிறது என்பதை நிச்சயித்துக் கொள்கிறான்.

அந்த நாட்டு அரசனிடம் சென்று எனது மந்திர வித்தையால் சில நிமிடங்கள் சூரியனை என்னால் மறைய வைக்கவும், பின்னர் அதை மீண்டும் வானில் கொண்டு வந்து நிறுத்தவும் முடியும் என்கிறான். அந்த சம்பவத்தை அரங்கேற்ற அந்த மனிதன் குறித்துக் கொடுத்த நாளில் அரசன் ஒரு மிகப்பெரிய மக்கள் கூட்டத்தைக் கூட்டுகிறான். அந்த தேசமே நடக்கப்போகும் அதிசயத்தைக் காண ஆவலோடு காத்திருக்கிறது.

சரியாக கிரகணம் நடக்கவிருக்கும் வேளையில் அந்த மனிதன் ஒரு மேடையில் ஏறி நின்று சூரியனை நோக்கி கை நீட்ட அது கொஞ்சகொஞ்சமாக மறையத் தொடங்குகிறது. அவன் கையை மடக்கியதும் சூரியன் மீண்டும் படிப்படியாக வானில் தோன்ற, அரசன் முதல் அத்தனை பேரும் அந்த மனிதனது காலில் விழுகிறார்கள். பின்னர் அந்த மனிதனின் வாழ்க்கை எப்படி மாறியிருக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்துகொள்ளுங்கள்.

ஒருவன் தான் நினைத்ததை தடையே இல்லாமல் ஒரு ஊரிலோ, ஒரு தேசத்திலோ அல்லது ஒட்டுமொத்த பூமியிலோ சாதிக்க நினைத்தால் அவன் குறிவைக்க வேண்டியது இந்த சிம்மாசனத்தைத்தான். **உலகத்தின் ராஜாக்கள் இந்த சிம்மாசனத்திலிருந்து வரும் கட்டளைகளை நிறைவேற்றத்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.** மறுபடியும் சொல்கிறேன்...இதுதான் டிசைன்!

இந்த சிம்மாசனம் மாத்திரம் கிடைத்துவிட்டால் நாடே இல்லாத, ஒரு சிறு நாடோடிக்கூட்டம் கூட ஒரு நாகரீகமான நாட்டுக்குள் புகுந்து, அந்த நாட்டு அரசர்களை தன் வசப்படுத்தி, அந்த நாட்டின் அத்தனை வளங்களையும் சுரண்டி, அத்தனை அதிகாரங்களையும் தனக்கு சாதகமாக்கிக்கொண்டு தலைமுறை தலைமுறையாக சுகித்து வாழமுடியும்.

அதுதான் மணவாட்டியின் சிம்மாசனம். அதைத்தான் இப்பொழுது வானராக்கினியும் அவளது திரைமறைவு ராஜாக்களும் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அந்த அரியணையில் அமர்ந்திருப்பதால்தான் அவளது அத்தனை விருப்பங்களும் இப்பொழுது பூமியில் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. இந்த பூமியில் நடக்கும் காரியங்களையெல்லாம் கண்டு சாத்தானுடைய அதிகாரத்தை நினைத்து மனதுக்குள் வியந்துகொண்டிருக்கிறோம். **இது அவனுடைய அதிகாரமல்ல, நம்முடைய அதிகாரம்.** நம்முடைய சிங்காசனத்தில் வேறொருவன் அமர்ந்து அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

நமக்கான இந்த சிங்காசனம் எவ்வளவு மகிமையும், வலிமையும், கனமும் நிறைந்தது என்ற உண்மை சபைக்குப் புரிந்தால் நம் ஜெபங்கள் மாறியிருக்கும், நம் பிரசங்கங்கள் வேறுவிதமாக இருக்கும், விசுவாசிகளின் பொதுமனமும், ஏன் நாம் சபையில் பாடும் பாடல்களின் வண்ணமும்கூட மாறியிருக்கும்.

வேதம் முழுவதிலும் யோசேப்பு, தானியேல், சாமுவேல், மொர்தேகாய் என பல உதாரண புருஷர்களை தேவன் இந்த சிம்மாசனத்தில் உட்காரவைத்து, மணவாட்டியிடம் **"இதோ, இதுதான்**

**உன் இடம்"** என்று சுட்டிக்காட்டிக்கொண்டே இருக்கிறார். நமக்குத்தான் இன்னும் அது தலையில் உறைக்கவில்லை. அதுமட்டுமல்ல, ஒன்றா இரண்டா? ஏகப்பட்ட வாக்குத்தத்தங்களும் இந்த ஸ்தானத்தைக் குறித்தே நமக்குத் தரப்பட்டுள்ளன...

ஜாதிகளை அவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவனை ராஜாக்களுக்கு ஆண்டவனாக்கி...(ஏசா 41:2)

அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள். உன்னைச் சேவிக்காத ஜாதியும் ராஜ்யமும் அழியும்; அந்த ஜாதிகள் நிச்சயமாய்ப் பாழாகும். (ஏசா 60:10,12)

ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள்; தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள்; நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய் (ஏசா 49:23)

நான் பார்வோன்; ஆனாலும் எகிப்துதேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் யோசேப்பின் உத்தரவில்லாமல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக் கூடாது (ஆதி 41:44)

ராஜாக்கள் உனக்கு முன்பாக தரையிலே முகங்குப்புற விழுந்து, உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள் என்பதைவிட பூமியில் வேறு பெரிய ஸ்தானத்தை யார் நமக்கு வாக்குப்பண்ணமுடியும். வாக்குப் பண்ணினவர் இன்னும் அதே சிம்மாசனத்தில்தான் உட்காந்திருக்கிறார். நாம் எங்கே இருக்கிறோம்?

பூமியின் ராஜாக்களைப் பொறுத்தவரை அவர்கள் வானராக்கினியையும், அந்திகிறிஸ்துவையும் சேவிப்பதையோ, அல்லது இந்த பாபிலோனியக் கட்டமைப்பைக் கட்டிக் காப்பதையோ விருப்பத்தின் பேரில் செய்வதில்லை. அவர்கள் தோளின் மேல் இந்த துரைத்தனங்கள் உட்காந்திருப்பதால் வேறு வழியின்றி செய்கிறார்கள். **அவர்கள் ஆமான் கை ஓங்கினால் ஆமான் பக்கம் சாய்வார்கள், மொர்தேகாய் கை ஓங்கினால் மொர்தேகாய் பக்கம் சாய்வார்கள், அவ்வளவுதான்!**

பிசாசின் வடிவமாகவே மாறிய ஒருசிலரைத் தவிர பூமியின் ராஜாக்கள் அனைவருமே தங்கள் இருதயத்தின் ஆழத்தில் நல்லாட்சி புரியவேண்டும், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்கிற விருப்பம் உடையவர்கள்தான். ஆனால் அதற்கான சூழல் இங்கு இல்லை என்ற நடைமுறை உண்மையை அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். எனவேதான் அவர்கள் இருதயங்கள் கடினமாகி இருக்கிறது. இங்கு தேவை என்னவென்றால் ராஜாக்கள் திருந்த வேண்டுமென்பது அல்ல, மொர்தேகாய்கள் கை ஓங்க வேண்டும் என்பதுதான்.

### அரசாங்கம் நமக்குரியது:

இங்கு பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்று நியாயத்துக்காகப் போராடும் அத்தனை இயக்கங்களும் அரசாங்கத்துக்கு எதிராகத்தான் மக்களைத் திருப்புகின்றன. அவர்கள் மீது தவறில்லை, ஏனென்றால் அவர்களுக்கு அரசாங்கம்தான் தெரியுமே தவிர, அந்த அரசாங்கத்தின் தோளில் அமர்ந்திருக்கும் துரைத்தனங்கள் அவர்கள் கண்ணுக்குத் தெரியாது. எனவே

இயல்பாகவே அவர்களது கோபமும், போராட்டமும் அரசுக்கு எதிராகவே இருக்கும். அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் எழும்பிப் போராடும்பொழுது அரசானது காத்துக்கொள்ள தன்னிடம் உள்ள அத்தனை உபகரணங்களையும் பயன்படுத்தும். அதன் விளைவாகத்தான் புரட்சிகளும், அடக்குமுறைகளும், வன்முறையும், இரத்தம் சிந்துதல்களும் ஏற்படுகின்றன.

சபையோ அல்லது ஒரு தனிப்பட்ட விசுவாசியோ ஒரு பிரச்சனையில் எந்தப் பக்கம் நிற்க வேண்டும்? அதிகாரத்தின் பக்கமா? அல்லது பாதிக்கப்பட்டவர்களின் பக்கமா என்றால் சந்தேகமின்றி பாதிக்கப்பட்டவர்களின் பக்கம்தான். ஏனெனில் நம்முடைய தேவன் அப்படிப்பட்டவர்தான், அவர் திக்கற்றவர்களின் தேவன். எளியவர்களின் இரட்சகர் அவர்!

ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற (நீதி 31:8)

தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான் (நீதி 14:31)

அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார், அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார் (சங் 146:9)

பாதிக்கப்பட்ட, திக்கற்ற, எளியவர்களின் பக்கம் எப்பொழுதும் நம்மை நிற்கச்சொல்லும் அதே வேதம் அரசாங்கத்தை எதிர்த்து கலகம் செய்வதை ஆதரிக்கவில்லை. அரசை எதிர்த்து கலகம் செய்யாதே என்று சொல்வது மட்டுமல்ல, அரசுக்கு எதிராக தீது சொல்லாதே என்றும் சொல்லுகிறது.

நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக (யாத் 22:28)

மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி...அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்(1 பேதுரு 2:14)

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான் (ரோம 13:1,2)

இது என்ன முரண்! வேதம் ஒடுக்கப்பட்டவன் பக்கம் நில் என்கிறது, அதே நேரத்தில் ஒடுக்குகிறவனுக்கு எதிராக கலகம் செய்யாதே என்கிறது, இது எப்படி சாத்தியம்?

இங்கு நாம் ஒரு முக்கியமான விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது என்று ரோமர் 13:1 கூறுகிறது. அதன் பொருள் என்ன? கெட்டவர்களை அரியணையில் உட்கார வைத்து நல்லவர்களை வதைக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமா? நிச்சயமாக இல்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல **மக்களை ஆளும் சிங்காசனம் ராஜாக்களுக்கு உரியதென்றால், ராஜாக்களை ஆளும் சிங்காசனம் மணவாட்டிக்குரியது.** மணவாட்டியை

ராஜகுமாரத்தி என்று சங் 45:13 சொல்லுகிறது. நம்மை ராஜரீக ஆசாரியக்கூட்டம் என்று 1 பேதுரு 2:9 கூறுகிறது. மணவாட்டிக்கான சிங்காசனமானது அவளுக்காகவே, ஆதியிலிருந்தே நியமிக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரத்துக்குக் கீழ்படி என்று வேதம் நமக்கு அறிவுறுத்தக்காரணம் நம்மை கோழைகளாக மாற்ற அல்ல, **அந்த அதிகாரமே உனக்காக உருவாக்கப்பட்டதுதான், உனக்காக உருவாக்கிய டிசைனை நீயே உடைக்காதே** என்பதற்காகத்தான். சிங்காசனத்துக்கு உரியவர்களே அதை எதிர்த்து கலகம் செய்யலாமா? நியாயத்துக்காக நிற்பது என்பது வேறு, தேவ நியமத்தை உடைப்பது என்பது வேறு! அதிகாரத்துக்கு எதிர்த்து கலகம் செய்வது என்பது தேவ நியமத்துக்கு எதிரானது. இதனை முதன்முதலில் செய்தவன் லூசிபர்.

அரசை எதிர்த்து கலகமும் செய்யாமல், அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் செய்வது எப்படி என்பதை யாத்திராகமப் புத்தகம் நமக்குக் கற்றுத்தருகிறது. ஆரம்பத்தில் மோசே பாதிக்கப்பட்ட ஒரு எளியவனுக்கு உதவுவதாக நினைத்து உணர்ச்சிவசப்பட்டு ஒரு கலகம் செய்தான். அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விளைந்த நன்மை என்ன? ஒன்றுமே இல்லை, மோசே உயிருக்கு பயந்து நாட்டைவிட்டு தப்பியோடியதுதான் மிச்சம்!

ஆனால் அதே மோசேயை இரட்சகனாக எகிப்துக்குத் திருப்பி அனுப்பினார். இந்த முறை அவன் கலகக்காரனோ, புரட்சிக்காரனோ இல்லை. அவன் கையில் வில்லோ, வாளோ இல்லை. ஆனால் அவனுக்குப் பின்பாக பரலோக ராஜ்ஜியம் என்ற சர்வ வல்லமை பொருந்திய வல்லரசு இருந்தது.

இந்தமுறை மோசே முஷ்ட்டியை உயர்த்தி, உணர்ச்சிவசமாகப் பேசி ஜனங்களை பார்வோனுக்கு எதிராக தூண்டிவிடவில்லை, ஊர்வலங்களோ, பேரணிகளோ இல்லை, கடையடைப்புகள் இல்லை, பந்த் இல்லை, ஒரு உண்ணாவிரதம் கூட இல்லை.

பிரச்சனையானது அரசாங்கம் vs போராளிகள் என்று இல்லாமல், உலக அரசாங்கம் vs தேவ அரசாங்கம் என்பதாக மாறியது. பொதுவாக அரசுக்கும், பொதுமக்களுக்கும் பிரச்சனை என்றால் என்ன நடக்குமோ அந்த வழக்கமான காட்சிகள் எதுவும் அங்கு அரங்கேறவில்லை. முற்றிலும் வித்தியாசமான சம்பவங்கள் நடந்தன! உன் அத்தனை அதிகாரங்களுக்கும், மேலான "வீட்டோ பவர்" என்னிடம் உள்ளது என உலக அரசாங்கத்துக்கு தேவ அரசாங்கம் பாடம் நடத்தி புரிய வைக்க, கடைசியில் உலக அரசாங்கம் சாஷ்டாங்கமாகப் பணிந்தது. அடிமைகள் விடுதலையானார்கள்! இரத்தத்தோடும், காயங்களோடும், கண்ணீரோடும் அல்ல... பொன்னோடும், பொருளோடும், ஐசுவரியங்களோடும், எகிப்தைக் கொள்ளையிட்டு, துதியோடும், பாடலோடும், வெற்றி முழக்கத்தோடும் வெளியேறினார்கள்.

நாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு துணை செய்ய வேண்டும். கலவரக்காரர்களாக அல்ல, இரட்சகர்களாக!...

இதேதான் ஆதி அப்போஸ்தலர் காலத்திலும் நடந்தது "நீ உன் சேவகரை அனுப்பி அப்போஸ்தலரை சிறைப்படுத்தினால், நான் என் சேவகரை அனுப்பி விடுதலை செய்வேன்" என்று தேவன் தேவதூதர்களை அனுப்பி சிறைக் கதவுகளைத் திறந்துவிட அரசுக்கு அடிவயிறு கலங்கிப் போனது.

பிரியமானவர்களே! அதிகாரத்துக்கு எதிரான கலவரம் என்பது ஒருநாளும் விரும்பத்தக்க தீர்வைத் தராது. **ஒரு அதிகாரத்தை, அதைவிட மேலான அதிகாரத்தை வைத்து டீல் செய்வதே சரி.** அந்த மேலான அதிகாரத்தை தேவன் தன்னுடைய புத்திரருக்குக் கொடுத்திருக்கிறார். அந்த அதிகாரத்தை தேவபுத்திரர் பயன்படுத்தும்போது, பூமியின் ராஜாக்கள் இனியும் தாங்கள் மிருகத்தையும், வேசியையும் தங்களின் தோளில் சுமந்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை அறிந்துகொள்வார்கள். இதுதான் அவர்களுக்கான விடுதலை.. **ஆம், ராஜாக்களையும் விடுவிக்கும் இரட்சகர்களாகத்தான் கர்த்தர் நம்மை ஏற்படுத்தியிருக்கிறார்.** மேலான அதிகாரமான தேவபுத்திரரின் அதிகாரத்துக்கு தங்களை ஒப்புக்கொடுக்கும் முடிவை பூமியின் ராஜாக்களில் பலரும் எடுப்பார்கள்.

அதுதான் Climax fight-க்கான ஆரம்பம்!

## <u>அத்தியாயம் 12: ஆபரேஷன் செருபாபேல்</u>

இந்தப் புத்தகத்தை இதுவரை வாசித்து வந்தவர்களது மனதில் ஒரு கேள்வி இருக்கும். எல்லாம் சரிதான், கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோனை பழிதீர்ப்பதும், அழிப்பதும் ஒருபக்கம் இருக்கட்டும். முதலாவது அவர்களே பாபிலோனின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமே?

என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள் என்று வெளி 18:4-இல் கர்த்தரே தன்னுடைய ஜனங்களை அழைப்பதைப் பார்க்கிறோம். கலா 1:4 சொல்லுகிறபடி கர்த்தராகிய இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம் நாம் சட்டப்படி பாபிலோனிய கட்டமைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டாலும் பெற்ற விடுதலையை இன்னும் அனுபவிக்க முடியாமல் பாபிலோனின் சிறைக்குள் அடைபட்டுத்தானே கிடக்கிறோம்!

பாபிலோன் கட்டமைப்பிலிருந்து வெளியேறுவது அவ்வளவு எளிதான விஷயமா? அது எப்படி சாத்தியமாகும்?

நம்முடைய சொந்த பெலத்தால் அது முடியாததுதான். ஆனால் அவருடைய ஆவியினால் ஆகும். நாம் வாழும் புதிய ஏற்பாட்டு காலத்தில் நிஜமாக நடக்கவிருக்கும் சம்பவங்களுக்கு பழைய ஏற்பாட்டில் நிழலாட்டமான உதாரணங்கள் உண்டு. அப்படியொன்றைத்தான் இங்கு தியானிக்கப்போகிறோம்.

பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போன யூதர்கள் பெர்சிய மன்னனாகிய கோரேஸ் காலத்தில் விடுதலையாக்கப்பட்டு, மூன்று பிரிவுகளாக எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். அதில் 42,360 யூதர்களைக் கொண்ட முதல் பிரிவை தலைமையேற்று நடத்தி வந்தவன்தான் செருபாபேல்.

செருபாபேல் என்ற பெயரின் அர்த்தம் "பாபிலோனில் பிறந்தவன்" என்பதாகும். அவன் பாபிலோனில் பிறந்தவனாக இருந்தாலும் அங்கிருந்து விடுவிக்கப்பட்டு ஒரு பெருங்கூட்ட யூதர்களோடு எருசலேமுக்குத் திரும்புகிறான். எருசலேமுக்கு வந்து, 20 ஆண்டுகளுக்கும் மேலாக யூதேயாவில் கவர்னராகப் பணியாற்றி, பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேச்சாரால் இடிக்கப்பட்ட எருசலேம் தேவாலயத்தை திரும்பக் கட்டிமுடிக்கிறான்.

நடந்த சம்பவங்களின் கோர்வையை கவனித்துப்பாருங்கள். தேவஜனங்கள் பாபிலோனில் சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள். கர்த்தர் நியமித்த காலம் வந்தபொழுது அவர்களுக்கு விடுதலை கிடைக்கிறது. அவர்களுக்கு விடுதலை கிடைத்த அந்தத் தருணத்தில் எருசலேமானது தரைமட்டமாக்கப்பட்டு 70 ஆண்டுகளாக விஷப்பாம்புகளும், தேள்களும் மண்டிக்கிடக்கும் ஒரு இடமாக இருக்கிறது. பாபிலோனோ தற்போதைய நியூயார்க் நகரம் போல சகலவசதிகளுடன் கூடிய நவநாகரீகமான நகரம்.

ஆனாலும் யூதர்கள் தங்களுக்குக் கிடைத்த விடுதலையை புறக்கணித்துவிட்டு பாபிலோனிலேயே வசதியாக தங்கியிருக்காமல் எருசலேமுக்குத் திரும்பிப் போகவேண்டும் என்ற வலுவான முடிவை எடுத்தார்கள். எருசலேமுக்கு திரும்பிப் போய் கர்த்தருக்கு ஆலயம் கட்ட தீர்மானித்தார்கள்.

இங்கு வேதத்தில் இல்லாத ஒரு பாரம்பரியக் கதைகளில் கிடைக்கும் ஒரு தகவலையும் நான் சொல்லிவிடுகிறேன், செருபாபேல் அரசர் மாளிகையில் உயர்ந்த பதவியில் இருக்கிறான். அவன் ஒரு நன்கு படித்த ஒரு ஞானி. அரசர் வைத்த ஒரு அறிவுப் போட்டியில் பங்கேற்று செருபாபேல் வெற்றி பெறுகிறான். அவன் பெற்ற வெற்றிக்கு கிடைத்த அத்தனை பரிசுகளையும் மறுத்து, ஒரே ஒரு கோரிக்கையை அரசருக்கு முன்வைக்கிறான். அது என்னவென்றால் "என்னை யூதேயாவுக்கு கவர்னராக நியமியுங்கள், அங்கு இடிக்கப்பட்ட எருசலேம் தேவாலயத்தை மறுபடியும் கட்ட உதவி செய்யுங்கள்" என்பதே!

பிரியமானவர்களே! இதைத்தான் கடந்த அத்தியாயங்களில் "வலுவான நோக்கம்" என்று குறிப்பிட்டிருந்தேன். தனக்குக் கிடைத்த அத்தனை நன்மைகளையும் மறுத்து, செருபாபேல் தேவ ராஜ்ஜியத்துக்குத் தேவையான ஒரு வலுவான முடிவை எடுத்தான். அரசன் அவன் முடிவை மதித்து அவன் கேட்டவற்றை அவனுக்குக் கொடுத்து அனுப்புகிறான். ஒரு பெருங்கூட்ட யூதர்களோடு செருபாபேல் பல மைல்கள் தூரம் பிரயாணம் செய்து, புதர்களும் விஷஜந்துக்களுமாக பாழடைந்து கிடந்த எருசலேமுக்கு வந்து அதைத் தூய்மைப்படுத்தி, பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் உறுதியாக நின்று தேவாயலத்தைக் கட்டி முடிக்கிறான்.

இதே விஷயம்தான் மீண்டும் வேறு வடிவில் கடைசி காலத்தில் நடக்கப்போகிறது. வாழ்க்கை ஒரு வட்டம், முன்பு நிகழ்ந்த நிகழ்வுகள்தான் திரும்பத் திரும்ப இங்கு நடக்கும் (பிர 1:4-7) என்று ஏற்கனவே எழுதியிருந்தேன். பழைய ஏற்பாட்டில் மாம்சபிரகாரமான பாபிலோனிலிருந்து வெளியேறி, அவர்கள் கட்டியது மாம்சபிரகாரமான தேவாலயம், புதிய ஏற்பாட்டில் நாம் ஆவிக்குரிய பாபிலோனிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய தேவாலயத்தைக் கட்டிமுடிக்கப்போகிறோம்.

**இங்கு ஆவிக்குரிய தேவாலயம் என்பதன் அர்த்தம் என்ன? தெரிந்தெடுக்கப்பட்ட தேவஜனங்கள் teknon என்ற மாம்சபிரகாரமான குழந்தை நிலையிலிருந்து huios என்ற ஆவிக்குரிய வாலிபனாக வளர்வதுதான்.** அதாவது சிறுமியாக இருந்த மணவாட்டி warrior bride-ஆக வளர்ந்து நிற்பது. புதிய ஏற்பாட்டில் நாம்தான் தேவாலயம் அல்லவா?

ஆனால் அதற்கு முதலாவதாக தேவைப்படுவது ஒன்றே ஒன்றுதான். **பாபிலோனை விட்டு வெளியேறி, எருசலேமுக்கு வந்து தேவனுடைய ஆலயத்தைக் கட்டி முடிக்க வேண்டும் என்கிற**

**"வலுவான நோக்கமுள்ள", விபரம் புரிந்த ஒரு சிறுகூட்ட teknon-கள் எழும்புவதுதான். நீ**ங்களும் நானும் அந்தக் கூட்டத்தில் இருப்போமா?

இன்றைய கிறிஸ்தவம் என்ன நினைக்கிறது என்றால் எருசலேமில் தேவாலயத்தைக் கட்ட வேண்டியது யூதர்களுடைய வேலை. அவர்கள் அதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைச்சுற்றித்தான் இன்றைய உலக அரசியல் நகர்ந்துகொண்டிருக்கிறது. நமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. நம்முடைய வேலை புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவித்து அவர்களை சபையில் சேர்க்க வேண்டும் என்பதுதான். ஆனால் எருசலேமில் தேவாலயம் கட்டப்படுவதற்கும் நமக்கும் சம்பந்தம் உண்டு!

பௌதீக உலகில், எருசலேமில் தேவாலயக் கட்டிடத்தை யூதர்கள்தான் கட்ட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் ஆவிக்குரிய உலகில் பாபிலோனை விட்டு வெளியே வந்து, கிறிஸ்து எனும் மூலைக்கல்லின் மேல் ஆவிக்குரிய மாளிகையாக, சபையாக நாம் இணைத்துக் கட்டப்பட வேண்டும் (எபே 2:21,22, 1 பேதுரு 2:5). இப்பொழுதே சபை கட்டப்பட்டுக் கொண்டுதானே இருக்கிறது என்று கேட்பீர்கள்... சபையானது பாபிலோனில் அல்ல, ஆவிக்குரிய எருசலேமாகிய பரலோக ராஜ்ஜியம் எனும் அஸ்திபாரத்தில் கட்டப்பட வேண்டும். அதற்கு முதலாவது நாம் வெளி 18:4-இல் சொல்லப்பட்டதுபோல பாபிலோனை விட்டு வெளியேற வேண்டும்.

ஆவிக்குரிய மண்டலத்தில் தேவனுடைய ஆலயம் கட்டி முடிக்கப்படும்பொழுது நான் ஏற்கனவே இந்த தொடரில் குறிப்பிட்டதுபோல ஆவிக்குரிய உலகில் என்ன இருக்கிறதோ, அது பௌதீக உலகிலும் வெளிப்படும். அதாவது தேவபுத்திரர் (huios) எழும்பியபிறகுதான் எருசலேமில் தேவாலயம் கட்ட தடை நீங்கும். அதுவரை இப்போது அந்த இடத்தில் இருக்கும் மசூதியை யாராலும் அசைக்க முடியாது. சீயோனிசவாதிகள் செய்யும் எந்த அரசியலும் எடுபடாது. தேவபுத்திரர் எழும்பி, தேவாலயமும் கட்டப்பட்ட பிறகுதான் அந்திகிறிஸ்துவின் வருகையும் அதற்குப் பின்னான நிகழ்வுகளும் நடக்கும்.

இப்பொழுது உடனடித் தேவை பாபிலோனை விட்டு தேவஜனங்களை வெளியே அழைக்கும் குரல்கள் மட்டுமே! அந்தோ பரிதாபம்..இன்றைய கிறிஸ்தவம் அதைத் தவிர வேறு எல்லாவற்றைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் வெளிப்புறத் தூய்மையைப் பேசும் பரிசேயக் குரல்கள், மீண்டும் நியாயப்பிரமாணத்துக்குள் இழுக்கும் வேதபாரகரின் சத்தங்கள். இயேசுவுக்கு சீஷராக்கும் முயற்சிகளைவிட பூமியில் உள்ள ஒரு மத நிறுவனத்துக்கு அங்கத்தினரைச் சேர்க்கும் முயற்சிகள்தான் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பாபிலோனைக் குறித்தோ, உலகக் கட்டமைப்பின் பின்னால் உள்ள பில்லி சூனியத்தைக் குறித்தோ, அதை இயக்கும் ஆவிகள் குறித்தோ, அதிலிருந்து வெளியே வரும் கடைசிகால யுத்தம் குறித்தோ எந்த வெளிப்பாடுகளும், பிரசங்கங்களும் இல்லை.

**"பாபிலோனை விட்டு வெளியே வா!" என்று விசுவாசிகளை அழைக்கும் ஒரு சிறுகூட்ட teknon-கள் எழும்பினால் போதும். அவர்கள்தான் தலைக்கல்லைக் கொண்டுவருகிறவர்கள். அவர்கள்தான் இந்த கடைசிகால மாற்றத்தின் முதல் கனிகள்.** அந்த ஒரு சிறு கூட்டத்தை ஆவியானவர் எழுப்பியே தீருவார்!

## உலகம், மாம்சம், பிசாசு:

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மூன்று பிரதான எதிரிகள் உண்டு. அவை உலகம், மாம்சம், பிசாசு என்பவை. முதல் எதிரி பிசாசு ஏற்கனவே சிலுவையில் தோற்கடிக்கப்பட்டு விட்டான். இரண்டாவது எதிரி மாம்சம், அது ஏற்கனவே கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டாயிற்று, எழுத்தில் உள்ள அந்த வெற்றியை நாம் விசுவாசத்தின் மூலம் வாழ்வின் அனுபவமாக்க வேண்டும். மூன்றாவதாக உள்ள எதிரி உலகக் கட்டமைப்பு, அதிலிருந்தும் கர்த்தர் நம்மை விடுவித்துவிட்டதாக கலா 1:4 கூறுகிறது. எழுத்தில் உள்ள அந்த வெற்றியையும் நாம் விசுவாசத்தின் மூலம் வாழ்வின் அனுபவமாக்க வேண்டும். அதில் ஒரு பகுதிதான் பாபிலோனை விட்டு வெளியேறுவது.

இன்று சபைகளில் கொடுக்கப்படும் பிரசங்கங்கள் அனைதையும் கவனித்துப் பாருங்கள். அவை பெரும்பாலும் மாம்ச இச்சைகளை விட்டு விலகுவதையோ, அல்லது அதை ஜெயிப்பதையோ மையப்படுத்துவதாகவே இருக்கும். அதில் தவறில்லை, மாம்சமும் நம்மை ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறவிடாமல் தடுக்கும் முக்கிய எதிரிதான். ஆனால் சபை ஒன்றை முக்கியப்படுத்தி இன்னொன்றை முற்றிலும் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது. அதாவது மாம்சத்தை முக்கியப்படுத்தி, உலகத்தை விட்டுவிட்டது. இதற்குக் காரணம் முழுக்க முழுக்க அறியாமைதான். பாதிக்கிணறு தாண்டியவன் கிணற்றுக்குள்ளேதான் விழுவான் என்பது போன்ற கதைதான் இதுவும்.

இதில் இன்னொரு கொடுமையான விஷயம் என்னவென்றால் "உலகம்" என்பதை "பாபிலோனிய உலகக் கட்டமைப்பு" என்று புரிந்துகொள்ளாமல் "உலகம்" என்பதற்கும் "மாம்சம்" என்ற அர்த்தம் கொடுத்தே பலரும் பிரசங்கிக்கிறார்கள். அதாவது உலகத்தார் செய்யும் கேளிக்கைகளையும், களியாட்டங்களையும், நவநாகரீக ஃபேஷன் போன்ற விஷயங்களையும்தான் அவர்கள் "உலகம்" என்ற அர்த்தத்தில் புரிந்து வைத்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு ஒரு கிறிஸ்தவ வாலிபன் வித்தியாசமாக புள்ளிங்கோ ஸ்டைலில் சிகையலங்காரம் வைத்திருந்தால் அவனுக்கு "உலகத்துக்கு சிநேகிதன்" என்ற பட்டத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். உண்மையில் இவை அனைத்தும் மாம்சம் சம்பந்தப்பட்ட விஷயங்களே! உண்மையில் இன்று பலருக்கும் "உலகம்" என்று வேதம் எதைக் குறிப்பிடுகிறது என்ற அறிவே இல்லை.

உலகம் என்பது **"1. வணிகம் மற்றும் பொருளாதாரம், 2. மதம் மற்றும் ஆன்மீகம், 3. அரசாங்கம் மற்றும் அரசியல், 4. குடும்பக் கட்டமைப்பு மற்றும் கலாச்சாரம், 5. அறிவியல் மற்றும் கல்வி, 6. ஊடகங்கள் மற்றும் தொடர்பியல், 7. கலை மற்றும் பொழுதுபோக்கு"** ஆகிய ஏழு விஷயங்களையும் உள்ளடக்கிய பாபிலோனிய உலகக் கட்டமைப்பு ஆகும். இதை பாபிலோனின் ஏழு மலைகள் என்பார்கள். இந்த ஏழு மலைகளின் மீது அமர்ந்துதான் பாபிலோன் வேசி உலகை ஆட்சி செய்கிறாள். அதாவது மேற்கண்ட இந்த ஏழு விஷயங்களை பயன்படுத்தித்தான் மக்களை தனது சூனிய போதையில் ஆழ்த்தி வைத்திருக்கிறாள். ஆனால், பாபிலோனை விட்டு வெளியேறுவது என்பது இந்த ஏழு மலைகளை விட்டு வெளியேறுவதல்ல, பாபிலோன் வேசியின் சூனிய போதையை விட்டு வெளியேறுவது.

இந்த ஏழு மலைகளையும் ஆட்சி செய்யும் ஆவிகளை, கானான் தேசத்தில் இஸ்ரவேலர்கள் துரத்திவிட்ட ஏழு ஜாதிகளுக்கு ஒப்புமைப்படுத்தலாம். நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை உனக்கு முன்பாகத் துரத்தி, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறிய அடித்து, அவர்களைச் சங்காரம்பண்ணக்கடவாய் என்று உபா 7:1,2 வசனங்களில் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கட்டளையிடுகிறார்.

தேவனால் பிறப்பதெல்லாம் பாபிலோனை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே பாபிலோனை ஜெயிக்கும் ஜெயம் (1 யோவா 5:4)

தேவபுத்திரர்கள் எழும்பி, இந்த ஏழு மலைகளையும் ஆட்சி செய்யும் ஏழு கானானிய ஆவிகளையும் துரத்தி அந்த ஏழு மலைகளையும் முற்றிலுமாக சுதந்தரிக்கும்போது ஏசாயா 2:2 நிறைவேறும். "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்" ஆம், இதுதான் ஆயிர வருட அரசாட்சியின் துவக்கப்புள்ளி.

ஆனால் இதெல்லாம் நடப்பதற்கு முன்பாக சபை பாபிலோனிய போதையை விட்டு வெளியேற வேண்டும். பாபிலோன் குமாரத்தியினிடத்தில் குடியிருக்கிற சீயோனே, உன்னை விடுவித்துக்கொள். பிற்பாடு மகிமையுண்டாகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சக 2:7,8). பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்; கல்தேயரைவிட்டு ஓடிவாருங்கள்; கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபை மீட்டுக்கொண்டாரென்று சொல்லுங்கள்; இதைக் கெம்பீரசத்தமாய்க் கூறிப் பிரசித்தப்படுத்துங்கள், பூமியின் கடையாந்தரமட்டும் வெளிப்படுத்துங்கள்(ஏசா 48:20).

**பாபிலோனை விட்டு வெளியேறுதல் என்பது விசுவாசிகளின் பொதுமனதில்(collective mind) ஏற்படும் மாற்றமாகும்.** விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவரின் தனிமனங்களின் கூட்டமைப்பே சபையின் பொதுமனம் ஆகும். **நமது தனிமனங்கள் மறுரூபமடையும்பொழுது சபையின் பொதுமனமும் மறுரூபப்படும்.** அப்பொழுது சபை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது பாபிலோனின் செல்வம் சபையின் கைவசப்படும். அது பாபிலோனின் செல்வமல்ல, நம்மிடமிருந்து பாபிலோன் திருடிய செல்வம். அது சபைக்கு திரும்பக் கிடைக்கும்பொழுது சபை அதை உலகில் ஆசீர்வாதமான முறையில் பயன்படுத்தும். அப்பொழுது சபையின் அங்கமாக இருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் செழிப்பாவதுடன், சபைக்கு வெளியே இருக்கும் ஜனங்களும் பயனடைந்து, செழிப்படைவார்கள். உலகில் மேடு பள்ளங்கள் நீங்கி, சமநிலை நிலவும். இதுதான் உண்மையான செழிப்பு உபதேசம்!

ஆனால் இன்று பெரும்பாலான சபைகளில் உபதேசிக்கப்படும் செழிப்பு உபதேசமானது பணத்தை மையமாகக் கொண்டதும், தனிமனிதன் பணக்காரனாவதை முக்கியப்படுத்துவதுமாக இருப்பதால் இயற்கையாகவே அங்கு உபதேசத்தை ஒட்டிய விவாதங்களும், அதன் விளைவாக பிரிவினைகளும் ஏற்படுகின்றன. இது சபைக்கு ஆரோக்கியம் அல்ல. **மாற்றம் என்பது முதலாவதாக சபையின் பொதுமனதில் தொடங்கி பிறகு அதன் அங்கங்கள் அனைத்திலும் சீராக பிரதிபலிக்க வேண்டும்.** நம் உடலே அப்படித்தானே வடிவமைக்கப்பட்டிருக்கிறது!

ஆனால் இது எப்படித் தொடங்கும்? எப்படி சாத்தியமாகும்? அதைத்தான் இந்த கடைசிகால மாபெரும் நிகழ்வின் அடையாளமாக உருவகப்படுத்தப்படும் செருபாபேலிடம் கர்த்தர் சொல்லுகிறார்.

"செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்(சக 4:6)". நம் சொந்த பெலத்தால் இது சாத்தியமே அல்ல, ஆவியானவரே நம்மைக் கொண்டு இதைச் செய்து முடிப்பார்.

பாபிலோன் எனும் பெரிய பர்வதம் செருபாபேலுக்கு முன்பு சமபூமியாகும் என்று கர்த்தருடைய வார்த்தை உரைக்கிறது (சக 4:7). யார் இங்கு செருபாபேல்? ஒட்டுமொத்த சபையின் பயணத்தையும் அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்லப்போகும் அந்த சிறுகூட்ட teknon-கள். மற்ற பெருங்கூட்ட விசுவாசிகளெல்லாம் நிறுவனமயமாக்கப்பட்ட சபைகளின் மதச்சடங்காச்சாரங்களுக்குள் உழன்று கொண்டிருக்க, ஆவிக்குரிய கண்கொண்டு, ஆவிக்குரியவைகளைப் பார்த்து, சரியான திசையைக் கண்டுபிடித்து அதில் பயணிக்க முடிவெடுக்கும் பிதாவின் குழந்தைகள்! எல்லா போர்வீரர்களும் கையால் மொண்டு தண்ணீரைக் குடிக்க, தண்ணீரை நாவால் நக்கிக் குடித்த அந்த 300 பேர் கொண்ட சிறு கூட்டத்தைப்போல கும்பலுக்கு எதிர்திசையில் பயணிக்கும் சில தெரிந்தெடுக்கப்பட்ட தேவபிள்ளைகள். ஆம் இந்த சிறு கூட்ட teknon-கள்தான் கடைசிகால செருபாபேல்.

இவர்கள்தான் தலைக்கல்லைக் கொண்டுவருகிறவர்கள் (சக 4:7). தலைக்கல் என்பது கட்டிடத்தை முடித்து, அதன் நுழைவாயிலில் வைக்கப்படும் கடைசிக் கல்லாகும். மூலைக்கல் என்பது கட்டிடப் பணியை ஆரம்பிக்கும்போது வைக்கப்படும் முதல் கல். அதின்மீதுதான் அஸ்திபாரம் எழுப்பப்படும். மூலைக்கல்லும் தலைக்கல்லும் ஒன்றல்ல, இரண்டும் வெவ்வேறு. அவன் மூலைக்கல்லைக் கொண்டுவருவான் என்று கர்த்தர் சொல்லாமல், தலைக்கல்லைக் கொண்டுவருவான் என்கிறார். அதன் பொருள் என்ன? இவர்களை வைத்துத்தான் தேவன் பாபிலோனை அழித்து முடிக்கப்போகிறார், தேவாலயத்தைக் கட்டித் தீர்க்கப்போகிறார். "செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம்போட்டது; அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும்; அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய் என்று சகரியா 4:9 சொல்லுகிறது. ஆம், ஓப்பனிங் பேட்ஸ்மேனும் செருபாபேல்தான், கடைசியில் வின்னிங் ஷாட் அடிக்கப்போவதும் செருபாபேல்தான்.

**இந்த சிறுகூட்ட teknon-கள்தான் கடைசிகால முதல் தலைமுறை huios-கள்.** எத்தனை பெரிய பாக்கியம் இது! இந்த முதல் கனிகளைப் பின்பற்றித்தான் உலகத்தை தலைகீழாக திருப்பப்போகிற ஒரு பெருங்கூட்ட huios-கள் எழும்பப்போகிறார்கள்.

இதை எழுதிக்கொண்டிருக்கும்பொழுதே என மனதில் ஒரு கற்பனை ஓடுகிறது. முதல் நூற்றாண்டில் ஒரே ஒரு இயேசுவையே சமாளிக்க முடியாமல் சாத்தானின் படைகள் திணறின. கடைசி நாட்களில் இயேசுவைப்போன்றே ஒரு பெருங்கூட்ட huios-கள் எழும்பி வானராக்கினிக்கு எதிராக நிற்பார்கள்.

அப்பொழுது பரலோகத்திலிருந்து பிதாவின் இடிமுழக்கக் குரல் ஒலிக்கும். அவர் வானராக்கினியை நோக்கி: பாபிலோன் குமாரத்தியே! நீ அந்தகாரத்துக்குள் பிரவேசித்து மவுனமாய் உட்காரு; இனி நீ ராஜ்யங்களின் நாயகியென்று அழைக்கப்படுவதில்லை.. நீ உன் சிறுவயதுமுதல் பிரயாசப்பட்டுப் பழகிவருகிற உன் ஸ்தம்பன வித்தைகளையும், உன் திரளான சூனியங்களையும் இப்பொழுது அநுசரித்து நில்; அவைகளால் உனக்குப் பிரயோஜனம் உண்டோ, பலன் உண்டோ, பார்ப்போம்!(ஏசா 47:5,12)

வானராக்கினியின் ஆவிக்கு எப்பேற்பட்ட சவால் இது! அந்த நாளோடு அவள் கதை முடிந்துபோகும்.  அப்படியொரு நாள் வரத்தான் போகிறது. அந்த நாளைக் காண நீங்கள் ஆவலாய் இருக்கிறீர்களா?

நீங்கள் யாராக இருந்தாலும் சரி, உங்கள் எண்ணமும், பேச்சும், பிரசங்கமும் பாபிலோன் கட்டமைப்பை விட்டு வெளியேறவேண்டும், கானானின் மலைகளை சுதந்தரிக்க வேண்டும், அம்மலைகளின் கொடுமுடியில் கர்த்தருடைய ஆலயத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதாக இருக்குமானால் அந்த தூக்குநூலை பூமியெங்கும் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் சந்தோஷமாகப் பார்க்கிறது. இது அற்பமான ஆரம்பத்தின் நாட்களாக இருக்கலாம், ஆனால் இந்த அற்பமான ஆரம்பம்தான் சம்பூரணமான முடிவைக் கொண்டுவரப்போகிறது.

மதவாதிகள் தந்த தூக்குநூல்களை தூரத்தில் எறிந்துவிட்டு, ஆவியானவர் தரும் இந்த செருபாபேலின் தூக்குநூலை கையில் பிடியுங்கள். உங்கள் வாழ்க்கையும் ஊழியமும் முற்றிலுமாக மாறிப்போகும்!

## அத்தியாயம் 13: நிலையான செழிப்பு

இந்த தொடரின் ஆரம்ப அத்தியாயங்களில் நான் குறிப்பிட்டதுபோல நாம் பாபிலோனுக்கு உள்ளும் செழிப்பாக இருக்க வேண்டும், வெளியேயும் செழிப்பாக இருக்க வேண்டும்.

பாபிலோனுக்குள் செழிப்பாக இருப்பதைத்தான் இன்றைய பணவளக்கலை நிபுணர்கள் அனைவரும் கற்றுத்தருகிறார்கள். ஒரு பள்ளத்தாக்கு இயற்கையாக தண்ணீரால் நிரம்ப வேண்டுமெனால் அங்கு காற்றடித்து மழை பெய்ய வேண்டும்; அதுதான் நியதி. ஆனால் பாபிலோனுக்கு வெளியே என்பது "நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் (2 இராஜா 3:17) என்ற அற்புத வாழ்க்கை முறை ஆகும். இது முழுக்க முழுக்க கர்த்தரை சார்ந்து, அவரை விசுவாசித்து வாழும் வாழ்க்கை.

**இந்த வாழ்க்கை முறையில் நீங்கள் ஆவியானவரால் பயிற்றுவிக்கப்பட்டால் மட்டுமே பாபிலோனிய சூனியக்கட்டுக்குள் இருக்கும் மக்களுக்கே உரிய இயல்பான பயங்கள் உங்களை விட்டு நீங்கும்.** அப்பொழுதுதான் உங்களுக்கு பாபிலோனைவிட்டு வெளியே வரவேண்டும் என்ற

விருப்பமும், துணிச்சலும் வரும். ஆனால், இந்தப் பயிற்ச்சியை உங்களுக்கு எந்த சபையும், எந்த பாஸ்டரும், எந்த வேதாகமக் கல்லூரியும் கொடுக்க முடியாது. ஆவியானவர் மட்டுமே தர இயலும்.

பாபிலோனை விட்டு வெளியேறுவது என்பது மனதில் ஏற்படும் ஒரு மாற்றம் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அப்படி ஒரு மனிதன் மனதில் மறுரூபமாகும்போது பாபிலோனின் matrix-க்குள் சிக்கிய ஒரு பொம்மலாட்ட பொம்மைபோல அவன் செயல்பட மாட்டான். அவன் சிந்தனையும், செயல்பாடுகளும், வாழ்க்கை முறையும் வித்தியாசமாக இருக்கும். அந்த விநோத வாழ்க்கைமுறை சமுதாயத்தையும் பாதிக்கும். ஒரு மாபெரும் மாற்றத்துக்கான சிறு தொடக்கம் அதுதான். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைமுறையை நமக்குக் கற்றுக்கொடுக்கவும், பயிற்றுவிக்கவும், நமது மனதை மறுரூபப்படுத்தவும் ஆவியானவர் எப்போதும் ஆயத்தமாகவே இருக்கிறார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு நான் என்னுடைய வேலையை இழக்க நேரிட்டது. அந்த நாளிலிருந்து இந்த புத்தகத்தை எழுதும் இந்த 2022 வரை நான் கடந்து வந்த பாதை மிகமிக வித்தியாசமானது. கற்றுக்கொண்ட பாடங்கள் எந்த வேதாகமப் பல்கலைக்கழகத்தாலும் கற்றுக்கொடுக்கப்பட முடியாதவை. அந்த அனுபவங்களில் சிலவற்றை என்னுடைய **"வாத்தியார்"** எனும் மின்புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். என்னுடைய www.brovijay.com என்ற இணையதளத்திலிருந்து நீங்கள் அதை இலவசமாக பதிவிறக்கம் செய்து வாசிக்கலாம்.

உண்மையில் நாம் ஒரு வேலையின் மூலமாகவோ அல்லது வியாபாரத்தின் மூலமாகவோ வரும் சம்பாத்தியத்தை சார்ந்திருக்கும் வரை இந்த பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிற உணர்வே இருக்காது. அவ்வளவு ஏன், பாபிலோனுக்கு வெளியே ஒரு வாழ்க்கை இருக்கிறது என்ற அறிவுகூட இருக்காது. அதற்காக நீங்கள் வேலையை இழக்க வேண்டும் என்றோ, அல்லது செய்யும் வேலையை ராஜினாமா விட்டுவிட்டு விசுவாசத்தில் குதிக்க வேண்டுமென்றோ நான் சொல்லவரவில்லை. தயவுசெய்து யாரும் அப்படிப்பட்ட தேவையற்ற ரிஸ்கை எடுக்காதீர்கள்.

நீங்கள் ஒரு கோடீஸ்வரராக இருந்தால்கூட "நீங்கள் விரும்பினால், அனுமதித்தால்" ஆவியானவரால் இந்தப் பாடத்தை உங்களுக்குக் கற்றுத்தர முடியும். அதற்காக நீங்கள் உங்கள் வேலையை இழக்கவோ, அல்லது ஆதிச்சபையினர் போல உங்கள் சொத்துக்களை விற்றுவிட்டு வரவேண்டியதோ இல்லை. அவர் உங்களுக்கு எப்படிக் கற்றுக்கொடுப்பார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவரால் கற்றுக்கொடுக்க முடியும் என்பது மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் வாஞ்சையுள்ள ஜெபம் மாத்திரமே!

தாவீது திடீரென்று கோலியாத்தை சந்தித்துவிடவில்லை, அவன் அதற்கு முன்பாக ஒரு கரடியை ஜெயித்தான், பின்னர் ஒரு சிங்கத்தை ஜெயித்தான் அதற்குப் பின்னால்தான் தேவன் அவனை கோலியாத் முன்பாக நிறுத்தினார். ஆவியானவர் தரும் பயிற்சியில் நீங்கள் முதலாவது பாபிலோனிய கரடிகளையும், பாபிலோனிய சிங்கங்களையும் மேற்கொள்ள பழக்குவிக்கப்படுவீர்கள். இந்த உலகக் கட்டமைப்பு இந்த பூமியில் ஒரு மனிதன் வாழ என்னென்ன ஆதாரங்களையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறதோ அவைகள் எதையுமே சார்ந்துகொள்ளாமல், தேவனுடைய வார்த்தையை மட்டும் சார்ந்து வாழும் ஒரு வித்தியாசமான வாழ்க்கை முறையை நீங்கள் கற்றுக்கொள்வீர்கள். முடிவில் "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று

எழுதியிருக்கிறதே (லூக் 4:4)" என்று கிறிஸ்துவைப் போல உங்களால் அனுபவபூர்வமாக சொல்ல முடியும்.

இது கடினமான பாதை என்றாலும் இனிமையான பாதையும்கூட. **ஒவ்வொரு பாடங்களின் முடிவிலும் இந்த உலகின் நம்பர்-1 பணக்காரனுக்குக்கூட இல்லாத ஒரு அசாத்திய தைரியம் உங்களுக்குள் பெருகிக்கொண்டே வருவதைக் காண்பீர்கள்.** நீங்கள் பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், எந்த வயதினராக இருந்தாலும் அதற்கேற்றவிதத்தில் ஆவியானவரால் உங்களைப் பயிற்றுவிக்கமுடியும். அவரை நம்பி அவரது கரத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

இதன் முடிவில் நீங்கள் பாபிலோனுக்குள்ளும், பாபிலோனுக்கு வெளியேயும் அபரிமிதமான செழிப்பைப் பெற்ற ஆளாக நீங்கள் நிச்சயம் வளர்வீர்கள். இது ஆரம்பம்தான், இந்தப் பயணம் தொடரத் தொடர இந்த நூலின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைகள் உங்களுக்குக் கிடைக்கத் துவங்கும்.

நான் சொல்வது ஒருவேளை ஒரு fantasy story போல இருக்கலாம். நாமும்கூட teknon என்ற நிலையில் இருந்து huios என்ற நிலைக்கு வளரலாம். ஆனால் அந்த வளர்ச்சியிலும் பல்வேறு படிநிலைகள் உள்ளன. முழு வளர்ச்சியடைந்த huios என்பவன் சாதாரண மனிதனல்ல, அவன் ஒரு சூப்பர் மேன். அவன் கிறிஸ்துவுக்கு ஒப்பான பூரண வளர்ச்சி பெற்றவன். கிறிஸ்துவால் எதையெல்லாம் செய்ய முடிந்ததோ அதையெல்லாம் இவனாலும் செய்ய முடியும். **இந்த உலகம் எதையெல்லாம் உபகரணங்களைக் கொண்டு சாதிக்கிறதோ அதையெல்லாம் in-build ஆகவே தனது மறுரூபமாக்கப்பட்ட சரீரத்துக்குள்ளாகப் பெற்றவன்.** பாபிலோன் தரும் எந்த உபகரணமும் அவனுக்குத் தேவைப்படாது. **பாபிலோனின் எந்த உபகரணத்தையும் பயன்படுத்தாமல் சுகபோகமாக வாழக்கூடிய ஒரு வாழ்க்கைதான் உண்மையிலேயே வளர்ச்சியடைந்த, சுதந்திரமான வாழ்க்கை!** இந்த முழு வளர்ச்சியடைந்த தேவபுத்திரரை உலகம் எப்போது சந்திக்குமோ தெரியாது. ஆனால் நிச்சயம் சந்திக்கும் என்பது மட்டும் உண்மை. அந்த நீண்ட பயணத்தின் முதல் அடியைத்தான் இப்போது எடுத்து வைத்திருக்கிறோம்.

இந்த புத்தகத்தின் மூலம் நான் உங்களை ஒரு சபைப் பிரிவுக்குக்கோ, ஒரு உபதேசத்துக்கோ, ஒரு நிறுவனத்துக்கோ, அல்லது ஒரு ஆன்மீக வகுப்புக்கோ இழுக்கவில்லை. ஒரு புதிய பயணத்தைத் தொடங்குபடி உங்கள் கையைப் பிடித்து அதை ஆவியானவரின் கைகளில் கொடுத்திருக்கிறேன். இனி அவர் பொறுப்பெடுத்துக்கொள்வார். இதை மட்டும்தான் எந்த ஊழியனும் செய்ய வேண்டும். கர்த்தருடைய ஆவியானவர்தாமே இந்த புத்தகத்தை வாசித்த உங்கள் ஒவ்வொருவரையும் செருபாபேலாக, huios-ஆக வளர்த்தெடுப்பாராக! ஆமென்.

**விஜய்குமார் ஜெயராஜ்**
**www.brovijay.com**